வெளியீடு: 21-3-2007

Issued: 21-3-2007

770
CA10H07
6
CA10H07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 1, 2006—தொகுதி 16—எண் 2

Friday the 1st September, 2006—Volume 16—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

P
V2,4,2006
Pol 16 2
227436

[Price Rs. 3.00

## 1-9-2006

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 305-325

**2. விதி 110-ன் கீழ் அறிக்கைகள்—**

(அ) ஓய்வூதியம் பெறுவோர்க்கு ஒரே சீராகப் பணப்பயன்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 325-326

(ஆ) சத்துணவு மைய மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊதிய விகித நிர்ணயம்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 327-328

**3. அறிவிப்புகள்—**

(அ) மானியக் கோரிக்கைகள் மீதான கடைசி நாள்—விவாதத்தை பிற்பகல் 1-30 மணிக்கு முடித்தல் 328

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) 472

(இ) உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் அளிக்கும் விருந்திற்குச் செல்லப் பேருந்து வசதி 475-476

**4. தகவல் கோரல்—**

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் மின்சார வாரியத்தின் இழப்புகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் 328-330

| | பக்கங்கள் |
|---|---|
| **4. தகவல் கோரல்**—தொடர்ச்சி | |
| (ஆ) சென்னை, தண்டையார்பேட்டையில் துணை மின் நிலையம் அமைத்தல் | 330-331 |
| (இ) சேலம், தனியார் சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்--சுமுகத் தீர்வுக்கு நடவடிக்கை | 332-385 |
| **5. சத்துணவு மைய மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு--பாராட்டும், நன்றியும்** | 332,335-338 |
| **6. அறிக்கை அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு | 338 |
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 338-339 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2006 | 472-473 |
| **8. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும், வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்<br>(ஆ) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை<br>(இ) கோரிக்கை எண் 16—நிதித் துறை<br>(ஈ) கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை<br>(உ) கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 339-472 |





| | பக்கங்கள் |
|---|---|
| **8. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| • மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 339-340,348, 353, 362,375,386, 387,405,443-453 |
| • முனைவர் மு. தம்பிதுரை | 375-385,387,388 |
| • திரு. செ. குருசாமி | 388-394 |
| • முனைவர் கு. ஜெயக்குமார் | 394-396,397-399, 400-401,402,403, 404, 406-408 |
| திரு. ஜி.கே. மணி | 408-417,420-421, 422-423 |
| திரு. வே. மாரிமுத்து | 424-428 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 428-435 |
| • திருமதி இரா. இராணி | 435,436, 437-440 |
| **9. அரசினர் தீர்மானம்—** | |
| விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல் | 473 |
| **10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—** | |
| தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2006 | 474-475 |
| • மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 474-475 |
| **11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 476-477 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### ஆவணி 16, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037
### 2006 செப்டம்பர் 1, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்"

நேர்மையும், நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால், அவரது சொல்லில் நீதியும், நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**131—**

### பேருந்து வசதி

***632—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி தொகுதி, ஆலங்குளம், வலையப்பட்டி, அப்பையநாயக்கன்பட்டி வழியாக ராஜபாளையம், திருவேங்கடம் வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, ஆலங்குளம், வலையப்பட்டி, அப்பையநாயக்கன்பட்டி வழியாக ராஜபாளையம், திருவேங்கடம் வழித்தடம் 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக அதாவது, 33½ கிலோ மீட்டர் இருப்பதால், இதுவரை அங்கு நகரப் பேருந்து இயக்க முடியாத ஒரு நிலை இருந்தது. ஆயினும், 9-8-2006 அன்று மானியக் கோரிக்கையின்போது, நகரப் பேருந்தின் தூரம் 30 கிலோ மீட்டரிலிருந்து 35 கிலோ மீட்டர் என நீட்டித்து இயக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில், புதிய ஆணைகள் வெளியிடப்பட்ட பின், கோரிக்கை வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால், இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகின்றேன். முன்பு முன்னாள் முதல்வர் அவர்களுடைய பயன்பாட்டிற்காக Cessna என்ற விமானம் வாங்கப்பட்டது. பிறகு அதை விற்பதற்குக் கழக ஆட்சியிலே முயற்சி செய்யப்பட்டது. தற்போது அந்த விமானத்தின் நிலை என்ன? ஏறக்குறைய 20 கோடி ரூபாய் செலவிலே வாங்கப்பட்ட அந்த விமானம் பயன்பாட்டில் இருக்கிறதா அல்லது விற்கப்பட்டு விட்டதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பொதுத் துறையின்கீழ் இயங்குகிறது. அதைப் பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் உங்களுக்குத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. [illegible] வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்ச[illegible]

227426





**132—**

## சார்பு நீதிமன்றம்

**•2003—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், அரூரை மையமாகக் கொண்டு சார்பு நீதிமன்றம் ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூரை மையமாகக் கொண்டு சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கே ஒரே ஒரு Sub-court-தான் உள்ளது. 5 தாலுகாக்கள் உள்ளன. அரூர் பாப்பிரெட்டிப்பட்டி, ஊத்தங்கரை, இந்த 3 வட்டங்களில் 20, 40 ஆண்டு காலமாகச் செயல்படக்கூடிய J.M. Court-களை உள்ளடக்கி, அரூரிலே ஒரு Sub-court-ஐக் கொண்டு வருவதற்கான அத்தனை பணிகளும் தொடங்கப்பட்டதாக அறிகிறேன். தருமபுரி மாவட்டத்தினுடைய மரியாதைக்குரிய நீதிபதி, C.J.M. அவர்களும் அறிக்கை ஒன்றை, இங்கே சென்னை, உயர் நீதிமன்ற நீதியரசர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஏறக்குறைய 120 கிலோ மீட்டர் தூரம் சுற்றளவிலுள்ள பல மக்களிடமிருந்து வருகின்ற வழக்குகள் அத்தனையும், தருமபுரியில் நடைபெறுகின்ற வழக்குகள் சரி பாதிக்கு மேல் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து, அரூரில் 10 ஆண்டு காலமாக இருக்கின்ற அந்த மக்களுடைய கோரிக்கையான J.M. Court-ஐ, Sub-court-ஐக் கொண்டு வருவதற்கு அறிவிப்பைச் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்குக் குறைந்தபட்சம்

அங்கே 250 வழக்குகளும், அதுவும் appeal வழக்குகள் 200 வழக்குகளும், ஆக 450 வழக்குகள் இருக்க வேண்டும். அங்கே வழக்குகள் போதுமானவையாக இல்லை என்று எனக்கு இங்கே வழங்கப்பட்டிருக்கின்ற குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு போதுமான அளவு வழக்குகள் நிலுவையிலே இருந்தால், நிச்சயமாக அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

(முற்பகல் 9–35

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் நடைபெறுகின்ற வழக்குகளில், குறைந்தது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கும் மாறாக, 307 வழக்குகள் என்பது, அங்கே அரூர், பாப்பிரெட்டிப்பட்டியை உள்ளடக்கிய வழக்குகள் தருமபுரி sub-court–லே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய, ஒரு வருடத்தில் நடக்கின்ற 1,300 வழக்குகளில் சரி பாதிக்கு மேல், அந்த இரண்டு வட்டங்களை உள்ளடக்கியவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த வருடமே அதற்கான பணிகளைத் தொடங்குவதற்காக இருக்கின்ற அம்சத்தில், நிதியை மட்டும் ஒதுக்கீடு செய்தால், அத்தனை பணிகளும் தொடங்கும் என்று அறிவித்திருப்பதையும் மீண்டும் நினைவுபடுத்தி, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்குகளுடைய எண்ணிக்கையைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார்; அது மொத்தமாக இருக்கலாம். உரிமையியல் வழக்குகள் 250 இருக்க வேண்டும்; மேல்முறையீடு 200 இருக்க வேண்டும் என்பதை ஒரு அளவுகோலாக வைத்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, தூரம் அதிகமாக இருக்கிறது; வட்டங்கள் அதிகமாக இருக்கின்றன; அந்தப் பகுதியின் சுற்றளவு அதிகமாக இருப்பதால், அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவ்வாறு இருப்பின், நிச்சயமாக அதைத் தனிப் பிரேரணையாக அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.





**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளதால், அங்கு இயங்கிக்கொண்டிருக்கும், Judicial Magistrate-I, Judicial Magistrate-II, இவற்றில் Judicial Magistrate-I அல்லது II-ல் உள்ள Judicial Magistrate-ஐ, ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு மாற்றம், அதாவது, shift செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, அவ்வாறு மாற்றம் செய்யும் எண்ணம் தற்போது அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**133—**

## தங்கும் விடுதி

**•930—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்தூர் தொட்டிப் பாலம் வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்தூர் தொட்டிப் பாலம் வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருதல் குறித்துத் தற்போது சுற்றுலாத் துறையில் திட்டம் எதுவுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கொடுமுடி என்பது, மும்மூர்த்திகள் இருக்கிற திருத்தலம். அதுவும், சேலம் மற்றும் தருமபுரி

மாவட்டங்களிலேயிருந்து, அங்கே வந்து, காவிரி ஆற்றிலேயிருந்து தீர்த்தத்தை எடுத்து பழனிக்குச் செல்கிற பக்தர்கள் அதிகம். மிகப் பெரிய அளவிலே அங்கே பக்த கோடிகளும், பொது மக்களும், சுற்றுலாப் பயணிகளும் தரிசனத்திற்கு வருகின்ற அந்தத் தலத்தை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர், அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில் கேட்டிருப்பதால், அங்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாக இருந்தால், நிச்சயமாக அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 134 மற்றும் 135, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து வினா எண் 136, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**136—**

**கம்பிவடப் பாதை**

***692—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குக் கம்பிவடப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நடந்து செல்ல படிவழிப் பாதைகள் ஏற்கெனவே இரண்டு இருக்கின்றன. அவை தவிர வாகனங்கள் சென்று வர மலைவழிச் சாலை ஒன்றும் உள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்குப் பக்தர்கள் சென்று திரும்புவதற்கு கூடுதலாக கம்பிவடப் பாதை அமைக்க அவசியம் இல்லை என்று இத்துறை கருதுகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வடக்கு எல்லையிலே அமைந்திருக்கின்ற திருத்தணி, அறுபடை வீடுகளிலே மிகவும் புகழ் வாய்ந்த கோயில். இன்றைக்குச் சரியாக 38 ஆண்டுகள்—31-8-1968 அன்று நம்முடைய முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் திருத்தணி மலைக்குச் செல்கின்ற பாதையினைத் திறந்து வைத்தார்கள். இன்றைக்கு 38 ஆண்டுகள் ஆகின்றன. ஆடிக் கிருத்திகை போன்ற நாட்களிலே அங்கே பக்தர்கள் அதிகம் கூடுகின்றார்கள். அப்படிக் கூடுகின்ற நேரத்திலே, இருக்கின்ற பாதைகள் போதாமல் இருக்கின்ற காரணத்தால், அந்த மலைக்குப் பின்புறமாக இரண்டாவது பாதை உருவாக்கப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 40 சதவிதப் பணிகள் முடிந்துவிட்டிருக்கின்றன. மீதிப் பணிகளை முடிப்பதற்கு வன இலாகாவினுடைய அனுமதி தேவை என்ற காரணத்தால் நடங்கல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, வன இலாகாவைத் துரிதப்படுத்தி, வனத் துறையினுடைய அனுமதியை அரசு பெறுமா? திருப்பதி திருக்கோயிலிலே ஏழு மலைகளையும் அங்கு இருக்கின்ற Forest Department—வனத் துறை அந்தக் கோயிலுக்கு அப்படியே கொடுத்துவிட்டிருக்கின்றது. எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் முழுமையாக ஒப்படைத்திருக்கிறது. அந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றி, நம்முடைய திருத்தணி மலையினை வனத் துறை முழுமையாக அறநிலையத் துறையிடம் ஒப்படைக்குமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அந்த இரண்டாவது பாதை எப்போது முடிவடையும் என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இரண்டாவது மலைவழிப் பாதையில் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தப் பணியில் இடையிலே சற்றுத் தேக்கம் ஏற்பட்டுக்கொண்டிருந்தாலும்கூட, மீண்டும் முழு வீச்சிலே நடைபெற்று, அது முடிவடைவதற்கான அத்தனை வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடு) சொல்லுங்கள், இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** திருத்தணி திருக்கோயிலிலே பக்தர்களுக்கு இன்னொரு வேண்டுகோள் உள்ளது. அங்கே இராஜ கோபுரம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வெகு நாட்களாக இருக்கின்றது. அந்த இராஜ கோபுரத் திருப்பணி எப்போது நடைபெறும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** இருந்தாலும்கூட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய டாக்டர் இராமன் அவர்கள் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில்மீது கொண்டிருக்கக்கூடிய ஆர்வத்தின் காரணமாக பதில் சொல்கிறேன். அந்தப் பகுதிக்கு, அந்தத் திருத்தலத்திற்கு ஒரு இராஜ கோபுரம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார். அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாய் செலவிலே புதிய இராஜ கோபுரம் ஒன்றை அமைப்பதற்குத் துறை, அந்த ஆயத்தப் பணிகளிலே ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருச்செங்கோடு தொகுதியில் பிரசித்தி பெற்ற அர்த்தநாரீஸ்வரர் கோயில் உள்ளது. அந்தக் கோயிலிலே வருடிக்கல் என்ற ஒரு இடம் உள்ளது. குழந்தை இல்லாத தாய்மார்கள் எல்லாம் அதைச் சுற்றினால் குழந்தை கிடைக்கும் என்ற ஐதீகத்தின்பேரால் அதைச் சுற்றி வருகிறார்கள். அதற்கு நடக்கின்ற பாதை இரண்டு அடி அகலத்தில் இருக்கின்ற காரணத்தினால், விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. அது மட்டுமல்லாமல், அந்த ஐதீகத்தையே மாற்றுகின்ற அளவிற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கம்பிவடப் பாதைதான் கேள்வி.

**திரு. பி. தங்கமணி:** கம்பி வேலி அல்லது தடுப்புச் சுவர் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி கம்பிவடப் பாதை அமைப்பது பற்றியது.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், நல்ல விரிவான பதிலைச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 137. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**137—**

## தரம் உயர்த்துதல்

**•433—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக் கல்வி, நாள் 30-6-2006-ல் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வரவேற்கிறேன். அதோடு, பொன்னேரி தொகுதியில் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். ஆகப் பள்ளிகளையே முழுமையாக மக்கள் நம்பியிருக்கின்ற காரணத்தால், தற்போது தரம் உயர்த்தி இருக்கின்ற பாடியநல்லூர் மேல்நிலைப் பள்ளியில் போதிய ஆசிரியர்களும், போதிய அளவிற்குக் கட்டட

வசதியும் இல்லாத காரணத்தினாலும், ஆரணியில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஜெகநாதபுரம், சின்னம்பேடு ஆகிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த வேண்டும்; ஏனென்றால், 15 கிலோ மீட்டர் சென்று பள்ளி மாணவர்கள் படிக்கின்ற சூழ்நிலை இருப்பதால், அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏழை எளியவர்கள் இருக்கின்ற காரணத்தால், இந்த மாணவர்கள் படிப்பதற்கேற்றவாறு சின்னம்பேடு நடுநிலைப் பள்ளி மற்றும் ஜெகநாதபுரம் நடுநிலைப் பள்ளி ஆகியவற்றைத் தரமுயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்தப் பாடியநல்லூர் பள்ளியிலே 1,766 மாணவர்கள் இப்போது கல்வி பயில்கின்றனர். ஆசிரியர்கள் விவரத்தைப் பொறுத்தமட்டிலே, தலைமையாசிரியர் ஒருவரும், முதுகலை ஆசிரியர்கள் 5 பேரும், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல் ஆகியவற்றுக்கும், பட்டதாரி ஆசிரியர்கள் 5 பேர், தமிழ் ஆசிரியர் 3 பேர், இடைநிலை ஆசிரியர் 16 பேர், உடற்கல்வி ஆசிரியர் ஒருவர், அதற்கு மேலும் பெற்றோர்--ஆசிரியர் சங்கம்மூலமாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய ஆசிரியர்கள் மூன்று பேர், ஆக இத்தனை ஆசிரியர்கள் அங்கே தற்போது இருக்கிறார்கள்.

கட்டட வசதியைப் பொறுத்தமட்டிலே, Asbestos Sheet என்று சொல்லக்கூடிய அந்த Cement ஓடுடைய அந்தக் கட்டடம் 11 வகுப்பறைகளைக் கொண்டதாகவும், Concrete Building 18 வகுப்பறைகள் கொண்டதாக, NABARD மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய 4 வகுப்பறைகளை உள்ளடக்கி இப்போது அமைந்திருக்கிறது. அந்த இடத்திலே கூடுதலான இட வசதிகளும் இருக்கின்றன. எனவே, கட்டட வசதிகளைப் பொறுத்தமட்டிலும, நிச்சயமாக அவர்களுக்கு இன்னும் தேவைப்பட்டால், NABARD மூலமாகவோ அல்லது அனைவருக்கும் கலவி இயக்கத்தின்மூலமாகவோ, மற்ற திட்டங்கள்மூலமாகவோ அரசு நிச்சயமாக வருங்காலங்களில் பரிசீலித்து நிறைவேற்ற முடியும்.

ஆசிரியர்கள் இப்போது போதுமான அளவிலே இருக்கிறார்கள். தேவைப்படின், கூடுதலான ஆசிரியர்கள் தேவையானால், நம்முடைய



றுப்பினரோடு கலந்துகொண்டு, ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யும். அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய மற்ற பள்ளிகள், ஜெகநாதபுரம் பள்ளியாக இருந்தாலும், சின்னம்பேடு பள்ளியாக இருந்தாலும், ஆரணி பள்ளியாக இருந்தாலும், அவற்றுக்கு முறையான முன்மொழிவுகள், சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து அரசுக்கு வருமானால், அவற்றை வருங்காலங்களிலே தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினா திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் 'சர்வ சிக்ஷா அபியான்'—'அனைவருக்கும் கல்வித் திட்டத்தில்' பள்ளிக்கூடங்களிலே கல்வி முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடு, பணம் கட்டாமல் அதிக மாணவர்கள் இருக்கின்ற பகுதியிலே அந்தப் பள்ளிகளையும் இருக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், தரம் உயர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சர்வ சிக்ஷா அபியான்' என்ற திட்டத்தின்கீழே இப்போது தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் வரை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய அந்தச் சூழ்நிலை வருகிறபோது, அதற்கு முறையான முன்மொழிவுகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், மன்மங்கலம அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முனவருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தமட்டிலே, அங்கே அரசு வைத்திருக்கக்கூடிய நிபந்தனைக்குட்பட்டு முன்மொழிவுகள் அரசுக்கு வந்திருக்கின்றனவா என்று நானும், துறை அதிகாரிகளிடத்திலே கலந்து ஆய்வு செய்கிறேன்.

அப்படி அவை பெறப்பட்டிருக்கும் என்று சொன்னால், வரக்கூடிய கல்வியாண்டிலே தரம் உயர்த்தக்கூடிய பள்ளிகளிலே ஒன்றாக அந்தப் பள்ளியையும் பரிசீலனை செய்வதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**138—**

## சொந்தக் கட்டடம்

***842—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் வணிக வரித் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் நகரில் இரு வணிக வரி அலுவலகங்கள் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ராஜபாளையத்தில் வணிக வரித் துறைக்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான அரசுக்குரிய இடம் தெரிவு செய்யும்பொருட்டு, சிவகாசி, வணிக வரித் துறை உதவி ஆணையர் அவர்களுக்கு வணிக வரி ஆணையரால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சிவகாசி, உதவி ஆணையர் (வணிக வரி) மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களின் அறிக்கை பெறப்பட்டு, அரசின் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராஜபாளையம் நகரில் வணிக வரித் துறை அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருவதால், மிகவும் விரைவில் இடம் பார்க்கவும், அப்படி இடம் தேவையென்று சொன்னால், தாலுகா அலுவலகம் அருகிலும் இடம் இருக்கிறது; அதேபோல, ஜவஹர்லால் மைதானம் அருகிலும் இடம் இருக்கிறது. அதில் விரைவில் கட்டித் தரும்படி அரசை வலியுறுத்துகிறேன்.



**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; விரைவில் அதற்கான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வணிக வரித் துறை, நம்முடைய அரசினுடைய வருமானத்தின் பெரும் பங்கை ஈட்டிக் கொடுக்கிற துறையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே பார்க்கிறபோது, பெரும்பாலான வணிக வரித் துறை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அவற்றிற்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இன்றைக்கு அரசுக் கட்டடங்கள் 69-ல் 220 அலுவலகங்கள் செயலாற்றிக்கொண்டிருக்கின்றன. அதேபோல தனியார் கட்டடங்கள் 186-ல் 267 அலுவலகங்கள் செயல்படுகின்றன. விரைவிலே ஒவ்வொன்றாக அவற்றை அரசுக் கட்டடங்களில் மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**139—**

## தார்ச் சாலை

***1361—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றிய வனப் பகுதி காவலூரில் இருந்து மந்தாரக்குட்டை வரையில் உள்ள வனச் சாலையைப் புதுப்பித்து, தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றிய வனப் பகுதியில் காவலூரில் இருந்து மந்தாரக்குட்டை வரை சாலைகளைப் புதுப்பிக்கவும், தார்ச் சாலையாக மாற்றித் தரவும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் இருக்கக்கூடிய காவலூர் to மந்தாரக்குட்டை road என்பது மிகவும் மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அங்கு மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் பிரசவத்திற்கு வருவது என்றாலுங்கூட அவர்களுக்குப் பாதை இல்லை. அடிக்கடி அங்கே 12 யானைகள், 13 யானைகள் என்று நிலங்களுக்கு உள்ளே நுழைந்து, பயிர்களை நாசம் செய்கிறபோது, இவர்கள் தப்பி ஓடுவதற்குக்கூட சரியான வழியில்லாத ஒரு காலக்கட்டம். இந்தப் பாதையை உடனே எடுக்க வேண்டுமென்று அதற்கான முன்மொழிவுகள் எல்லாம் அனுப்பப்பட்டு, திருச்சியிலே வனத் துறையிடம் இருக்கக்கூடிய பொறியாளர் அலுவலகத்திலே அந்தக் கோப்பு நிலுவையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, தங்கள் வனத் துறையில் இருக்கக்கூடிய அந்தப் பொறியியல் துறைக்கு அறிவுரை வழங்கி, உடனடியாக இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றிய ஜவ்வாது மலை வனப் பகுதியில், inner பகுதியிலே அந்தக் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை செல்லுகின்ற சாலை 6.5 கிலோ மீட்டர் நீளமுள்ளது. அது 2005-2006 ஆம் ஆண்டு, வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ், சாலையோரத்திலே ஓர வடிகால் அமைக்கப்பட்டு, அதிலே வெட்டி எடுக்கப்பட்ட மண் சாலையிலே போடப்பட்டிருக்கிறது. அதன் பின்னாலே P.M.G.S.Y.—பிரதம அமைச்சர் கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், போளூர்-ஜமுனாமுத்தூர்-ஆலங்காயம் சாலை 51/6-லிருந்து ஜாபெண்டா வரை 8 கிலோ மீட்டர் தூரம் உள்ளது; 1 கோடியே 76 இலட்சம் ரூபாய் அதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு,



அதிலே அந்தக் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை செல்லுகின்ற சாலையும் அடங்கும். ஏனோ சென்ற ஆண்டு அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த ஆண்டு அந்தப் பணியை எடுப்பதற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த நிதியை இந்த ஆண்டு வனத் துறைக்கு ஒதுக்கச் சொல்லி, வனத் துறையின்மூலமாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தர்மலிங்கம். (குறுக்கீடு) உட்காருங்கள், ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இன்னொரு கேள்வி இருக்கிறதே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தர்மலிங்கம், கொஞ்சம் உட்காருங்கள். திரு. ஞானசேகரன், உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டார் இல்லையா? (குறுக்கீடு) சரி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது, ஏற்கெனவே பாரதப் பிரதமர் சாலைத் திட்டத்திலே இந்தப் பணி எடுக்கப்படுவதாக இருந்தது என்று சொன்னார்கள். அதற்கான ஆய்வுகள் எல்லாம் நடத்தப்பட்டன. அது ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக நிறைவேற்றப்பட இருந்த காலத்தில், உடனடியாக Highways--நெடுஞ்சாலைத் துறை இந்தப் பணிகளையெல்லாம் எடுக்க வேண்டும் என்று ஓர் அரசாணை அரசால் பிறப்பிக்கப்பட்டு அது வேறு திசை மாறிப் போன காரணத்தினாலே, அந்த ஆண்டு அதை எடுக்க முடியாமல் போய்விட்டது. ஆகவே, நான் வனத் துறை அமைச்சர் அவர்களையும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம், அது ஒரு மலைப் பாதை என்கிற காரணத்தினாலே, இந்த ஆண்டு பாரதப் பிரதமர் சாலைத் திட்டத்திலிருந்து அந்தச் சாலைக்கு வரக்கூடிய பணத்தில், அதற்கு முன்னுரிமை அளித்து, அந்தப் பணியை நம்முடைய வனத் துறை, பொறியியல் துறையோடும், அதேபோல நம்முடைய ஊரக வளர்ச்சியினுடைய பொறியாளர்களை வைத்தும் இந்த ஆண்டே இரண்டு துறைகளும் ஒன்றாக இணைந்து, அதைச் செய்து கொடுக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2006 செப்டம்பர் 1

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, வேண்டியவை நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சத்தியமங்கலம் தொகுதியிலே மாக்கம்பாளையம், குண்ரி என்று இரண்டு ஊராட்சிகள் உள்ளன. சுதந்திரம் அடைந்து சுமார் 60 ஆண்டுகள் ஆகியும், அங்கு தார்ச் சாலைகள் அமைக்கப்படவில்லை. அந்தப் பகுதிகளுக்கு கலைஞர் அரசால் தார்ச் சாலைகள் அமைக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியிலே உள்ள குத்தியலத்தூர், மாக்கம்பாளையம், குண்ரி, திங்களூர், கேர்மாலம் ஆகிய ஊராட்சிகளுக்குச் செல்வதற்கு, இரண்டு வனச் சோதனைச் சாவடிகள் உள்ளன. அங்கு கடந்த கலைஞர் ஆட்சியிலே, 1997 ஆம் ஆண்டு, அரசாணை நிலை எண் 126–ல், அவர்கள் பூமியில் விளைகின்ற விளைபொருட்களைக் கொண்டு செல்ல போக்குவரத்துக்கு ஏதுவாக, கட்டணமின்றிச் சென்று வர ஆணை பிறப்பித்தும், இன்று வரை அந்த அரசாணை நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. சுமார் 50,000 மக்கள் அந்தப் பகுதியிலே வாழ்கின்றார்கள். அவர்களுக்கு நமது கலைஞர் அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** நிவாரணம் செய்து கொடுக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.



2006 செப்டம்பர் 1]

**140—**

## மீன் இறங்குதளம்

**•683—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, புதுப்பட்டினம் பகுதியில் மீனவர்களுக்காக மீன் இறங்குதளம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, புதுப்பட்டினம் பகுதியில் மீன் இறங்குதளம் அமைப்பது தொடர்பான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தப் பகுதியிலே மீன் இறங்குதளம் அமைப்பதற்கான கருத்துரு ஏதும் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தப் பகுதியிலே, புதுப்பட்டினம், உய்யாலிக் குப்பம், மெய்யூர்க் குப்பம், சதுரங்கப்பட்டினம் குப்பம் என நான்கு மீனவர் கிராமங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான மீனவர்கள் இந்தப் பகுதியிலே மீன் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே கட்டமைப்பு வசதிகள் சரியான வகையிலே இல்லை. கூடுதலாக அலைகள் அடிக்கிற பகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலே மீன் இறங்குதளம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியினுடைய மீனவ மக்களுக்குத், தொழிலை மேலும் நல்லபடியாக நடத்துவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய அமைச்சர் அவர்கள் மீன் இறங்குதளம் அமைப்பதற்கு மறு பரிசீலனை செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மீன்பிடி இறங்குதளங்கள் எங்கெங்கே அமைப்பது என்று, 1996 ஆம் ஆண்டு பெங்களூரில் உள்ள மீன் துறையின் மத்திய கடல் பொறியியல் ஆய்வு மையத்தின் பொறியாளர் வல்லுநர்களால் தமிழகக் கடலோரப் பகுதிகளில் ஆயவு மேற்கொள்ளப்பட்டு, பெருந்திட்டய -Master Plan அறிக்கை

தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட புதுப்பட்டினம் பகுதியில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அது பற்றி அதிகாரிகளோடு கலந்தாலோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜான் ஜோசப். (குறுக்கீடு) திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, புதுப்பட்டினம் குப்பம், உய்யாலிக் குப்பம், மெய்யூர்க்குப்பம், சதுரங்கப்பட்டினம் குப்பம் போன்ற பகுதிகளிலே கடல் அலைகள் அதிகமாக வீசுகின்றன. சமீபத்தில் ஏற்பட்ட சுனாமியிலேகூட, காஞ்சிபுரம் மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலேதான், இந்தப் பகுதிகளிலேதான் 58 பேர் இறந்திருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கான பொருட்களை இழந்த பகுதி, அந்தப் பகுதி. நம்முடைய புவியியல் வல்லுநர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். சுனாமிக்குப் பிறகு, பத்திரிகையிலேகூட அந்தச் செய்தி வந்தது. தூண்டில் வளைவு இருந்த பகுதியிலே, சுனாமியாலும், பேரலைகளாலும் பாதிப்பு இல்லாமல் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நானும் தொடர்ந்து பல முறை, என்னுடைய பகுதியிலே உள்ள இந்த மீனவக் கிராமங்களுக்கு தூண்டில் வளைவு வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். எனவே, புதுப்பட்டினம், உய்யாலிக் குப்பம், மெய்யூர், சதுரங்கப்பட்டினம் குப்பங்களை உள்ளடக்கி ஒரு தூண்டில் வளைவை, அந்த நான்கு கிராமங்களையும் பாதுகாக்கின்ற வகையிலும், இதுபோன்ற பெரும் அலைகளைத் தடுக்கின்ற வகையிலும், மீனவர்கள் தங்குதடையின்றித் தங்கள் தொழிலைச் செய்வதற்கு ஏற்றவாறும் அமைப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்





சொன்னதைப்போல, சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மீனவ மக்களுக்கு, நம்முடைய கலைஞர் அரசு பொறுப்பேற்ற பிறகு நிதிநிலை அறிக்கையில்கூட எந்த அளவுக்கு நல்ல பல திட்டங்களை, மீனவ மக்களுக்காக வாரி வழங்கியுள்ளார்கள் என்பதனை நாடு அறியும். அந்த வகையிலே, அந்தப் பகுதி, நிறைய மீனவர்கள் உள்ள பகுதி, நிறைய மீனவக் குப்பங்கள் இருக்கின்ற பகுதிதான். இருந்தாலும், நம்முடைய மீனவ மக்கள்மீது நிறையப் பற்றும், பாசமும் கொண்ட முதல்வர் அவர்களிடத்திலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தூண்டில் வளைவு அமைப்பதற்கான திட்டத்தினை எடுத்துச் சொல்லி, மற்ற அதிகாரிகளோடு ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜான் ஜோசப்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றபோது, கடல் கொந்தளிப்பு மற்றும் புயலால் பாதிக்கப்பட்டு, பல மீனவர்களுடைய விசைப் படகு உள்ளிட்ட உபகரணங்கள் சேதம் அடைந்துள்ளன. இது சம்பந்தமாகக் கடந்த ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் புகார் மனுச் செய்து, அந்த மனுக்கள் விசாரிக்கப்படாமலும், நிவாரணம் வழங்கப்படாமலும் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. அந்த மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிய நிவாரணம் வழங்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதுபோல, விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட இரையுமன்துறை முதல் நீரோடி வரையுள்ள பகுதிகளில் ஏராளமான மகளிர் மீனவர்கள் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜான் ஜோசப், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** பஞ்ச நிவாரணம் கிடைக்காமல் இருக்கிறது. அவர்களுக்குப் பஞ்ச நிவாரணம் வழங்கப்படுமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவி

செய்கின்ற வகையிலே, கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடன், கடலோர மாவட்டங்களில் இருக்கின்ற 13 மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அழைத்து, பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படாமல் இருப்பது குறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, விடுபட்டுப் போன மீனவர்களுக்கும் நிவாரணம் கிடைத்திட வேண்டும் என்கின்ற வகையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அந்த அடிப்படையிலே, அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலும், மீன்வளத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையிலே என்னிடத்திலும் கோரிக்கை கொடுத்திருக்கின்றார்கள். அது பற்றிப் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை கடற்கரையோரக் கிராமங்கள் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியாகும். அந்தப் பகுதி, நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட பகுதியாகும். அந்தப் பரங்கிப்பேட்டை, அண்ணன்கோவில் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும் என்பது பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. அதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மீனவப் பெருங்குடி மக்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத அளவுக்கு முகத்துவாரம் கரைதட்டிப் போய், மீனவ மக்கள் கடலுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையுள்ள காரணத்தினால், முகத்துவாரத்தையும் அந்த அண்ணன்கோவில் பகுதியில் ஆழப்படுத்திக் கொடுத்து, அந்த மீனவர் சமுதாய மக்களுக்கு மறுவாழ்வு அளித்திட வேண்டுமாய்த் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, அண்ணன்கோவில் பகுதியில் மீன்பிடி இறங்குதள வேலைகள் ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த



முகத்துவாரத்தை ஆழப்படுத்துவதற்கான பணியினை மேற்கொள்வதற்காக நம்முடைய கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கின்றேன். அதற்காக விரைவிலே அவர்கள் ஆய்வு செய்து, திட்டத்தினை அறிவிக்கின்றேன் என்று என்னிடம் கூறியுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

### (அ) ஓய்வூதியம் பெறுவோருக்கு ஒரே சீராகப் பணப் பயன்—முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கைகள் அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாடு ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியபோது, அதற்கு முன்பு நான்கு ஊதியக் குழுக்களின் பரிந்துரைகளின்படி ஓய்வூதியதாரர்களும், குடும்ப ஓய்வூதியதாரர்களும் பெற்று வந்த ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றை உயர்த்தி, அதனால் ஏற்படும் பணப் பயன் 1-6-1988 முதல் நடைமுறைக்கு வருமாறு முன்தேதியிட்டு 9-8-1989 அன்று ஆணையிடப்பட்டது.

அப்படி ஆணையிட்டபோது, 500 ரூபாய் வரை மாத ஓய்வூதியம் பெற்று வந்தவர்களை ஒரு பிரிவினராகவும், 500 ரூபாய்க்கு மேல் மாத ஓய்வூதியம் பெற்று வந்தவர்களை மற்றொரு பிரிவினராகவும் கொண்டு, அதன் அடிப்படையில் 1-6-1960-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு 60 சதவிகிதம் என்று தொடங்கி, படிப்படியாக, 1-10-1984 முதல

30-9-1987 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு 15 சதவிகிதம் வரை, அதாவது ரூபாய் 300 முதல் ரூபாய் 100 வரை குறைந்தபட்சப் பணப் பயன் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டது. ஆனால், இந்தப் பணப் பயன் உயர்வை எந்தப் பாகுபாடும் இன்றி, 500 ரூபாய் வரை மாத ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 60 சதவிகிதம் உயர்வு என்றும், 500 ரூபாய்க்கு மேல் மாத ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 50 சதவிகிதம் உயர்வு என்றும், ஓரே சீராகப் பணப் பயன் கிடைத்திடும் வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று, அம்பாசமுத்திரம் தாலுகா–உங்களுடைய ஊர்தான்–அம்பாசமுத்திரம் தாலுகா ஓய்வூதியர் சங்கம், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் 1991–ல் தொடுத்த வழக்கில், அவர்களது கோரிக்கை ஏற்கப்பட்டதன் காரணமாக, பணப்பயன் 60 சதவிகிதம் மற்றும் 50 சதவிகிதம் எனக் கிடைத்திடும் வகையில் 15–6–1998–ல் ஆணை வெளியிடப்பட்டது.

இந்த ஆணை வழக்குத் தொடுத்த சங்கத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதால்--அதாவது, இந்த ஆணை, வழக்குத் தொடுத்த அந்த ஓரேயொரு சங்கத்திற்கு மாத்திரம்தான் பொருந்தும் என்பதால், ஒவ்வொரு ஓய்வூதியதாரர் சங்கமும் தனித்தனியாக உயர் நீதிமன்றத்தினை நாடி, அம்பாசமுத்திரம் தாலுகா ஓய்வூதியர் சங்கம் பெற்ற பலனைத் தங்களுக்கும் வழங்க வேண்டுமென்று வழக்குத் தொடுத்து, நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில், அவ்வப்போது அரசு ஓய்வூதியதாரர்களுக்கான பணப் பயனைத் திருத்தி அரசு ஆணை வெளியிட்டு வருகிறது.

இவ்வாறு ஓய்வூதியதாரர்கள் வயது முதிர்ந்த காலத்தில் நீதிமன்றத்திற்குச் சென்று, அதனால் ஏற்படுகின்ற கால விரயம், செலவு போன்ற இன்னல்களைத் தவிர்ப்பதற்காக இந்த அரசு ஒரு முடிவு எடுத்துள்ளது. அதனையொட்டி, 1–6–1988 அன்றைய நிலையில் உள்ள ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் முறையே 60 சதவிகிதம் மற்றும் 50 சதவிகிதம் பணப்பயன் உயர்வு அளிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி

மொத்தம் 82 ஆயிரத்து 423 ஓய்வூதியதாரர்களின் நலன் கருதி இந்த அரசு எடுத்த இந்த முடிவின் பயன் இந்த ஆண்டுக்குள் ஓயவூதியதாரர்களுக்குக் கிடைக்கும். இதனால் அரசுக்குக் கூடுதலாக ஏற்கெனவே இருக்கிற நெருக்கடியில் 3.50 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 10-10

## (ஆ) சத்துணவு மைய மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊதிய விகித நிர்ணயம்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இந்த நெருக்கடியையும் இந்த அவைக்கு தாங்கிக்கொண்டு இன்னொரு அறிக்கையை அங்கன்வாடிகளிலும் அளிக்கின்றேன். சத்துணவு மையங்களிலும், கோரிக்கைகளை பணியாற்றுவோர் ஊதிய உயர்வு உள்ளிட்ட சில நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றார்கள்.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள் போன்ற அனைத்துத் தரப்பினருக்கும், இயன்றவரையில் அவர்கள் மனம் குளிரப் பல்வேறு சலுகைகளைத் தொடர்ந்து வழங்கி வரும் இந்த அரசு, இப்பொழுது நிதிஆதாரப் பற்றாக்குறை இருந்தபோதிலும், சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடிகளிலே பணியாற்றுவோரின் கோரிக்கையை அலட்சியப்படுத்த விரும்பாத நிலையில், அவர்களுக்கு இயன்றவரையில் ஆவன செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு, இப்போது அவர்கள் பெற்று வரும் பயன்களோடு மேலும் ஓரளவு பயன் பெற வேண்டும் என்ற வகையில் பின்வரும் அறிவிப்புகளைப் பரிவோடு வெளியிடுகின்றது:

சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களும், அங்கன்வாடிப் பணியாளர்களும் தற்போது ஒவ்வொரு மாதமும் ஊதியமாக 2,158 ரூபாய் பெறுகின்றார்கள். இவர்களுக்கு இனிமேல் ரூபாய் 1,300–20–1,500–25–2,000 என்ற ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படும். இதன் காரணமாக, இதுவரை ரூபாய் 2,158 மட்டுமே மொத்த ஊதியமாகப் பெற்று வந்தவர்கள், இனிமேல் ரூபாய் 260 கூடுதலாகப் பெற்று, மொத்தம் 2,418 ரூபாய் ஊதியமாகப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர்களும், அங்கன்வாடிகளில் பணியாற்றும் முதல் நிலை அங்கனவாடி உதவியாளர்களும் தற்போது ஒட்டுமொத்த ஊதியமாக மாதம் ரூபாய் 1,180 பெறுகின்றார்கள். இத்துடன் மேலும் ரூபாய் 120 சேர்த்து, மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,300 வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ... மையங்களில் பணியாற்றும் சமையல் உதவியாளர்க

உதவியாளர்களும் தற்போது ஒட்டுமொத்த ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 890 பெறுகின்றார்கள். இத்துடன் மேலும் ரூபாய் 110 சேர்த்து, மாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு 1,000 ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிவிப்பு காரணமாக, 88,070 சத்துணவு அமைப்பாளர்களும், அங்கன்வாடி அமைப்பாளர்களும், 82,324 சத்துணவு மைய சமையலர்களும், அங்கன்வாடி மைய முதல் நிலை உதவியாளர்களும், 41,344 சமையல் உதவியாளர்களும், 4,426 அங்கன்வாடி மைய இரண்டாம் நிலை உதவியாளர்களும், ஆக மொத்தம் 2,16,164 பணியாளர்கள் பயனடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால், ஆண்டு ஒன்றுக்கு இந்த அறிவிப்பின் காரணமாக, ஒட்டுமொத்தமாகக் கூடுதலாக 45.41 கோடி ரூபாய் செலவாகும். இந்த ஊதிய உயர்வுகள் 1-9-2006 முதல் நடைமுறைக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. அறிவிப்புகள்

### (அ) மானியக் கோரிக்கைகள் மீதான கடைசி நாள் விவாதத்தை பிற்பகல் 1-30 மணிக்கு முடித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் இன்று கடைசி நாள். பேரவை விதி 185 (3)-ன்படி மானியக் கோரிக்கைகள் மீது விவாதிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நாட்களில் கடைசி நாளன்று மானியக் கோரிக்கைகள் சம்பந்தமான விவாதம் மற்றும் பதிலுரை உட்பட அனைத்தையும் சரியாகப் பிற்பகல் 1-30 மணிக்கு முடிவுறச் செய்து, உடனடி வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும். அதாவது, இன்று பிற்பகல் 1-30 மணிக்கு கில்லட்டின் நேரம். எனவே, உறுப்பினர்கள் தங்களது பேச்சினைச் சுருக்கமாக முடித்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு).

## 4. தகவல் கோரல்

### (அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் மின்சார வாரியத்தின் இழப்புகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் இந்த அவையில் வைக்கப்பட்ட தணிக்கைத் துறைத் தலைவரினுடைய அறிக்கையிலே, மின்சார வாரியத்தைப் பொறுத்துக் கூறப்பட்டதில், அடிப்படை வசதி மேம்பாட்டுக் கட்டணத்தை அந்த வாரியம் குறைவாக வசூலித்த காரணத்தினாலே அந்த வாரியத்திற்கு வருவாய் இழப்பு ரூபாய் 77.56 கோடி என்றும், அதேபோலக் காற்றாலை மின்சாரம் மின் வாரியத்திற்கு விற்பனை செய்யப்படுகிறபோது, விற்பனை செய்யப்படுகிற மின்சாரத்தில் 2 சதவிகிதம் மின்வழித் தொடர் இழப்பிற்காகப் பிடித்தம் செய்யாத காரணத்தினாலே, மார்ச 31 வரையிலான 5 ஆண்டுகளிலே ஏற்பட்ட மிகைச் செலவு 12.96 கோடி ரூபாய் என்றும், அதேபோலக் காற்றாலைமூலம் தயாரிக்கப்படும மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்கிற அந்த Wheeling Charge—மின்சாரம் கொண்டு செல்வதற்கான கட்டணம் 15 சதவிகிதம் வசூலிக்கத் தவறியதால், செலுத்துகை மற்றும் பகிர்மான இழப்புகளைக் கழிக்காத காரணத்தினாலே, மார்ச் 31, 2005 வரையிலான 5 ஆண்டுகளுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.204.87 கோடி என்றும், ஆக, 295 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் இழப்பை ஏற்படுத்தியிருக்கிற அந்தத் துறையினுடைய அலுவலர்கள் யார்? ஏன் இவர்கள் இப்படிப்பட்ட வருவாய் இழப்பிற்குக் காரணமாக இருந்தார்கள்? தணிக்கைத் துறையிலே சொல்லப்பட்ட இந்தப் பெரிய முறைகேட்டினை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அது குறித்து அவர் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன? இந்த இழப்பை ஈடுகட்டுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**•மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, காற்றாலைமூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தைக் காற்றாலையின் உரிமையாளருக்குத் தேவைப்படும் வேறொரு இடத்தில் வழங்கும்போது, செலுத்துகை மற்றும் பகிர்மான இழப்புகளைக் கழிக்காததால், கடந்த 5 ஆண்டுகளிலே ரூ.204.87 கோடி மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. காற்றாலைகள் அமைத்தவர்கள் தொழில் அதிபர்கள். அவர்கள் நெல்லை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலே

காற்றாலைகளை அமைத்திருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்குச் சில நேரங்களிலே மின் வாரியத்தின்மூலமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். சில நேரங்களிலே தங்களுடைய தொழிற்சாலைக்கு அந்த மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று மின் வாரியத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே மின்சார வாரியம், அவர்கள் உற்பத்தி செய்த, காற்றாலையின்மூலம் கிடைத்த மின்சாரத்தை அவர்களுக்கு வழங்கும்போது, Distribution and Transmission Line இழப்புகளை அந்தப் பணத்திலேயிருந்து கழித்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அப்படிக் கழிக்காத காரணத்தினாலே, ரூ.204.87 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இதை எப்படிச் சரி செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். காற்றாலை மின் உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றவர்கள் இந்த மாநிலத்திலேதான் இப்போதும் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில் அதிபர்களும் இந்த மாநிலத்திலேதான் தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அடுத்த 5 ஆண்டுகளுக்கு, ஏற்கெனவே அவர்கள் Distribution and Transmission Line Loss–ஐக் கழிக்காததை அவர்களுக்கு நினைவுபடுத்தி, அவர்களோடு கலந்து பேசி, அந்த இழப்பை ஈடு செய்ய முடியுமா என்பதை விவாதிப்பதற்கு, அந்தத் தொழில் அதிபர்களோடு பேசும்படி மின் வாரியத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆர். சின்னசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே...

## (ஆ) சென்னை, தண்டையார்பேட்டையில் துணை மின் நிலையம் அமைத்தல்

**திரு. பி.கே. சேகர்பாபு:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சேகர்பாபு, உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டையார்பேட்டை பகுதிக்குட்பட்ட, 7, 8 பகுதிகளைச் சார்ந்த நகர்களுக்குத் தொடர்ந்து ஏற்படுகின்ற மின் தடையைப் போக்குவதற்காக, கடந்த காலங்களிலே 110 Kilo Volt திறன் கொண்ட துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான கருத்துரு உருவாக்கப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டு, இன்னும் இட மாற்றம்



அறிகிறோம். பெறப்படாததால், அந்தப் பணி நிலுவையில் உள்ளதாக இந்த மின் தடையினால், அரசிடமிருந்து பெற்று, மாநகராட்சியில் பயன்படுத்துகின்ற தெரு விளக்குகள்கூட சரிவர எரியாததால் பொது மக்களுக்கு உண்டாகின்ற பாதிப்பாலும், இந்த மின்சாரத் தட்டுப்பாட்டினால் ஏற்படுகின்ற, கொசு போன்ற தொல்லைகளிலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றுவதற்காகவும், தொடர்ந்து அந்தப் பகுதியிலேயே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1,332 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதாகவும், அந்தப் பகுதிக் குடும்பங்களுக்கும் மின்சாரத் தேவை இருப்பதாலும், உடனடியாக இந்த 110 Kilo Volt துணை மின் நிலையத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**•மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிதி அமைச்சர் 1996–லிருந்து 2001 ஆம் ஆண்டு வரையிலே கல்வி அமைச்சராக இருந்தபோது, வட சென்னை முழுவதும் Low voltage–ஆல் பாதிக்கப்பட்டு, அந்தப் பகுதிகள் சீரமைக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியையும் பெற்று, 100 கோடி ரூபாய் செலவிலே சென்னை உயர் நீதிமன்றத்திலே ஒரு துணை மின் நிலையமும், அதைப்போல, துறைமுகம் தொகுதியிலே ஒரு துணை மின் நிலையமும் அமைக்கப்பட்டு, வட சென்னையில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் தண்டையார்பேட்டை பகுதியில் இப்போது ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் பரிசீலித்து, டிசம்பர் மாதத்திற்குள் அந்தத் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மின்சார வாரியத்திற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு) திரு. சின்னசாமி, உட்காருங்கள், திரும்பத் திரும்பச் சொல்கிறேன், உட்காருங்கள், அனுமதி இல்லை, உட்காருங்கள்.

## 5. சத்துணவு மைய மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு—பாராட்டும், நன்றியும்

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பணியாற்றுகின்ற சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், நீண்ட நாட்களாகப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திக்கொண்டிருக்கின்றார்கள் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கின்ற வகையிலே, அவர்கள் பெற்று வந்திருக்கின்ற ஊதியத்தை உயர்த்தி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய அந்த உத்தரவுக்கு, சத்துணவு ஊழியர்கள் அமைப்பின் சார்பிலும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் எங்களுடைய மனபூர்வமான நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) சேலம், தனியார் சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்—சுமுகத் தீர்வுக்கு நடவடிக்கை

***திரு. சி. கோவிந்தசாமி:** நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்காக ஒரு செய்தியை இங்கே கொண்டு வர விரும்புகிறேன். சேலம், தனியார் சட்டக் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்கள் கடந்த சில நாட்களாக நடத்தி வருகின்ற போராட்ட இயக்கம் ஏற்கெனவே மாநில அளவிலே விஸ்தரிக்கப்படக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்த அறிவிப்பினை ஏற்று, அது விலக்கிக்கொள்ளப்பட்டிருக்கிறது. சட்டக் கல்லூரி மாணவர்களும், கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், அந்தப் போராட்டத்திற்கு சுமுகமான முறையில் தீர்வு காண, அதிலே பங்கேற்றுச் செயல்பட்டு வருகிற இந்திய மாணவர் சங்கமும் விருப்பம் தெரிவித்துள்ளது. ஏனென்றால், அந்தச் சட்டக் கல்லூரி மாணவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, இன்றைக்கு அதை அரசியலாக்குவதற்காகச் சிலர் முயற்சிக்கின்ற காரணத்தாலே, இந்தப் பிரச்சினையை அரசோடு நேரடியாகப் பேசி, சுமுகமான தீர்வு காண வேண்டுமென்று இந்திய மாணவர் சங்கம் விரும்புகிறது. நேற்றைய முன்தினம் அந்த மாணவர் சங்கத்தினுடைய தலைவர்கள் நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, அதற்கான சில கோரிக்கை மனுக்களை



அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து, அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இது குறித்து மேற்கொள்ளப்படவிருக்கின்ற நடவடிக்கைகள் என்ன என்பதை சட்டத் துறை அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புவதோடு, இந்தப் பிரச்சினையில் சுமுகமான தீர்வு காண்பதற்கு இந்திய மாணவர் சங்கத் தலைவர்கள் சட்டத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாய்ப்பிருக்குமானால், அவர்களையும் நேரில் சந்தித்துப் பேசி, இப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண முன் வர விரும்புகிறார்கள் என்ற செய்தியைச் சொல்லி, அரசினுடைய நிலையை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் எழுப்பியிருக்கின்ற இந்தப் பிரச்சினையில், சேலம், தனியார் சட்டக் கல்லூரி மாணவர்கள் பிரச்சினையில் அரசு, மாணவர்களை அழைத்துப் பேசி, அதிலே நல்ல முடிவு எடுப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டதை இந்த அவையிலே நான் தெரிவித்திருக்கிறேன். குறிப்பாக, இந்திய மாணவர் சங்கமும், ஏனைய மாணவர் சங்கங்கள் அனைத்தும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், என்னிடத்திலும் கொடுத்த மிக முக்கியமான கோரிக்கையே, செங்கல்பட்டு சட்டக் கல்லூரியை அரசு சட்டக் கல்லூரியாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பிரதானமாக வைத்திருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்து, செங்கல்பட்டு சட்டக் கல்லூரி, 17 ஆயிரம் ரூபாய் கட்டணமாக வசூல் செய்துகொண்டிருந்தாலும், நம்முடைய பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிக் கொண்டிருந்த அந்தக் கல்லூரி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவுக்கேற்ப, இனிமேல் அரசு சட்டக் கல்லூரியாக இயங்கும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, சேலம், தனியார் சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரை, மாணவர்கள் போராட்டத்திற்குப் பின்னால், அன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாணவர்கள் கைது செய்யப்பட்ட நாளன்றே உடனே விடுவிக்க வேண்டுமென்று சொல்லி, அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை செய்த மறுநாளே மீண்டும்

நம்முடைய முதல்வரைச் சந்திக்க வேண்டும் என்று மாலை 4 மணிக்கு, நான்கூட மதுரைக்குச் சென்றுவிட்ட நேரத்திலே என்னிடத்திலே தொலைபேசியிலே கேட்டார்கள். 4 மணிக்குக் கேட்டவுடனே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாணவர்கள் பிரச்சினையிலே எந்த அளவுக்கு அக்கறையாக இருக்கின்றார்கள் என்பதற்காக இந்த அவையிலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்; இரண்டு மணி நேரத்திற்குள்ளாக வரட்டும், நிர்வாகத்தையும், மாணவர்களையும் வரச் சொல்லுங்கள். நான் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று, இவ்வளவு இக்கட்டான சூழ்நிலையிலேயும், சட்டசபை நடந்துகொண்டிருக்கின்ற இந்த நிலையிலே, நான் சட்டசபை முடிந்து பேசலாம் என்று தெரிவித்தேன். அவர்கள் உடனே பேச வேண்டும் என்று சொன்னவுடனே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைக் கனிவோடு ஏற்றுக்கொண்டு, நிர்வாகத்தையும்—அந்தக் கல்லூரியை நடத்துகின்ற நிர்வாகத்தையும், மாணவர்களையும் அழைத்து நேரடியாகப் பேசிக் கேட்ட நேரத்திலே, நிர்வாகம் அவர்கள் சார்பாக சில கோரிக்கைகளைச் சொன்னார்கள். ஏனென்றால், அவர்கள் சொன்ன விஷயங்களை நான் இந்த நேரத்திலே சொல்ல வேண்டும். அவர்கள் சொன்னது, மாணவர்களுக்கான அந்தக் கட்டணம், குறிப்பாக, மாணவர்களுக்கு மத்திய அரசும், மாநில அரசினுடைய உதவியாக 14 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு scholarship-ஆகத் தருகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

முற்பகல் 10-25

அதே மாதிரி, ஆதிதிராவிட சமுதாய மாணவர்களுக்கு இலவசமாகத் தங்கிப் படிப்பதற்கு அங்கே விடுதிகளும் அரசின் சார்பாக நடத்தப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆக, மாணவர்களுக்குப் பணம் கையிலிருந்து செலவாகாத அளவுக்கு அவர்கள் படிப்பதற்கு வேண்டிய வழி வகையைச் செய்யலாம் என்று கல்லூரி நிர்வாகம் தெரிவித்திருக்கிறது. மாணவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல், ரூ.4 ஆயிரமாகக் குறைக்க வேண்டும் என்று நம்முடைய முதல்வரிடத்திலே அவர்கள் கருத்துரைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசி முடித்தபின், இரண்டு தரப்பையும்—நிர்வாகத்தையும், மாணவர்களையும் கேட்டறிந்து, அதிலே ஒரு சுமுகமான முடிவு எடுக்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தெரிவித்தவுடனே, மாணவர்கள் இறுதியாக நம்முடைய முதல்வரிடத்திலே கேட்டுக்கொண்ட கோரிக்கை, நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகளை உடனே முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்; அதற்காக நீங்கள் ஆணையிட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது அவர்கள்



வைத்த கடைசிக் கோரிக்கை. உடனே முதல்வர் அவர்கள் நம்முடைய அரசினுடைய தலைமை வழக்குரைஞரை அறிவுறுத்தி, நாளை அனைத்து வழக்குகளும் உயர் நீதிமன்றத்திலே விசாரணைக்கு வருகின்றன என்ற நல்ல செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். முதல்வர் அவர்கள் தெரிவித்தவுடனே இரண்டு நாட்களுக்குள்ளாக அந்த வழக்குகள் பூராவும் விசாரணைக்கு வருகின்றன. நல்ல முடிவு நிச்சயம் வரும்.

## 5. சத்துணவு மைய மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு—பாராட்டும், நன்றியும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை (குறுக்கீடுகள்) மணி, இன்று கில்லட்டின் நேரம் 1-30 மணிக்குள் விவாதத்தை முடிக்க வேண்டும்

**திரு. ஜி.கே. மணி:** மிக முக்கியமான பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுத்தீர்கள் என்றால், நன்றாக இருக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** சரி, நன்றியாவது சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லாத் தரப்பு மக்களுக்குமான சலுகைகளை எல்லாம் கேட்டறிந்து, அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் பல்லாயிரக்கணக்கான சலுகைகளை வாரி வழங்கிய நேரத்தில், சத்துணவுப் பணியாளர்களுடைய கோரிக்கை மட்டும் விடுபட்டு இருந்ததாகப் பரவலாக அவர்கள் குரல் கொடுத்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு, இந்தக் கூட்டத் தொடரிலேகூட பொது விவாதத்திலும், சமூக நல மானியக் கோரிக்கையிலேயும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலேயும் கோரிக்கைகள் வைத்தோம். ஆகவே, எல்லாக் கட்சிகளின் கோரிக்கையை ஏற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்போது 2 இலட்சத்து 16 ஆயிரத்து 164 பேர் பயன் பெறக்கூடிய வகையில், சத்துணவுப் பணியாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், உதவியாளர்கள் போன்ற அனைவருக்கும், 2 இலட்சத்து 16 ஆயிரத்து 164 பேருக்கு சலுகைகளை வாரி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும்

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கும், நம்முடைய தமிழக அரசின் கவனத்திற்கும் நான் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்தது ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) ஆய்விலேதான் இருக்கிறது. திரு. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்று இந்த 100 நாட்களுக்குள்ளாக விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், இப்படிப் பல்வேறுபட்ட, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற, கூனிக் குறுகி இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற வகையிலே பல்வேறு அறிவிப்புகளை இந்த அரசு அறிவித்திருக்கிறது. அவர்களுடன் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி அமைப்பாளர்களுக்குத் தமிழக முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு, அங்கன்வாடிப் பணியாளர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையைப் பரிசீலித்து, மன நிறைவு அளிக்கத்தக்க வகையிலே ஒரு நல்ல முடிவினை அறிவித்து, அவர்களுக்குரிய ஊதிய உயர்வினைத் தந்து, கிட்டத்தட்ட 2 இலட்சத்து 16 ஆயிரத்திற்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு மகிழ்ச்சியை, நல்ல செய்தியை வழங்கியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய நன்றியையும், பாராட்டுதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்று 100 தினங்களைக் கடந்து, நம்முடைய நிதிநிலை அறிக்கையினுடைய விவாதங்கள் முடிவுறுகிற தருவாயிலே



இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்த ஆட்சியினுடைய சாதனைகளைப் பற்றி இந்தச் சட்டமன்றத்திலே நாம் பேசுகிறபோதெல்லாம், வெளியிலே இருக்கக்கூடியவர்களுக்கு மிகப் பெரிய மன மகிழ்ச்சியும், அதற்குரிய ஆதரவு நிலையும் பெருகி வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே, அமெரிக்காவினுடைய New York தலைநகரத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய பிரபல AC Nielsen என்ற அமைப்பின்மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கிட்டத்தட்ட 30 மாவட்டங்களிலே 118 சட்டப் பேரவைத் தொகுதிகளிலே 8,494 பேர்களிடத்திலே ஆய்வுகள் மேற்கொண்டு, 100 நாட்களில் இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி மகத்தான சாதனையைப் புரிந்து, மக்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கிறது என்று (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆய்வு சொல்லியிருக்கிறது. வெளிநாட்டிலே இருக்கக்கூடிய ஒரு நிறுவனம் ஆய்வு செய்து சொல்லியிருக்கிற இந்தச் செய்தியின்மூலமாக, சட்டமன்றத் தேர்தலிலே இருந்த அந்த நிலைமைகளைவிட, இந்த ஆய்வின்மூலமாகத் தெரிகிற செய்தி என்பது, 100 நாட்களுக்குள்ளாகவே, திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைவிட 4.8 சதவீதம், வாக்காளர்கள் மத்தியிலே ஆதரவு பெருகியிருக்கிறது என்ற அந்த ஆய்வையும் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, 100 நாட்களில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி மகத்தான சாதனையைப் புரிந்து, தமிழக மக்களிடத்திலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. மக்களுக்கான ஆட்சி என்ற முறையிலே, வருகிற உள்ளாட்சித் தேர்தலிலேயும் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி மகத்தான வெற்றி பெறப் போகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்ல செய்தியைச் சொல்லி, இந்த அவையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலான வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நல்ல செய்தியை அ.தி.மு.க.வும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள். சேர்த்து, சீக்கிரம் நன்றி சொல்லுங்கள். சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Zero Hour என்பது, பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை பற்றிப் பேசுவது. இருந்தாலும், அவர்கள் வாழ்த்துச்

சொல்கிறார்கள் என்று நாங்கள் அனுமதித்துக்கொண்டிருக்கிறோம். வாழ்த்துச் சொல்வதோடு நின்றுவிட்டால் பரவாயில்லை. பெரிய புள்ளிவிவரத்தை, ஏதோ பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியை வைத்துக்கொண்டு, அன்றைய தேர்தலுக்கும், இன்றைக்கு இருக்கிற நிலைமையையும் பற்றி ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஆகவே, இதுபோன்று நீங்கள் அனுமதி அளிப்பது என்பது இந்தச் சபையின் மரபுக்கு ஏற்றதாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

## 6. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2006–2007* ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய முதலாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2006 செப்டம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 10–35*

## 8. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| (அ) | கோரிக்கை எண் 1 | - | மாநிலச் சட்டமன்றம் |
| (ஆ) | கோரிக்கை எண் 2 | - | ஆளுநர் மற்றும் அமைச்சரவை |
| (இ) | கோரிக்கை எண் 16 | - | நிதித் துறை |
| (ஈ) | கோரிக்கை எண் 36 | - | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை |
| (உ) | கோரிக்கை எண் 50 | - | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் |

### (அ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006–2007* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.15,87,27,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2285, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் வழங்கும் மருத்துவ உதவித் தொகையைக் கூடுதலாக்கி உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2741, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு Laptop கம்ப்யூட்டர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3603, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனி உதவியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4675, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூபாய் இரண்டு கோடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9426, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1993, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4605, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3725, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்கு Fax Machines வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4048, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, பாராளுமன்ற வளாகத்தில் உள்ளதுபோல, சலுகை விலையில் சட்டமன்ற வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முதல் தரமான சைவ மற்றும் அசைவ உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4304, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற ஆகும் செலவினை அரசே ஏற்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6586, திருமதி பெ. கமலாம்பாள். இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 7065, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புகைவண்டி கட்டணத்தைப் பணமாகக் கொடுப்பதற்குப் பதில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப்போன்று, சட்டமன்ற உறுப்பினரும், அவரது உதவியாளரும் புகைவண்டியில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7386, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்பாகப் பணியாற்றிட உதவியாக, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு உதவியாளர் ஒருவரை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7600, திரு. வீ.ஏ.டி. கலியவரதன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3496, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் போக்குவரத்திற்கு கார் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7277, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6530, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற அலுவலகத்தில் பணியாற்றும் Lump ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கவும், அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2571, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்தி வழங்குவது, தொகுதிக்குச் செல்ல அரசு செலவில் வாகனம் வழங்குவது மற்றும் தொகுதி அலுவலகத்திலும், சட்டமன்றத்திலும், உறுப்பினர்களின் வசதிக்காக Laptop கம்ப்யூட்டர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2603, திரு. ஆர்.டி. கணேசன்.



**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்சமயம் வழங்கப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூபாய் 2 கோடியாக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7584, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் ஒரு கோடி என்று உள்ளதை, ரூபாய் இரண்டு கோடியாக உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9450, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி அலுவலகத்தில் பொது மக்களுக்காகப் பயன்படுத்த, Computer, Printer, Xerox Machine போன்றவை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6071, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதிப் பயணம் செல்லும்போது,

பல துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் மாதம் இரண்டு நாட்கள் (ஒன்றியத்திற்கு) உடன் வந்து குறையைத் தீர்க்க (spot disposal) நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2096, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, தலைமைச் செயலக வளாகத்தில் 10 மாடி நாமக்கல் கவிஞர் மாளிகை எதிரில் சட்டமன்ற செயலகக் கட்டடத்தின் மூலையில் உள்ள உணவு விடுதியில் சட்டமன்ற உறுப்பினர்கள் தனியாக வசதியோடு அமர்ந்து உண்ணும் வகையில் பெரிய ஹாலை ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5672, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதிய உயர்வு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4201, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "மாநிலச் சட்டமன்ற வளாக எல்லைக்குள் சட்டமன்ற உறுப்பினர்கள்



வாகனங்கள் நிறுத்த இடம் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8134, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றத்தில் இருக்கைகள் இட நெருக்கடியாக உள்ளன; இதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5207, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் பொழுதுபோக்கு அம்சமாக, அனைத்து வகை விளையாட்டு வசதிகளை உருவாக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5332, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் பழுதாகியுள்ளதால், ராஜபாளையம் நகர்ப் பகுதிக்குள் நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் குடியிருப்புக்கு அதனை மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3147, திரு. இரா. இராம்பிரபு. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3077, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் சிறப்பாகச் செய்திடக் கூடுதலாக எழுதுபொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,87,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,26,71,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1942, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4609, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2400, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3254, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6340, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9427, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3729, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4342, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது மக்கள் கொடுக்கும் மனுக்கள்மீது அமைச்சர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4977, திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாதம் ஒரு முறை அனைத்துத் துறை அதிகாரிகளுடன் தொகுதி வளர்ச்சிப் பணி குறித்துக் கலந்துரையாட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6746, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7073, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அமைச்சர்கள் மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட அளவிலான குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7882, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்யும்போது, அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை முன்னிலைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3866, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6220, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்யும்போது, அவர்களது நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களை, அந்தந்த மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3557, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாண்புமிகு அமைச்சர்கள், தமிழக வளர்ச்சிக்காக நிர்வாகத்தை முடுக்கிவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4196, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு எனத் தனியாக ஒரு அமைச்சரை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3437, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு எனத் தனியாக அமைச்சர் நியமனம் செய்வது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2095, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலைமைச் செயலகத்தில் ஒரே இடத்தில் அமைச்சர்களின் அறைகளை அடுத்தடுத்து அமைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களைச் சந்தித்துப் பேச வசதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,26,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.466,68,21,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.18,23,55,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1765, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் தற்காலிகமாகக் கலைக் கல்லூரியை ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2410, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3248, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4724, திரு. விடியல் எஸ். சேகர்.



**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லக வங்கி, I.M.F., ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் NABARD வங்கிக் டனுதவி குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மாழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் ணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/–, மூலதனக் கணக்கில் துக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ந.18,23,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9429, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெற்று, அதன் பலன்களைப் பெறுவதற்கு, 31-7-2006 அன்று காலவரையறை நிர்ணயம் செய்துள்ளதை, 0-5-2006, அல்லது 30-6-2006 முதல் என்று நிர்ணயம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5594, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட தனியார் மற்றும் அரசு வங்கிகளில் மாணவர்களின் கல்விக்கும், மக்களின் வியாபாரத்திற்கும் கடனுதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5756, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7996, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு உடனடியாக நிதி ஒதுக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2357, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2551, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளின் வளர்ச்சிக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக்



கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3971, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நேர்முக வரிகளின் பங்கு குறைந்து வருவதைத் தடுக்க, நேர்முக வரிகளின் பங்கை உயர்த்தும் வகையில் வரிச் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4381, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசின் நிதி நிர்வாகத்தை நவீனப்படுத்தி, வளர்ந்து வரும் சூழ்நிலைக்கேற்றவாறு நிதி நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5817, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, "நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன், அனைத்துத் துறைகளிலுள்ள வல்லுநர்களையும் அழைத்துக் கலந்தாய்வு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6622, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7022, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசின் நிதி நிர்வாகத்தை நவீனப்படுத்தி, வளர்ந்து வரும் சூழ்நிலைக்கேற்றவாறு நிதி நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8748, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, மேட்டூர் கருவூல அலுவலகத்தை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8970, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதிக்குக் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3869, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9320, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5493, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8099, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை எந்த அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளன, எந்த நிலையை எட்டியுள்ளன என்பதைக் கூறும் outcome Budget அறிக்கை தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5216. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு வழங்கும் ஊக்கத் தொகைத் திட்டத்திற்கு மானியங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2447. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அதிக நிதியொதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4841. திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூரில் இயங்கி வரும் கருவூலத்திற்குத் தனியாகப் புதிய கட்டடம் கட்ட நிதியொதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்
கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில்
ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற
ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4197 திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே
"மானியம் என்பது இடைக்கால நிவாரணமே; இதைத் தவிர்த்து
பொருளாதார ரீதியாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நிதித் துறை
சார்ந்த திட்டங்கள் தீட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து"
விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்
வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக்
கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில்
ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5409 திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2116, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே
"வேலூர் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, ஒகேனக்கல்
காவிரிக் குடிநீர்த் திட்டம், ரூபாய் 1,500 கோடியில் நிறைவேற்ற
வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத்
தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்
வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக்
கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில்
ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 294 திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே
"குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்
கடந்த ஐந்தாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால், அரசு

துணைக் கருவூலம் இல்லாமல் 30 கி.மீ. சென்று, கீரனூரில் செயல்படும் துணைக் கருவூலம்மூலமாகத்தான் பில் தொகை, மற்ற பிற கட்டணங்களைச் செலுத்தவும், பணம் எடுக்கவும் வேண்டியுள்ளதால், அரசுத் துணைக் கருவூலம் இலுப்பூரில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7278, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராம ஊராட்சி மன்றங்களுக்கு அரசு அதிக நிதி ஒதுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.466,68,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,23,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.15,33,57,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2223, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2429, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2864, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3300, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4765, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழில், விவசாயம், நலத் திட்டம், கல்வி, இவற்றில் அரசு எடுத்துள்ள சிறப்பு முயற்சிகள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5680, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9430, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2385, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5300, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் திட்டப் பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைக் கண்காணிக்க, திட்ட அலுவலர், சட்டமன்ற உறுப்பினர், அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6692, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7094, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் திட்டப் பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைக் கண்காணிக்க, திட்ட அலுவலர், சட்டமன்ற உறுப்பினர், அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7195, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில், மகளிர் மேம்பாட்டின்பொருட்டு கைவினைப் பொருட்கள் உற்பத்தித்

தொழிற்சாலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7438, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம் மலைகள் நிறைந்த பகுதி; கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களுக்குக் கூடுதலான நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8406, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கட்டமைப்புப் பணிச் செலவுகளுக்கான திட்டச் செலவிற்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3858, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7993, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8073, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6218, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் விவசாயத்தை மேம்படுத்தவும், மேலைநாடுகளின் நவீனத் தொழில்நுட்பங்களை விவசாயத் துறையில் கொண்டு வந்து, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4844 திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "அடித்தட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டம் தீட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5212, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை தொகுதியில், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், உடுமலைப்பேட்டை அமராவதி வனச் சரகத்தில் நீரைச் சிக்கனமாகச் செலவிடத் தடுப்பணைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2181, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயம், கல்வி, பால் வளம், தொழில் வளம் பெருக, சட்டமன்ற உறுப்பினர்கள் குழு நியமித்து, ஆலோசனை பெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7738, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.35.50 கோடி ஒதுக்கீடு; இந்த ஒதுக்கீட்டில் போளூர் தொகுதியில் உள்ள ஜவ்வாது மலைவாழ் மக்கள் முன்னேற்றம் குறித்தும், இந்த ஒதுக்கீட்டில் அந்தப் பகுதிக்கும் இந்த ஆண்டு திட்டம் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,80,94,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,33,57,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5187,46,75,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2277, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்கள் ஓய்வூதியத்துடன் அரசு மானியத் தொகையும்

சேர்த்துக் கூடுதலாக ஓய்வூதியத்தை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2441, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3245, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5352, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வயது முதிர்ந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் ஓய்வுக் கால மருத்துவச் செலவுக்கு மிகவும் அதிகமாக தனித் தொகையை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9431, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2370, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5852, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6418, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொழிப் போர்த் தியாகிகளுக்கு மேலும் பல சலுகைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7394, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் வயதைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3854, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2184, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதியில் முதியோர், விதவை பென்ஷன் கோரி மனுச் செய்தவர்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் விசாரணை முடித்து, பென்ஷன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6031, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் அரசுப் போக்குவரத்துப் பேருந்தில் பயணம் செய்ய 50 விழுக்காடு கட்டணச் சலுகையில் செல்ல அரசு அனுமதி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7280, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொழிப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3838, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்து ஊழியர்கள், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள்போன்றோர்களுக்கு ஓய்வூதியங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2448, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்சமயம் வழங்கி வருகின்ற மாநில ஓய்வூதியம் பெறுகிறவர்கள் பட்டியலில், ஆண் வாரிசு உள்ள ஓய்வூதியதாரர்கள் இடம் பெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4963, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் நலன் காக்கும் வகையில், அவர்கள் ஆண்டொன்றுக்கு சுமார் 500 கி.மீ. பயணம் செய்யும் வகையில் இலவச பஸ் பாஸ் வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7994, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகள் என்பது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6170, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த 5 ஆண்டுகளில் ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையினை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,687,46,75,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முன்மொழியப்பட்ட கோரிக்கைகளுடைய அடிப்படையில், அவற்றிற்கான விளக்கங்கள் தனித்தனியான வெளியீடுகளாக வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழிலே வழங்கியிருக்கிற வெளியீடுகளை@ எல்லாம் நான் இங்கே படித்துப் பதிவு செய்ததாக ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துகளை எடுத்துரைத்ததற்குப் பின்னர், இறுதியிலே நான் விடை தருகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, நான் அவற்றை முன்மொழிகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பின்னர், மாண்புமிகு நிதி அமைச்சருடைய பதிலுரைக்குப் பின்னர், மானியக் கோரிக்கைகள் சரியாகப் பிற்பகல் 1–30 மணிக்கு கில்லட்டின் நேரத்தில் வாக்கெடுப்பிற்கு விடப்பெற வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களது உரைகளை, கொடுக்கப்படவுள்ள நேரத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை.

***முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சராகவும், மாநில அமைச்சராகவும் பணியாற்றிட வாய்ப்பளித்து, மீண்டும் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெறப் பாடுபட்ட எங்கள் தெய்வம், கோடானு கோடித் தமிழ் மக்களின் உள்ளத்திலே குடிகொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் நன்றியினைச் சமர்ப்பித்து, மீண்டும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கு என் நன்றியினைக் கூறி, இந்தப் பேரவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றியைக் கூறி, மாநிலச் சட்டமன்றம், நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்கள் மற்றும் மேதகு ஆளுநர் மற்றும் அமைச்சரவை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீதான என் கருத்துகளை எடுத்துக் கூற விழைகின்றேன்.

---

@ 175 முதல் 241 வரையி ான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மாநிலத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல், வறுமையையும், பிற்பட்ட நிலைமையையும் அறவே ஒழித்தல் மற்றும் மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துதல் ஆகியவை ஒரு அரசின் தலையாய கடமைகளாகும். நிதி ஒதுக்கத்தை நிலைநாட்டுவதில் திடமாகவும், உறுதியாகவும், நிர்வாகத்தில் விவேகமும் கடைப்பிடித்தாலன்றி எந்த ஒரு அரசும் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற இயலாது.

நிதித் துறை ஒரு மாநிலத்தின் வரவு-செலவு குறித்து எந்தெந்த இனத்தில் எவ்வளவு நிதி தேவை என்பதைக் கண்டறிந்து, அதற்கு ஈடாக எவ்வாறு நிதியைத் திரட்டுதல் வேண்டும் என்று ஆக்கபூர்வமாகக் கணக்கெடுத்துச் செயல்படுதல் வேண்டும். வரவு-செலவு நிதி ஒதுக்குதல் செய்யும்போது பற்றாக்குறை 3 சதவிகிதத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது அத்தொகையானது உண்மையிலேயே தேவையா, இல்லையா என்று ஆராய்ந்து, அதனை நிதித் துறை அளித்தல் வேண்டும். Zero based budget வளரும் நாடுகளுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். ஏனெனில், தேவைகள் அதிகம், வரவோ குறைவு. அதனால் preferential theory முறையில் அத்தியாவசியமான தேவைகளுக்குப் பணத்தை வரன்முறை செய்து அளிக்க வேண்டும்.

மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க, வேலைவாய்ப்பினை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். அவர்களுக்கு நுண் பயிற்சி அளித்து, அவர்களது வேலையைத் திறம்படச் செய்தால், பசி, பட்டினி நீங்கும். எனவே, எல்லோருக்கும் வேலை என்ற திட்டத்தின்கீழ் அனைவருக்கும் வேலை கிடைக்க வழி செய்தால், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தி, நாட்டு மக்களின் வருமானத்தைப் பெருக்கிச் செயல்பட்டால், தமிழ்நாடு பாரினும் சிறந்து விளங்கும்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் 1996-2000 ஆண்டுகளில் மாநில அரசின் வளர்ச்சிப் பணிகளுக்கல்லாத பிற செலவினங்கள் மிக அதிகமாக உயர்ந்திருந்தன. அதே வேளையில், நிதி மற்றும் வருவாய்ப் பற்றாக்குறையும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்திருந்தது என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். எனவே, ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வாறு நிதிநிலை இருக்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு பொருளாதார மேதைகள் சில கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள்.



குறிப்பாக, 'the use of Budget policy as a means of maintaining high employment, a reasonable degree of price level stability at an appropriate rate of economic growth' என்றும் 'the restoration of high growth rate levels and increased investment activity will automatically lead to growth of revenues' என்றும், வருமானத்தைப் பெருக்குவதற்கு நாம் எந்த அளவில் திட்டங்களை இட்டால் அந்த நாடு வளரும் என்பதற்காகப் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கின்ற வேளையில், ஐநா. சபையானது, வருகின்ற புத்தாயிரம் ஆண்டிலே எவ்வாறு வளர் நாடுகள் தங்கள் திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக 8 இலக்குகளைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த 8 இலக்குகளைத் தயாரித்தவர்கள் யார் என்றால், நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதையான பேராசிரியர் அமர்த்தியா சென் அவர்களும், மறைந்த முன்னாள் மெக்பூப்-உல்-ஹக் என்னும் பாகிஸ்தானியப் பேராசிரியர் அவர்களும்தான் அந்த 8 திட்டங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த 8 திட்டங்களை, அந்த இலக்குகளை அடையும்போது ஒரு நாடானது எந்த அளவிற்குப் பொருளாதாரத்தில் வளரும் என்றும், அதைப் பெருக்குவதற்காக எவ்வாறு அரசாங்கங்கள் செயல்பட வேண்டுமென்றும் 8 திட்டங்களை, 8 இலக்குகளைச் சொல்லியிருக்கின்றார்கள்.

(முற்பகல் 10-50)

அதில் முதலாவதாக, 'eradication of poverty and hunger' என்று சொல்லி, வறுமையையும், பசி, பட்டினியையும் அடியோடு ஒழிக்க வேண்டுமென்ற முதல் இலக்கைச் சொல்லியிருக்கின்றார்கள். அடுத்ததாக, 'to achieve Universal Primary Education'. இரண்டாவதாக, ஆரம்பக் கல்வி அனைவரும் பெற்றிருக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 'Promote Gender equality and empower women' என்று, ஆண், பெண் இரு பாலருக்கும் சமத்துவமும், பெண்களுக்கு உரிமையும், அதிகாரமும் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். 'Reduce child mortality'. குழந்தை மரண விகிதம் குறைக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். 'Improve maternity health'. பேறுகாலத் தாய்மார்களின் மரண விகிதம் குறைக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். 'Combat HIV, AIDS, Malaria and other diseases'. எச்.ஐ.வி., எய்ட்ஸ் ஒழிக்கப்படவும், மலேரியா அழிக்கப்பட வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றார்கள். அதோடு, சுற்றுப்புறச்

சூழல் அழிவுபடாமல் இயற்கை வளம் தொடர்ந்து கிடைக்கும்படிச் செயல்பட வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றார்கள். இறுதியாக, பொருளாதார உலகமயமாக்கல் வளர்ச்சிக்கான கூட்டு முயற்சியாகப் பேணப்பட வேண்டும் என்று 8 இலக்குகளைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த 8 இலக்குகளை எவ்வாறு எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய 5 ஆண்டு காலத்திலே செய்து சரித்திரம் படைத்தார்கள் என்பதற்குச் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே, வறுமை ஒழிப்புக்காக அவருடைய ஆட்சியிலே நமது கிராமத் திட்டம், புது வாழ்வு என்னும் வறுமை ஒழிப்புத் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம், இதுபோன்ற பல்வேறு திட்டங்களையெல்லாம் வகுத்து, வறுமையை ஒழிப்பதற்காகப் பல திட்டங்களைக் கிராமப்புறங்களிலே கொண்டு வந்து, குறிப்பாக, சுய உதவிக் குழுக்கள்மூலமாகப் பொருளாதார வளர்ச்சியில் மறுமலர்ச்சியை உருவாக்கியவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை உங்களுக்கு இங்கே தெரியப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, ஆரம்பக் கல்வியும், அதன் வளர்ச்சியையும் பற்றிச் சொன்னார்கள். அந்த ஆரம்பக் கல்வி வளர்ச்சியைப் பார்த்தீர்கள் என்றால், ஆசிரியர்களுக்குக் கல்வித் துறையிலே பல்வேறு புரட்சிகரமான மாறுதல்களைச் செய்து, அதன்மூலமாகக் கல்வியைத் தமிழகத்திலே சிறந்த முறையில் வளர்த்து, இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக வருகின்ற அளவுக்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே, ஆசிரியர்களுக்கு 'counselling' என்ற முறையில் ஒரு புரட்சிகரமான திட்டத்தை முதலிலே அறிமுகப்படுத்தியவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை உங்களுக்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

அதோடு, மெட்ரிகுலேஷனுக்கு என்று தனியாக ஓர் இயக்ககத்தை ஏற்படுத்தினார்கள். பிறகு, +2—+1, +2 படிக்கின்ற மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் தருவதும், இலவசமாக சைக்கிள் தருவதும் போன்ற மாபெரும் திட்டங்களையெல்லாம் அறிவித்து, கல்வியை வளர்ப்பதற்காக அவர்கள் சிறந்த பணியாற்றினார்கள்.



அதோடு, பாதிக்கப்படும் ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டும் தந்தை, அல்லது தாய் இறந்துவிட்டால், அந்தக் குழந்தை இடையிலே தன்னுடைய கல்வியை நிறுத்திவிடக்கூடாது என்பதற்காக, வைப்பு நிதியாக 50,000 ரூபாய் குழந்தையினுடைய பெயரிலே வைத்து, அதன்மூலமாகக் கல்வியைத் தொடர வேண்டுமென்பதற்காக வாய்ப்பு அளித்திருக்கின்றார்கள்.

அதேபோல, +2 வரையில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு Dictionary, Atlas வழங்குவது போன்ற பல திட்டங்களையெல்லாம் செய்து, கல்வித் துறையில், ஆரம்பக் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள்.

அதேபோல, பாலின வேறுபாடு. இதைப் போக்குவதற்காகத் தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதோடு, பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் என்ற புரட்சிகரத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களின்மூலமாகப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து, அவருடைய 5 ஆண்டு ஆட்சிக் காலத்திலே மாபெரும் புரட்சியைக் கிராமப்புறங்களிலே உருவாக்கியவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முற்பகல் 10–55

அதுபோல, பெண் கமாண்டோக்கள். பெண்களும் எந்த அளவிற்குப் பாதுகாப்புப் பணியில் பணியாற்ற முடியும், போலீசில் பணியாற்ற முடியும் என்பதற்காக, பெண் கமாண்டோக்களை உருவாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மகளிருக்காகத் தனியாகக் காவல் நிலையம் உருவாக்கிக் காண்பித்தார்கள். பிறகு, சிறப்பான துணிச்சல் மற்றும் வீர சாகசங்களைச் செய்கின்ற பெண்களைப் பாராட்டி, ஆண்டுதோறும் கல்பனா சாவ்லா பெயரில் விருது வழங்கினார்கள். மகளிருக்காகத் தனி நீதிமன்றம் உருவாக்கினார்கள். பெண்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்றும், ஆண்களுக்குச் சமமாக நடத்த வேண்டும் என்பதற்காக, எப்படித் தந்தையின் initial–ஐ வைத்துக்கொள்கின்றார்களோ, அதேபோல, தன் தாயினுடைய பெயரையும் தன் பெயருக்கு முன்னால் initial ஆக வைத்துக்கொள்ளலாம் என்ற சீரிய திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள்.

ஆதி திராவிட, பழங்குடியின மக்களுக்கு நிலம் வாங்குவதற்காக, பெண்களுக்காக ஒரு இலட்சம் ரூபாய் நிதி தந்து, அந்த நிலத்தைப்

பண்படுத்திக் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அடுத்து, சிசு மரண விகிதத்தைப் பார்த்தீர்கள் என்றால், சமூக நலத் துறையின்மூலமாகவும், மருத்துவத் துறையின்மூலமாகவும் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து, சிசு மரணங்களைக் குறைப்பதற்குத் திட்டங்களை வகுத்தார்கள்.

பேறுகாலத்தில் தாய்மார்கள் மரண விகிதத்தைக் குறைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிறகு, H.I.V.–ஐ ஒழிப்பதில், தாய்மார்கள் கருவுற்றிருக்கும்பொழுது அந்த நோய் குழந்தைகளுக்குப் பரவாமல் தடுக்க மருந்துகள் வழங்கப்பட்டன. அதேபோல, சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காப்பதற்காக, உதகை மற்றும் கொடைக்கானல்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**முனைவர் மு. தம்பிதுரை:** இல்லை, இப்போதுதான் ஆரம்பித்தேன். வளர்ச்சித் திட்டங்களைச் சொல்வதற்காக இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இன்னும் subject-க்கே வரவில்லை. வருகிறேன். நான், வருகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**முனைவர் மு. தம்பிதுரை:** இதுபோன்ற பல்வேறு திட்டங்களையெல்லாம் கொண்டு வந்ததன் காரணமாக, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், அரசினுடைய நிதிநிலையை எவ்வாறு சீர்படுத்தினார் என்பதற்காகப் பல்வேறு பத்திரிகைகளெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்த அந்த நிதிநிலைச் சீர்திருத்தத்தைப் பாராட்டியிருக்கின்றார்கள்.

ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால், இந்தியன் எக்ஸ்பிரஸ் சொல்லியிருக்கிறது—'Though the State's finances were in shambles when the A.I.A.D.M.K. Government took charge in May 2001, the last four years have seen a remarkable turnout with a singular achievement of the budgetary deficiency within manageable limits.'—ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்பொழுது எந்த அளவிற்கு நிதித் துறை இருந்தது; அதைப் போக்குவதற்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்ததன்மூலமாகப் பல திட்டங்களைச் செய்திருக்கிறார் என்றால், அவர் செய்த நிதிச் சீர்திருத்தமாகும். அது மட்டுமல்லாமல், இன்னும் பார்த்தீர்களென்றால், World Bank, Carter என்பவர் அதன் தலைவர்,—Director பேசும்பொழுது, 'it is not an easy task, but the State has gone high



with a reform programme. I am sure it will bring great benefits to Tamil Nadu in the years to come' என்று பாராட்டியிருக்கின்றார்கள்.

இதுபோலப் பல்வேறு தலைவர்கள் எல்லாம் பாராட்டி, நிதித் துறையிலே சீர்திருத்தங்களைச் செய்து, பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி செய்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், இப்பொழுது—நான் இப்பொழுது வருகின்றேன்—இன்றைய தி.மு.க.வினுடைய தேர்தல் அறிக்கையும், அதே நேரத்தில், அவர்கள் நிதித் துறையிலே என்ன செய்திருக்கின்றார்கள், எவ்வாறு budget தயார் செய்திருக்கின்றார்கள் நிதித் துறையின்மூலமாக என்பதைச் சொல்வதற்காக நான் சில கருத்துகளைச் சொல்ல விழைகின்றேன்.

தி.மு.க.வினுடைய தேர்தலுக்கான வாக்குறுதிகளை வழங்கும் அறிக்கையை வெளியிட்டபொழுது, இந்த அறிக்கையே இந்த அரசின் நிதிநிலை அறிக்கையாக அமையும் என்று இன்றைய தமிழக மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு, இதை மெய்ப்பிக்கும் வகையில், 2006 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22 ஆம் நாள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு, 2006–2007 ஆம் ஆண்டுக்கான வருவாய் வரவுகள் ரூபாய் 38,731 கோடியாக இருக்கும் என்றும், வருவாய் செலவு ரூபாய் 39,860 கோடியாக இருக்கும் என்றும், வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் 1,129 கோடியாக இருக்கும் என்றும் சமர்ப்பித்துள்ளார்கள். அதோடு, நடப்பு நிதியாண்டின் கடன்களும், முன்பணங்களும் உள்ளிட்ட மூலதனச் செலவு ரூபாய் 6,102 கோடியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால், ரூபாய் 7,231 கோடி அளவிற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த budget–ல் நீங்கள் வருமானம் 38,731 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், அதுவே நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில் ஜனவரியிலே சமர்ப்பிக்கப்பட்ட interim budget–ல், அன்றைய வருமானம் எவ்வளவு வரும் என்று சொல்லியிருக்கின்றோம். ரூ.34,046 கோடி என்று சொல்லியிருக்கின்றோம். அதே அதிகாரிகள்தான் உங்களுக்கு—யார் இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்களோ, அவர்கள்தான் எங்களுக்கும் அப்பொழுது தயார் செய்திருக்கின்றார்கள். ஆகவே, நீங்கள் சொல்வதுபோல, ரூ.38,731 கோடி என்ற வருமானம் உண்மையிலேயே வராது. அதனுடைய வித்தியாசமாக இருக்கின்ற சுமார் ரூ.4,685 கோடி உங்களுக்கு அந்த வருவாய் வராது என்று சொல்கின்றேன். இதன்மூலமாக, இந்தப் பற்றாக்குறையானது ரூ.11,916 கோடி என்ற நிலைதான் வருமேயொழிய,

நீங்கள் சொல்லியிருப்பதுபோல, ரூ.7,231 கோடி என்று சொல்லியிருக்கின்றீர்கள், கிடையாது. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், நீங்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த பட்ஜெட்டானது, realistic–ஆகக் கிடையாது. அதைச் சொல்வதற்காகச் சொல்கின்றேன். தேர்தல் நேரத்திலே வாக்குறுதிகளைத் தந்தீர்கள். அந்த வாக்குறுதிகளை நம்பினார்கள். மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் எதிர்பார்ப்பது, இந்த அரசானது தேர்தல் நேரத்தில் சொன்னார்களே, அதையெல்லாம் செய்து முடிப்பார்கள் என்ற ஏக்கத்திலே காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஏமாற்றம்தான் வரப் போகின்றது என்று சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு ஒரு சிறிய கதையானது நினைவிற்கு வருகின்றது. சொல்ல விரும்புகிறேன். ஒரு கிராமத்திலே ஒரு... (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகின்றேன்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Thambidurai, you have taken fifteen minutes. *15 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. இன்னும் மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், 2001–லே அவருடைய ஆட்சியிலே அதிக வருமானம் வந்தது என்றும், இப்பொழுது 38 ஆயிரம் கோடி ரூபாய் நீங்கள் வரவுக் கணக்கிலே வைத்திருக்கிறீர்கள், அது realistic–ஆக இல்லை, ரூ. 4,000 கோடி வராது என்றும் சொல்கிறார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, கடந்த கால ஆட்சியிலே, ஆட்சிக்கு வந்தவுடனே, பஸ் கட்டணத்தை உயர்த்தினீர்கள். மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினீர்கள். Single point tax–ஐ Multi point tax–ஆக உயர்த்தினீர்கள். இப்படி வரியை ஏராளமாக உயர்த்தி வருவாயைப் பெருக்கினீர்கள். ஆனால், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையிலே, ஒரு துறையிலேகூட புதிய வரிகள் போடாமல், அதே நேரத்திலே, இருக்கின்ற வரியை வைத்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) 38,000 கோடி ரூபாய் வரவுக் கணக்கிலே நாங்கள் காட்டி இருக்கின்றோம். பொத்தாம்பொதுவாக ரூ.4,000 கோடி வராது என்றால், எதை வைத்து ரூ.4,000 கோடி வராது என்று நீங்கள் சொல்கின்றீர்கள்? விளக்கம் சொன்னால், அரசால் பதில் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்)



**முனைவர் மு. தம்பிதுரை**: நான் சொன்னது, Interim budget; 2001 பட்ஜெட்டை நான் சொல்லவில்லை. Interim budget; 2006 ஜனவரி மாதம் இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்டது. அந்த estimate வந்து, வருமானம் வரும் என்று சொல்லியிருப்பது ரூ.34,046 கோடி என்பதைத்தான் சொல்லி இருக்கின்றோம். ஆனால், நீங்கள் இப்போது revised கொடுத்திருப்பது ரூ.38,731 கோடி என்று சொல்லியிருக்கின்றீர்கள். நீங்கள் சொன்னதுபோல, நீங்கள் பலவிதமான வருமானத்தைப் பெருக்க, பல திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்று சொன்னீர்கள். ஆனால், நீங்கள் எதுவும் செய்யாது இருக்கும்போது, இந்த வருமானம் வருவதற்கு வாய்ப்பே கிடையாது என்றுதான் சொல்கின்றேன். ஆகவே, இந்த deficit–ஆனது, இந்தப் பற்றாக்குறையானது அதிகமாகும் என்பதற்காகச் சொல்கின்றேன். நீங்கள் deficit கொண்டு வரும்போது என்னவாகும்? நீங்கள் சொன்னது 3%–க்குள் வர வேண்டும்; வராது. இது 11 கோடிக்கு 916 கூட உங்களுக்கு deficit வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றது, நீங்கள் சொன்னது எல்லாம் போக. ஆகவே, இந்த deficit–ஐப் போக்குவதற்கு நீங்கள் அப்படிச் செய்யும்போது, நீங்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்தீர்களே, அந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்த முடியுமா என்ற கேள்விக் குறி மக்கள் மனதில் எழுந்திருக்கிறது என்பதைச் சொல்வதற்காகச் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்ன வாக்குறுதிகளை நிதி அமைச்சர் படித்து, ஒவ்வொன்றாக அமல்படுத்திக்கொண்டிருக்கிறோம். கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கவில்லையா? விவசாயிகளுடைய கடனை இரத்துச் செய்யவில்லையா? எல்லாவற்றையும் நாங்கள் அமல்படுத்திக்கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால், எங்கேயிருந்து கூடுதலாக வருமானம் வரும் என்று கேட்கின்றார் ரூ.4,000 கோடி. கடந்த கால ஆட்சியிலே excise duty, sales tax போன்றவற்றிலே வசூலாகாமல் இருந்த பணங்களையெல்லாம் இந்த ஆட்சி வசூல் செய்யவிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர், 20 நிமிடங்களாகிவிட்டன. (குறுக்கீடு)*

**முனைவர் மு. தம்பிதுரை:** இல்லை சார், முக்கியமானது. *(குறுக்கீடு)* அமைச்சர் பதில் சொல்கிறார். *(குறுக்கீடு)* நான் என்ன... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலிலேயே மானியத்திலே பேசி இருக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-05*

**முனைவர் மு. தம்பிதுரை:** ஒருவர் ஒரு கிராமத்திலே இறந்து விட்டார். இறந்து விட்ட பிறகு, பொதுவாக, சொர்க்கம், நரகம் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா, தெரியாது. இருந்தாலும், என்ன சொல்வார்கள் என்றால், ஒருவர் செத்துவிட்டால் சொர்க்கத்திற்குப் போனார், நரகத்திற்குப் போனார் என்று சொல்வார்கள். அப்படி ஒருவர் இறந்து விட்ட பிறகு, கொஞ்சம் நல்லதும் செய்திருக்கிறாய், கொஞ்சம் கெட்டதும் செய்திருக்கிறாய். ஆகவே, சீர்தூக்கிப் பார்த்து, அவர் எங்கு செல்வார் என்ற ஒரு ஐயப்பாடு ஏற்பட்டது. அப்பொழுது யார் அனுப்ப முடியும்? எமதர்மராஜாதான் செய்வார். பார்த்து அந்த ஆளைக் கூப்பிட்டார். கூப்பிட்டுப் பார்த்த பிறகு, கொஞ்சம் நல்லதும் செய்திருக்கிறார், கெட்டதும் செய்திருக்கிறார், இவரை எங்கே அனுப்புவது என்ற ஒரு ஐயப்பாடு வந்தது. உடனே தர்மராஜாவுக்கு ஒரு குழப்பம் வந்த பிறகு, அவனைக் கூப்பிட்டு--செத்தவனைக் கூப்பிட்டுச் சொன்னார், 'நீ எங்கே போக வேண்டும் என்று விரும்புகிறாயோ, அங்கேயே போ' என்று. ஆனால், நான் அனுப்புவதற்கு எனக்குக் கொஞ்சம் தயக்கமாக இருக்கிறது. நீ நல்லதும் செய்திருக்கிறாய், கெட்டதும் செய்திருக்கிறாய், என்ன செய்வது என்று ஒரு குழப்பம் ஏற்பட்டது. ஏற்பட்டவுடனே அவன் கேட்டான், தர்மராஜாவிடம். 'தர்மராஜா அவர்களே, எனக்கு நீங்கள் வாய்ப்பைக் கொடுத்துவிட்டீர்கள். நான் எங்கே போக வேண்டும் என்ற முடிவை எனக்குக் கொடுத்ததனால், நான் கொஞ்சம் போய்ப் பார்த்துக்கொண்டு வந்துவிடுகிறேன். நரகம் எப்படி இருக்கிறது என்றும் பார்க்கிறேன், சொர்க்கம் எப்படி இருக்கிறது என்றும் பார்க்கிறேன். அதற்கு வாய்ப்புக் கொடுங்கள்' என்று சொன்னான். அங்கு போய்ப் பார்த்துக்கொண்டு வா என்று சொன்னார். நரகத்திற்குப போய் முதலில் பார்த்துக்கொண்டு வருகிறேன் என்று போனான், உள்ளே நுழையும்போது பார்த்தீர்கள் என்றால், நல்ல Receptionist-கள் நன்றாக வரவேற்கிறார்கள். அங்கே நல்ல Air Condition room, நல்ல சாப்பாடு, நல்ல விருந்து, அங்கே சினிமாப் பொழுதுபோக்குகள், இப்படியெல்லாம் இருக்கின்றன. இதற்கு அடுத்து என்ன பண்ண வேண்டும் என்று யோசித்தான். இன்னும் பார்த்தீர்கள் என்றால், டி.வி.டி படம், சாவதற்கு முன்னாலே ரிலீஸ் ஆன படமெல்லாம் அங்கே வருகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தம்பிதுரை, ஒரு சின்ன request. நீங்கள் துணை சபாநாயகராக எல்லாம் இருந்தவர்கள் Parliament–லே. கில்லட்டின் டைம் என்றால் தெரியும் உங்களுக்கு.

**முனைவர் மு. தம்பிதுரை:** இப்போது என்ன சொல்கிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கில்லட்டின் டைம் என்றால் தெரியும் இல்லையா உங்களுக்கு? You have taken more than 20 minutes. *(குறுக்கீடுகள்)* உரையை முடியுங்கள் சீக்கிரம். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** அப்படிப் பார்த்தால், சரி, சொர்க்கத்தைப் பார்க்கலாம் என்று அங்கே போனான். சொர்க்கத்திற்குப் போனால், அங்கே எல்லோரும் நாராயணா, சிவ, சிவ என்று எல்லோரும் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள்.. அப்படி இருக்கிற சூழ்நிலையில் பிறகு அங்கே வந்தான். எமதர்மராஜா. எங்கே போகிறாய் என்று கேட்டார். நான் கேட்கிற இடத்திற்கு அனுப்புவீர்களா என்று கேட்டான். சரி, அங்கே அனுப்புகிறேன் என்று சொன்னார். நான் நரகத்திற்குப் போகிறேன் என்று சொன்னான். ஏன் நரகத்திற்குப் போக வேண்டும் என்று யோசித்துச் சொல்; பிறகு என்னைக் குறை சொல்லக்கூடாது என்று சொன்னார். இல்லை, நான் நரகத்திற்குத்தான் போகிறேன் என்று சொன்னான். சரியென்று நரகத்திற்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். கதவைத் திறக்கிறார்கள். போய்ப் பார்த்தால் கதவு மூடுகிறது. உள்ளே சென்றால், அங்கே அடி, சவுக்கடி, குத்துகள், பாம்பு கடிக்கிறது. இதுபோன்ற ஒரு சூழ்நிலையை, அந்த நரக வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்தான். அப்போது கேட்டான் அந்த ஆள், என்னய்யா, நான் வரும்போது ஏதோ நல்லதாகத் தெரிந்ததே, கடைசியில் இப்படி இருக்கிறதே என்று கேட்டான். அதற்கு, நீ marketing division–ஐப் போய்ப் பார்த்திருக்கிறாய், எங்கள் marketing division–ல் எல்லாம், சிலவற்றையெல்லாம் இப்படிக் காண்பித்து, உங்களையெல்லாம் கூப்பிட்டு உள்ளே போட்டுவிடுவார்கள். இல்லையென்றால், யாரும் வரமாட்டீர்கள் என்று சொன்னார். அதுபோல, இந்த வாக்காளர் பெருமக்கள்—நீங்கள் டி.வி. கொடுக்கிறேன், நிலம் கொடுக்கிறேன்... *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் குருசாமி. *(கூச்சல்–குழப்பம்)* Assembly என்பது மானியத்திலே பேசுவதற்குத்தான். கதை சொல்ல அல்ல. *(கூச்சல்–குழப்பம்)*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (கூச்சல்-குழப்பம்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் உரையாற்றலாம், உரையாற்றுவதிலே இரண்டு நிமிடங்கள் அதிகமாகலாம். ஆனால், இந்த அவையில் மற்றவர்கள் எல்லாம் பேசுவதற்குள்ளான 1½மணி ஆவதற்குள் அத்தனை பேரும் பேச வேண்டும். 1½ மணிக்கு கில்லட்டின் இருக்கிறது. ஆனால், தான் ஒருவரே நேரத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இவ்வளவு அதிக நேரம் பேசுவதும், இரண்டாவதாக, ஏதோ நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதமே இன்றைக்கு நடைபெறுவதைப்போல மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் பேசுவதும் சற்று வியப்பாக இருக்கிறது. இன்றைக்கு நிதிநிலை அறிக்கையைப் பற்றிய விவாதம் இல்லை. திட்டங்களைப் பற்றிய வாதமும் இல்லை. இன்றைக்கு வந்திருக்கிற மானியங்கள் அத்தனையும், அந்தந்தத் துறைகளைப் பற்றி மட்டும்தான். சட்டமன்றம் ஒரு துறை. சட்டமன்றத்திலே நடக்கிற வாதங்கள் பற்றியெல்லாம் இங்கே பேச முடியாது. இந்தத் துறையினுடைய நிர்வாகத்தைப் பற்றியும், அதிலேயும் மாண்புமிகு உறுப்பினர், தங்களுடைய பங்கு பற்றி, நிதித் துறை எப்படி இயங்குகிறது என்பதைப் பற்றி, நிதித் துறையினுடைய பிரிவுகள் எப்படி இயங்குகின்றன என்பதைப் பற்றி, அதேபோல, திட்டக் குழு எப்படிச் செயலாற்றுகிறது என்பதைப் பற்றி, முதியோர் உதவித் தொகை எப்படி வழங்கப்படுகிறது என்பதைப் பற்றி, அல்லது வழங்க வேண்டுமானால் எப்படி, யாருக்கு வழங்க வேண்டும் என்பதைப் பற்றி, இப்படி நடைமுறை நிர்வாகச் சிக்கல்களை விளக்குவதற்குரியதாகப் பல்வேறு மானியங்கள் கோரப்படுகின்றன. எனவே, மொத்தமாகவே நிதிநிலை அறிக்கையால் வரக்கூடியது ஏமாற்றங்கள்--எதிர்காலத்தில் ஏமாற்றம்தான் வரும் என்று கூறினால், யாருக்கு என்பதுதான் கேள்வி. (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சொர்க்கம், நரகம் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய பேச்சிலே, திராவிட



முன்னேற்றக் கழக ஆட்சி சொர்க்கம் என்றும், அவர்கள் ஆண்டபோது நரகம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சொர்க்கம் எது, நரகம் எது என்பதை அவர் இங்கே விளக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தம்பிதுரை. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். திரு. தம்பிதுரை.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்பதை முழுமையாகப் புரிந்துகொண்டால் நன்றாக இருக்கும். ஆனால், ஒன்று சொல்ல விரும்புகிறேன். பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். இங்கே இந்த மாதிரி பட்ஜெட்டைப் பற்றியெல்லாம் பேசுகின்றபோது, நிதித் துறைப் பிரிவுகளைப் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். எனக்கும் புரிந்திருக்கிறது. நான் சொன்னது, நிதித் துறை எவ்வாறு செயல்படுகிறது என்று சொல்லும்போது, எவ்வாறு பணத்தை ஈட்டுகின்றோம், அவ்வாறு பணத்தை ஈட்டும்போது பற்றாக்குறை அதிகமாக வந்துவிடக் கூடாது. பற்றாக்குறை வந்தால், அது ஒரு கட்டத்திலே, ஏதாவது ஒரு வகையிலே மக்களுக்குத் தாக்குதலை ஏற்படுத்தும். ஆகவே, அப்படி வந்துவிட்டால், எப்படித் திட்டங்களைச் செயல்படுத்துவீர்கள் என்பதற்காகவும், ** என்பதற்காகத்தான் இதைச் சொன்னேனேயொழிய, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆட்சியை நடத்துகிறவர்கள் நிதிநிலையில் பற்றாக்குறை வந்து, தாங்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற கவலையோடுதான் ஆட்சி நடத்துவார்கள். நிதிப் பற்றாக்குறையால் வரக்கூடியது, ஆட்சிக்கேகூட பாதகம். ஆகவே, அப்படிப்பட்ட பற்றாக்குறையை எந்த ஆட்சியும் ஏற்றுக்கொள்ளாது. இரண்டாவதாக, பொது மக்களுக்குச் சொல்லப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத காரணத்தால் ** என்று தம்பிதுரை அவர்கள் சொல்லுகிறார்கள். இதை நாடெல்லாம்கூட நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் சொல்வதை நம்பாத காரணத்தினாலேதான், மக்கள் நாளுக்கு நாள் எங்களை அதிகம் ஆதரிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை சொன்ன ** என்கின்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. செ. குருசாமி, பேசுங்கள். (குறுக்கீடு)

**முனைவர் மு. தம்பிதுரை:** தலைவர் அவர்களே, மக்கள் எந்த அளவிற்கு உங்களுக்கு வாக்குகளை அளித்திருக்கின்றார்கள், எந்த அளவிற்கு உங்களுடைய எண்ணிக்கை இருக்கிறது... (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் குருசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) ஒரு limit உண்டு. (குறுக்கீடு) எதற்குமே ஒரு limit உண்டு. (குறுக்கீடு) I have given you sufficient time.

***திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. குருசாமி, பேசுங்கள்.

***திரு. செ. குருசாமி:** பெரியார், அண்ணா வழியில், களம் பல கண்டு, அடக்குமுறையும், சிறையும் ஆயிரம் கண்டு, சூறாவளி வாரி வீசும்போது, ஜனநாயகச் சுடர் காக்க நின்று, நின்ற தேர்தல்கள் அனைத்திலும் ஆதவனில் வென்று, ஐந்தாம் முறையாக அரியணையில் அமர்ந்துள்ள (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்னைத் தமிழே! அண்ணல் அம்பேத்கரின் உருவே!

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த நான், திராவிட இயக்கத்தில் தாக்கம்கொண்டு, தொலைத் தொடர்பு ஊழியர் முன்னேற்றச் சங்கத்தில் ஒரு தொண்டனாக இருந்த என்னை, அண்ணா அவர்கள் இருந்த இடத்தில், தாங்கள் ஐந்தாம் முறையாக அமர்ந்துள்ள இந்த நேரத்தில், இந்த அடியேனும் உங்கள் முன்னால் பேசுகிற வாய்ப்பினை வழங்கிய, நல்கிய, செம்மொழிகொண்டான் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வாட்டுகின்ற வெயில், கொட்டுகின்ற மழை, புழுதி கிளப்பும் காற்று, சூழ்ந்து நிற்கும் பகை, ஓலமிடும் ஓணான்களுக்கு மத்தியில், உறங்காமல் எனது தொகுதியில் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து, கழக வெற்றிக்காக உழைத்த, எங்கள் உயிருக்கே உயிரான அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும ஒலி) தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தொண்டரான, கழகத் தலைவர் அவர்களுக்கு உற்ற சகோதரனாக இருந்து, கழகம் காத்து வருகின்ற இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், முன்னாள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கைத்தறித் துறை அமைச்சரும், மாநில விவசாய அணிச் செயலாளருமான உயர்திரு NKK.P. அவர்களுக்கும், கைத்தறி மற்றும் ஜவுளித் துறை அமைச்சரும், ஈரோடு மாவட்டச் செயலாளருமான மாண்புமிகு NKK.P. ராஜா அவர்களுக்கும், அந்தியூர் தொகுதிக்கு வருகை தந்து, ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளனாகிய எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குச் சேகரித்த, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் மாண்புமிகு E.V.K.S. இளங்கோவன் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், சின்ன அய்யா அவர்களுக்கும், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு பேராசிரியர் வீரமணி அவர்களுக்கும், தோழமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழக நிர்வாகிகள், மற்றும் தோழர்களுக்கும், என்னை 19,743 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த எனது தொகுதி வாக்காளர் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, எனது கன்னிப் பேச்சைத் துவங்குகின்றேன்.

மாநிலத்தின் பொது நிதியை நிருவகித்து, அம்மாநிலத்தின் வரவு-செலவுகளையும் நிர்வகித்து, அது நிறைவேற்றப்படுவதையும் உறுதி செய்யும் துறையாக நிதித் துறை விளங்குகிறது. இந்தத் துறை, கருவூலக் கணக்குத் துறை, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சிறு சேமிப்புத் துறை, அரசு தகவல் தொகுப்பு விவர மையம், கூட்டுறவுத் தணிக்கைத் துறை, துறைத் தணிக்கை மற்றும் சட்டப்படி அமைந்த அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை, ஓய்வூதிய இயக்ககம் ஆகிய 7 துறைகளை நிர்வகித்து வருகிறது. 'உங்களின் முதல் செலவு சேமிப்பாக இருக்கட்டும்'—இதுதான் இன்று எல்லா நிதி நிறுவனங்களின் வாயில் முகப்புகளிலும் இருக்கும் வரவேற்புப் பதாகைகள். இந்த சிறு சேமிப்புத் துறையின்மூலம் சேமிக்கப்படும் முதலீடுகள் அரசின் பல்வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல், முதலீட்டாளர்களுக்கும், மத்திய அரசால் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டு, வட்டி வழங்கப்படுகிறது.

(முற்பகல் 11-15

இந்த மானியத்தில் அரசுப் பணியாளர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களின் ஓய்வூதியங்கள் வரும்.

அரசு ஊழியர்கள் முழு ஓய்வூதியம் பெற அவர்களின் அதிகப்படியான பணிக்காலம் 33 ஆண்டுகள் என்று இருந்ததை,

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 30 ஆண்டுகள் இருந்தாலே முழு ஓய்வூதியம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற வெளிநாடுகளில் முதியோர்களுக்கு, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, மூத்த குடிமக்கள் என நல்ல முறையில் அரசு கவனித்து வருகிறது. அதேபோல, நமது மாநிலத்திலும் முதியோர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் சலுகைகளை அளித்து, மூத்த குடிமக்களை அரசு கனிவுடன் கவனித்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை நிருபர் பணிக்குத் தகுதி பெறுவதும், தொடர்ந்து பணியில் பணியாற்றுவதும் மிகுந்த சிரமமான ஒன்று என்பதைக் கருத்திற்கொண்டு, மாதாந்திர சிறப்புத் தொகையை ரூபாய் 200-லிருந்து 400 ரூபாயாக உயர்த்தித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் மற்றும் ஆங்கில நிருபர் பணி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சுருக்கெழுத்து உயர் வேகத் தகுதிக்குக் கூடுதலாக உயர் வேகத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள நிருபர்களுக்குச் சம்பள உயர்வு (Increment) அளிக்க வேண்டுதல் வைக்கிறேன்.

தலைமை நிருபர் பதவி உயர்வுக்கு 15 வருடங்கள் நிருபராகப் பணியாற்றிட வேண்டும் என்று, வேறு எந்தப் பதவி உயர்வுக்கும் இல்லாத விதி தற்போது நடைமுறையில் உள்ளது. இவ்விதியை நீக்கி, பணி மூப்பு அடிப்படையில் பணி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டப் பேரவை கூடும் நாட்களில், எல்லோருக்கும் முன்னால் வந்து, பின்பு செல்லும் வகையில் உள்ள சட்டப் பேரவைச் செயலகப் பணியாளர்களுக்கு, இப்போது வழங்கப்படும் Out of Pocket Expense என்பதை, அவர்களின் செயல்பாடுகளைக் கருதி, கூட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியில் மேட்டூர் வலது கரையில் உபரியாகும் நீரை வாய்க்கால்மூலமாக வறட்டுப்பள்ளம் அணையில் கொண்டு வந்து சேர்த்து, அதிலிருந்து எண்ணமங்கலம், கெட்டிசமுத்திரம், அந்தியூர், சந்திபாளையம், வேம்பத்தி, ஆப்பக்கூடல், அம்மாப்பேட்டைப் பகுதியில் செம்மங்குட்டை, செல்லியாண்டி அம்மன் கோயில், மூலையூர், கரடிப்பட்டியூர் வழியாகப் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டால், சுமார் 1,000 எக்டேர் நிலங்கள் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு, விவசாயிகள் பயன் பெறுவார்கள். இதனால் நீராதாரம் பெருகி,



நீர்ப்பாசனம், கிணற்றுப் பாசனம் பெருகி, விவசாயம் செழித்தோங்கும். இது ஏற்கெனவே மணியாச்சி திட்டமாகவும், பாலாறு திட்டமாகவும் அறிவிக்கப்பட்டுக் கிடப்பில் போடப்பட்டுள்ளது. முடியுமா என்பதையெல்லாம் முடித்துக் காட்டும் எங்கள் முத்தமிழ் அறிஞரே! இத்திட்டத்தை நிறைவேற்றி எனது தொகுதியில் வளமை சேர்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதியில் கிராமப் பகுதிகளில் இரண்டு குடிநீர்த் திட்டங்கள் உள்ளன. இன்னும் பல்வேறு கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி தேவையாக இருக்கிறபடியாலே, குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் அரசு மருத்துவமனை மிகவும் பழமையானது. அது மிகவும் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டடங்களுடன் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டும். மருத்துவமனையில் தீவிர அவசர சிகிச்சைப் பிரிவும், அதற்கு நவீன இயந்திரங்கள் வழங்கியும், போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் போன்றோரை நியமனம் செய்து மருத்துவமனையை மேம்படுத்த வேண்டும். மேலும், மருத்துவமனைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் வேண்டும். 'வருமுன் காப்போம்' திட்டத்தைச் செயல்படுத்திய எங்கள் வரலாற்று நாயகர் செம்மொழிகொண்டான் அவர்களே, பிற பகுதி மக்கள் நவீன மருத்துவம் பெற்று நலமுடன் வாழ்வதுபோல் எனது தொகுதியின் மக்களும் நலமோடு வாழத் தங்களை வேண்டிக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதியில் உள்ள அனைத்து மாணவர்களும மேற்படிப்புக்கு, கோபி, ஈரோடு செல்ல வேண்டியிருக்கிறது. பவானி வட்டத்தில் அந்தியூர் தொகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அவசியம் கட்டப்பட வேண்டியுள்ளது.

மேலும், பர்கூர் மலைப் பகுதியில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி, மலைவாழ் மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். அங்குள்ள மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சி மையம்—ஐடிஐ. அமைக்கப்பட வேண்டும்.

தனியார் சுய நிதிக் கல்லூரிகளில் இலட்சக்கணக்கில் பணம் செலுத்திப் படித்த மாணவர்களின் நிலையை மாற்றி, ஒரு ரூபாய்கூடக் கட்டாமல், இன்று தனியார் கல்லூரிகளில் ஆயிரம், ஆயிரம் மாணவர்கள் படிக்கும் வாய்ப்பைத் தந்த தாங்கள், எனது அந்தியூர் தொகுதி மாணவர்களும் தரமான கல்வி பெற உதவிட வேண்டுகிறேன்.

(முற்பகல் 11-20)

இப்பகுதியிலுள்ள மின் தங்கிய மக்கள், தொழிற்சாலைகள் ஏதுமில்லாததால் வெளியூர் சென்று, குறைந்த ஊதியத்தில் தொழில் செய்து வருவதால், வாழ்க்கைத் தரம் உயரவில்லை. ஆகவே, அந்தியூர் தொகுதியில் படித்த இளைஞர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏதுவாகத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும். நாடெங்கும் தொழிற்சாலைகள் உருவாக்கிய தாங்கள், அந்தியூரிலும் மக்கள் வறுமையைப் போக்க இக்கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் மலைப் பகுதியில் ஒரு மருத்துவமனை ஏற்படுத்தி, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் போன்றோரை நியமனம் செய்து, 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனையாக ஏற்படுத்த வேண்டும். மருத்துவமனைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் வேண்டும். இதனால், மலைவாழ் மக்கள், ஏப்ரல் மாதத்தில் நமது முரசொலியில் வந்த கட்டுரையில் குறிப்பிட்டதைப்போல, 25 கிலோ மீட்டர், தொட்டில் கட்டி நோயாளியைத் தூக்கும் அவல நிலையும், 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அந்தியூர் மருத்துவமனைக்கு வரும் அவல நிலையும் ஏற்படுகிறது. ஒரு நோயாளியைத் தொட்டிலில் கட்டித் தூக்கிக்கொண்டு வரும் வேளையில்கூட, அம்மக்கள் தங்கள் இதயத் தொட்டிலில் உங்களைச் சுமந்தபடி இருக்கிறார்கள். அதன் எடுத்துக்காட்டுத்தான், இந்தத் தேர்தலில் நமக்கு வழங்கிய வாக்குகள். அவர்களின் கவலைக் கண்ணீர் துடைக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் மலைப் பகுதியில் விவசாயத்திற்குப் புதிதாக மின் இணைப்பு வழங்க வேண்டும். இதனால், மலைப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு ஏதுவாக இருக்கும். விவசாயம் சம்பந்தப்பட்ட அனைத்து வசதிகளுக்கும் பயன்படுத்துமாறு மின் இணைப்பு வேண்டும். இப்பகுதியில் மின்னழுத்தம் மிகக் குறைவாக இருப்பதால், மின் விளக்குகள் சரிவர இயங்க முடிவதில்லை. இதனால், மும்முனை மின்னழுத்த மின்சாரம் வழங்கி, மக்களுக்கும், விவசாயத்திற்கும் பயன்படுமாறு செய்தல் வேண்டும். விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கிடும் நாம், மும்முனை மின்னழுத்த மின்சார இணைப்பை நிச்சயம் வழங்கி, அப்பகுதியில் மின்சாரம் வழங்க வழிவகை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.



அந்தியூர் தொகுதியில் பல இடங்களில் சாலைகள் புதிதாக அமைக்கப்பட வேண்டியிருக்கின்றன. மேலும், பர்கூர் மலைப் பகுதியில் புதிதாகச் சாலைகள் அமைத்து, போக்குவரத்து வசதிகள் செய்வது அவசியமாகிறது.

கர்கேகண்டி, தேவர்மலை, மணியாச்சி ஆகிய ஊர்களுக்கு மூன்று பேருந்துகள் மட்டுமே உள்ளன. பர்கூர் வழியாக ஒன்றும், தாமரைக்கரை வழியாக ஒன்றும்தான் இயங்கி வருகின்றன. ஆகவே, சிற்றுந்துகள் வசதி ஏற்படுத்தி, பேருந்துப் போக்குவரத்தைத் துரிதமாக மேம்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சிமெண்ட் சாலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. செ. குருசாமி:** தார்ச் சாலை என்றால் அது தலைவர் கலைஞர் ஆட்சியில்தான் போடப்பட்டது என்பதை மீண்டும் நாம் மெய்ப்பிக்கத் தார்ச் சாலைகளை விரைவாக அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் மலைப் பகுதி மக்கள் 25 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் அந்தியூர் வங்கியில்தான் வங்கிச் சேவை செய்ய முடிகிறது. ஆகவே, அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஏற்படுத்துதல் அவசியமாகிறது.

அந்தியூர் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் மிகவும் அதிகம். இங்கு விவசாயத் தொழிலாளர்களும், கூலித் தொழிலாளர்களும் பெரும்பாலும் வெளியூர் சென்று பிழைப்பு நடத்தி வருகிறார்கள். இங்கு எந்தத் தொழிற்சாலையும் இல்லை. ஆகவே, தொழிற்சாலைகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பவானி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு அந்தியூர் வட்டம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

பர்கூர் ஊராட்சி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருப்பதால், அதன்கீழ் உள்ள மற்ற ஊராட்சிகளுக்கு, நிதிப் பங்கீடு பெரும்பான்மையாகச் செலவிடப்பட வேண்டியுள்ளது. ஆகவே, பர்கூர் ஊராட்சியின் வசதிகளை மேம்படுத்த வேண்டுமானால், பர்கூர் ஊராட்சியைத் தனி வட்டார வளர்ச்சியாகப் பிரித்தமைக்க வேண்டும். சொல்வதைச் செய்யும் தலைவர் கலைஞரின் ஆட்சியில் இந்தக் கோரிக்கை நடக்கும் எனச் சொல்லி மக்கள் மகிழ்வோடு இருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையையும் ஏற்று நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதிக்குட்பட்ட அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் வனச் சரக அலுவலகம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அந்தியூர் தொகுதிக்குட்பட்ட அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் காவிரியில் வெள்ளப் பெருக்கெடுத்தபோது, அம்மாப்பேட்டையில் வெள்ளம் புகுந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குருசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. செ. குருசாமி:** காவல் நிலையத்தில் உள்ள அனைத்து ஆவணங்களும் அடித்துச் செலலப்பட்டன. தற்போது அம்மாப்பேட்டை காவல் நிலையம் தற்காலிகமாக அம்மாப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, துரிதமாக அம்மாப்பேட்டை காவல் நிலையத்திற்குப் புதியதாகக் கட்டடம் அமைத்து, இயங்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலைப் பகுதியிலும், அம்மாப்பேட்டையிலும் துணை மின் நிலையங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுக்கடுக்காய்ச் சாதனைகள் செய்து வரும் நமது தலைவர் அவர்கள் முன், அந்தியூர் தொகுதிக்குத் தேவையான பல கோரிக்கைகளை வைத்துள்ளேன். மேகம்கூட கூடி, சில நேரம் மழை பெய்யாமல் செல்லக்கூடும். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 'தாங்கள் கூடி சொல்லும் எதுவும் பொய்யாகாது நடக்கும், நடக்கும்; இன்று இல்லையென்றால், நாளை நிச்சயம் நடக்கும்' என மக்கள் நம்புகிறார்கள் 'நிலாவைச் சுற்றிதான் நட்சத்திரம் வாழ்கிறது. உங்களைச் சுற்றிதான் எங்கள் வாழ்க்கை' எனக் கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன். வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கு. ஜெயக்குமார்.

***முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல இந்த வாய்ப்புக்கு உங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை, நிதி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த மானியக்



கோரிக்கைகள்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை இங்கே பதிவு செய்ய விழைகிறேன்.

நாமக்கல் தொகுதியிலே வாகனத் தொழிற்பேட்டை ஒன்றையும், பறவைக் காய்ச்சல் வருவதை முன்கூட்டித் தடுப்பதற்காக அங்கே ஒரு பறவைக் காய்ச்சல் உயர்நுட்ப ஆராய்ச்சி மையம் ஒன்றையும், நாமக்கல் நகரிலே நடமாடும் நீதிமன்றம் ஒன்றையும் ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த 20 ஆம் தேதி இந்தியத் துணைக் கண்டத்தின் ஒப்பற்ற தலைவராக இளைஞர்களின் இதயங்களில் எல்லாம் நீங்கா இடம் கொண்டிருந்த ராஜீவ் காந்தி அவர்களுடைய பிறந்த நாள் விழா சென்னை, காமராசர் அரங்கத்திலே நடந்தபோது, அங்கே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் வந்திருக்க, அங்கே ஒரு கோரிக்கையை வைத்தேன் நான். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி தொடர்ந்து ஒதுக்கப்பட்ட ஊராட்சிகளாக இருக்க வேண்டுமென்று. என்னைப்போன்றே பல சட்டமன்ற உறுப்பினர்களும் அத்தகைய கோரிக்கைகளை இங்கே எடுத்து வைத்தார்கள். அதையும் ஏற்று அறிவித்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இந்தச் சபையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசிய முன்னாள் அமைச்சர் அவர்கள் சொர்க்கத்தைப் பற்றியும், நரகத்தைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். சொர்க்கத்திலும், நரகத்திலும் எனக்கு ஈடுபாடு கிடையாது. நான் நம்பிக்கையற்றவனும்கூட. இருந்தாலும், இந்தச் சட்டமன்றத்தைப் பற்றி எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. சட்டமன்ற நடவடிக்கைகளிலேயே ஜனநாயகத்தைப் பற்றிய நம்பிக்கை உண்டு.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சியைச் சார்ந்த ஒரு தலைவர், கடந்த சட்டமன்றம் எப்படி நடந்தது என்பதைப் பற்றி ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியுள்ளார்கள். அந்தக் கருத்தை இந்த மன்றத்திலே உங்களோடு பகிர்ந்துகொள்வது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன்: "சட்டமன்றத்திலே நடப்பது என்ன? ஜனநாயகத்தில் தேனாறு பாய வேண்டிய இடத்தில் சர்வாதிகாரத் தேள் அல்லவா கொட்டுகிறது: மயில் ஆட வேண்டிய இடத்தில், மந்தி,

சட்டமன்றத்தில் குயில் கூவ வேண்டிய இடத்தில், கோட்டான். முல்லைக் கொடி படரும் இடத்தில் கள்ளிச் செடி. சந்தனம் மணக்க வேண்டிய இடத்தில் சாக்கடை. சிங்கங்கள் உலவ வேண்டிய இடத்தில் சிறு நரி. ஆறுதல் மொழி பேச வேண்டிய இடத்தில் ஆணவ மொழி. சட்டமன்றத்தில் முதலமைச்சர் பேசுவது கண்ணியமான பேச்சா? அல்லது காலித்தனமான பேச்சா" என்று இந்த அவையைக் குறித்து, வெளியிலே இருக்கின்ற ஒருவர் பேசியிருக்கின்றார். அதுவும், தோழமைக் கட்சியைச் சார்ந்த ஒரு கட்சியினுடைய தலைவர் அவர்கள். ஆக, இந்தச் சட்டமன்றம் கடந்த காலங்களில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, பேப்பரில் வந்ததை ஒரு reference காட்டுகிறார். வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, திருவாளர் செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) செங்கோட்டையன், யார் பேசினாலும் எழுந்திருந்து நின்று, point of order கேட்டு House-ஐ disturb பண்ணவே முடியாது. அவர் ஒரு reference-க்குப் படிக்கிறார். அதை, எழுந்து நின்றுகொண்டு, நீக்குங்கள் என்றால், நீக்க முடியாது. (குறுக்கீடுகள்) ஜெயக்குமார், continue பண்ணுங்கள். (குறுக்கீடுகள்)

*(முற்பகல் 11-30)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு)

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இப்படி இருந்த ஒரு சட்டமன்றத்தை...

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள், சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் இங்கு உரையாற்றிய சில வார்த்தைகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கின்றார். அவை சட்டமன்ற மரபுகளுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட வார்த்தைகள்தான் என்பதை நான் இந்த அவைக்கு முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைத் திரும்பவும் ஒரு விவாதப்



பொருளாக அவர்கள் இங்கே ஆக்கிக்கொண்டு பேசுவது, மீண்டும் ஒரு சர்ச்சையை இங்கே கிளப்புவதற்கு ஏதுவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசட்டும். மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள்கூடச் சொன்னார்கள். அவர் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசட்டும். நாங்கள் ஒன்றும் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் ஜெயக்குமார், பேசுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** கடந்த சட்டமன்றத்தைக் குறித்து, எப்படிச் சட்டமன்றம் இருந்தது என்பதை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேறு தலைப்புக்குச் செல்லுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** ஒரு தோழமைக் கட்சியைச் சார்ந்த தலைவர் பேசியதைத்தான் இங்கே குறிப்பிட்டேன். மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய எண்ணம் யாரையும் புண்படுத்த வேண்டும் என்பதல்ல. அத்தகைய பேச்சைப் பேசுகின்ற சட்டமன்ற உறுப்பினர் நான் அல்ல என்பதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்கள் நன்றாகவே அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த தலைப்புக்குச் செல்லுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** ஆக, கோணலும், மாணலும், முட்களும் நிறைந்த ஒரு மூங்கிலாக இருந்த இந்தச் சட்டமன்றத்தை, சீவி, செதுக்கி, சீர்படுத்தி, இங்கே நல்லதொரு இசை முழங்குகின்ற ஒரு புல்லாங்குழலாக மாற்றித் தந்த பெருமை, தமிழக முதல்வர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு நான் ஒரு சில உதாரணங்களை இங்கே வேகமாகவே எடுத்து வைக்க விரும்புகின்றேன். அவசரமாகவே பேச விரும்புகின்றேன்.

இந்தச் சபையிலே ஈழத் தமிழர்களுக்காக யார் குரல் கொடுத்தார்கள், யார் பேசினார்கள் என்ற வாதம் வந்தபொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். "அங்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கின்ற நாம், ஒன்றாக இணைந்து குரல் கொடுப்போம். நமக்குள்ளே இங்கே பேதங்கள் வேண்டாம். நாம் இங்கே இணைந்து குரல் கொடுக்காவிட்டால், அங்கே

பிரிந்து கிடக்கின்ற தமிழனை, ஒன்றாக இரு என்று சொல்கின்ற அருகதை நமக்கு இல்லாமல் போய்விடும்" என்ற ஒரு கருத்தை இங்கே எடுத்து வைத்து, மாண்பினை விளக்கியிருக்கின்றார்.

பாப்பாபட்டி, கீரிப்பட்டி இட ஒதுக்கீட்டிற்காக இந்த அவையிலே நன்றி தெரிவித்துப் பேசியபொழுது, இப்பொழுது சற்று நேரத்திற்கு முன்பாக இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், பாப்பாபட்டி, கீரிப்பட்டியிலே நாங்கள் தேர்தலை நடத்தவிருந்தோம், முயற்சித்தோம், முடியவில்லை. நீங்கள் செய்யுங்கள், வாழ்த்துக்கள் என்று வாழ்த்தைச் சொன்னார்கள். அப்பொழுது மாண்புமிகு முதல்வர் அவர்கள், "நீங்கள் வாழ்த்துக்களைச் சொன்னால் மட்டும் போதாது, வாழ்த்துக்களைச் சொல்லி, அங்கேயே இருந்துவிடாதீர்கள். என் பக்கத்தில் வாருங்கள். என்னோடு இணைந்து நில்லுங்கள். நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து அந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டியிலே ஜனநாயகத்தை வளர்ப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தைத் தழைக்கச் செய்வோம். இதில் எதிர்க்கட்சி என்றோ, ஆளுங்கட்சி என்றோ பேதம் வேண்டாம்" என்று ஒப்பற்ற ஒரு கருத்தை இங்கே எடுத்து வைத்தார்கள்.

வேறொரு உதாரணத்தையும் நான் சொல்ல விருப்பப்படுகின்றேன். இங்கே தலைவர்களுடைய பெயரைச் சொல்லிப் பேசுவதற்காக இரண்டு பக்கங்களிலிருந்தும் மிக ஆத்திரமான குரல்கள் ஒலித்தன. அந்த நேரத்திலே அவர் எழுந்து சொன்னார், "என்னுடைய தந்தையார் முத்துவேலரும், தாயார் அஞ்சுகம் அவர்களும் எனக்குப் பெயரிட்டதே பலர் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட வேண்டுமென்றுதான். என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதை ஏன் தடுக்கின்றீர்கள்?" என்று தன்னுடைய கட்சிக்காரர்களையே இடித்துச் சொன்ன ஒரு பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) வேதாகமத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற ஒரு வரியை இங்கே நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்; "எவன் ஒருவன் தன்னைத் தாழ்த்துகின்றானோ, அவன் உயர்த்தப்படுவான். எவன் ஒருவன் உயர்த்துகின்றானோ, அவன் தாழ்த்தப்படுவான்" என்று. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கலைஞர் அவர்கள், இந்த அவையிலே தன்னைத் தாழ்த்தி, "என்னை எப்படி வேண்டுமானாலும் கூப்பிட்டுக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். உங்களை நீங்கள் தாழ்த்திக்கொள்கின்ற இந்த நேரத்திலே, சரித்திரத்திலே உங்கள் பெயர் உயர்ந்துகொண்டே செல்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அவை பல கணிப்புகள்மூலமாக இன்றைக்கு வெளிவந்துகொண்டிருக்கின்றன



என்பதை இங்கே சொல்லிக்கொள்கிறேன். இந்த அவையிலே முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு முறை சொல்லும்பொழுதும், கருத்தாழம் நிறைந்த கருத்துகளை, நாட்டுக்கு நலம் மிக்க கருத்துகளைச் சொல்லி, வெட்டுத் தீர்மானங்களுக்கு மதிப்புக் கொடுத்து, குறிப்பாக, என் வெட்டுத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு, நாமக்கல்லிலே ஒரு வாகனத் தொழிற்பேட்டை அமைத்துத் தரப்படும் என்று சொன்னதற்காக நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

புதிய சட்டமன்றம் வேண்டும். இந்தக் கட்டடமானது, 1640 ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்றும், இந்த வயதுடைய கட்டடங்களெல்லாம் இடிந்து விழுந்துகொண்டிருக்கின்றன என்றும், எனவே, ஒரு புதிய கட்டடம் இங்கே அமைக்கப்பட வேண்டும், இங்கேயல்ல, புதிய சட்டமன்றம் வேண்டுமென்று இந்த அவையிலே கடந்த காலத்திலே முதலிலே குரல் கொடுத்தவன் நான். ஆனால், முந்தைய அரசானது, மே 2002 ஆம் ஆண்டு, உடனடியாக நாங்கள் புதிய சட்டமன்றத்தை அமைக்கப் போகின்றோம், 2,000 ஏக்கர் நிலத்திலே மாமல்லபுரம் அமைக்கப் போகின்றோம் என்று சொல்லி, செல்கின்ற வழியிலே அமைக்கப் போகின்றோம் என்று சொல்லி, 7 மாதத்திற்குள்ளாக, பிப்ரவரி 2003–லே இடத்தை மாற்றி, சென்னை, மெரினா கடற்கரைக்கு வந்து, அங்கே சரித்திர வரலாறுகளாக நின்றுகொண்டிருக்கின்ற கட்டடங்களை இடித்து, அமைக்கப் போகின்றோம் என்று சொல்லி, அங்கே எதிர்ப்புக் கிளம்ப, மற்றுமொரு சரித்திர வரலாறு படைத்திருக்கின்ற கட்டடம் அண்ணா பல்கலைக்கழகம். எனக்கு வாழ்வளித்த கட்டடம். நான் படித்த அந்தக் கட்டடத்தை இடித்து, அங்கே சட்டமன்றம் அமைக்கப் போகின்றோம் என்று சொல்ல, அதையும் வேண்டாமென்று தடுத்து, கடைசியிலே அதைக் கைவிட்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசிய பிறகு பேசலாம், கலைராஜன்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** நான் ஒன்றுமே சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் ஒன்றுமே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கலைராஜன், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**முனைவர் கு. ஜெயக்குமார்:** நான் சட்டமன்றம் வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கு முயன்றது என்பதைத்தான் சொல்கின்றேன். நான் எதையும் தவறாகச் சொல்லவில்லையே! ஆகவே, அவைத் தலைவர் அவர்களே, நல்லதொரு சட்டமன்றம் கட்டப்பட வேண்டும். இங்கே உள்ளே வருகின்றபொழுதுகூட எலிப்பொந்துகளின் வழியாக வருவதைப்போன்ற ஒரு எண்ணம் தோன்றுகின்றது... (குறுக்கீடு)

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான், அவர் பேசிய பிறகு உங்களைப் பேச அனுமதிக்கிறேன்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** எதற்காக இதை நான் சட்டமன்றத்திலே பேசினேன் என்றால், வருகின்ற வழியிலே பச்சைச் சட்டை போட்ட மிலிட்டரிக்காரர்கள் எங்களுடைய வண்டிகளை நிறுத்துவதற்குக்கூட சரியாக அனுமதிப்பது கிடையாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கலைராஜன், நான் பேச அழைக்கிறேன், உட்காருங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** ஆகவே, நல்லதொரு சட்டமன்றம் வேண்டும். அது இந்த நகரின் அடையாளமாக அமைய வேண்டும். அதற்காக ஒரு நல்ல சட்டமன்றத்தை ஏற்படுத்தித் தருவதற்கு நான் அந்தக் கருத்தை இங்கே வைக்கின்றேன் என்று கூறி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் பேச அழைக்கிறேன், உட்காருங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** கடந்த காலங்களிலே சட்டமன்றமானது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** கடந்த 5 ஆண்டுகளிலே சட்டமன்றமானது 188 நாட்கள்தான் நடந்திருக்கின்றது. அதாவது, வருடத்திற்கு 37 நாட்கள். இந்தச் சட்டமன்றமானது சராசரி 65, 66 நாட்களாவது நடக்க வேண்டும். கடந்த காலங்களில் குறைவாக நடந்திருக்கிறது. அதை நிவர்த்தி செய்யும் வகையிலே, சட்டமன்றமானது அதிக நாட்கள் நடப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.



அதுவும் கடந்த ஆட்சியிலே--யாரும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். உண்மையைச் சொல்கின்றேன், உள்ளதைச் சொல்கின்றேன், கண்டதைச் சொல்கின்றேன். நீங்களும் கண்டதைச் சொல்கின்றேன். ஒருவர் மட்டும்தான் அதிகமான நேரம் பேசுவார், இந்தச் சட்டமன்றத்திலே. நான் அரை வினாடி கேள்வி கேட்டால், எனக்கு அரை மணி நேர பதில் வரும். ஆனால், இப்பொழுது அதற்குத் தலைகீழாக நடக்கின்றது. இங்கே நாங்கள் அரை மணி நேரம் கேள்வி கேட்டால், முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அரை நிமிடத்திலே பதில் சொல்லி, நல்ல வாய்ப்பு அளிக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே இந்தச் சட்டமன்றம் நடத்தப்படுவதற்காக 3.42 இலட்சம் ரூபாய் ஒரு நாளைக்குச் செலவு செய்யப்பட்டு, இந்தச் சட்டமன்றத்திலே ஒலித்த வார்த்தைகளெல்லாம் உங்களுக்குத் தெரியும். 'காலி டப்பா' என்றும், 'போக்கிரித்தனமான பொய் சொல்கின்றார்கள்' என்றும், 'குழாய்ச் சண்டைக் கோமாளிகள்' என்றும், ஒன்றைக் கண்டிப்பாகச் சொல்ல வேண்டும், 'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது' என்ற வார்த்தை இந்தச் சபையிலே உச்சரிக்கப்பட்டது. அதுவும், இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த ஒரு கட்சியைப் பார்த்து இந்தச் சட்டசபையிலே உபயோகிக்கப்பட்டதை நான் தவறு என்றுகூடச் சொல்லவில்லை, ஆனால், அவைக் குறிப்பிலே அது ஏற்றுக்கொள்ளப்பட்டது, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை' என்று. ஆனால், இன்றைக்கு நான் சொல்கின்றேன், அவைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தையைச் சபைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று அன்று சொன்னபோது, அன்றைக்கு இந்தச் சபையின் வழிகாட்டியாக இருந்த முதல்வர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று தெரியுமா? கழுதை என்பது நல்ல வார்த்தைதானே! அதற்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள்? கழுதையை எதற்கு உதாரணமாகச் சொல்வார்கள்? கடினமாக உழைப்பவர்களைத்தான் கழுதை என்று சொல்வார்கள் என்ற வியாக்கியானத்தை இந்தச் சட்டமன்றத்திலே அன்றைய முதல்வர் அவர்கள் எடுத்து வைத்தார்கள்.

இங்கே தயவுசெய்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சகோதரர்களைக் கேட்டுக்கொள்கின்றேன், கோபித்துக்கொள்ள வேண்டாம். ** (கூச்சல்-குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, நான் அடுத்த உறுப்பினரை அழைப்பேன். (குறுக்கீடுகள்) சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** சட்டமன்றத்தைப் பற்றி, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இங்கே சட்டமன்றத்திலே இருக்கின்ற அவை உறுப்பினர்கள் எல்லோருமே என்னைக் கேட்டுக்கொண்டார்கள். (குறுக்கீடுகள்) நான் ஒன்றுமே சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவையில் சொன்னதைச் சொன்னேன். நடந்ததைச் சொன்னேன். (குறுக்கீடுகள்) சொன்னதைச் சொல்கின்றேன். சபையில் நடந்ததைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் சொல்லுங்கள், தடுத்து நிறுத்துங்கள், தேவை இல்லாதது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஜெயக்குமார், place your arguments in a positive manner, please. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) நான் restrict பண்ணுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உட்கார்ந்து என்ன செய்வது? (குறுக்கீடு)

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு என்னிடத்தில் பல கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Please conclude, ஜெயக்குமார். உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 43,000 ரூபாய், மராட்டிய மாநிலத்திலே 30,500 ரூபாய், இமாச்சல் மாநிலத்திலே... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அவர் நமக்காகப் பேசிக்கொண்டிருக்கிறார். நம்முடைய நன்மைக்காகப் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இங்கே பயணப் படி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. சட்டமன்ற உறுப்பினருடைய நன்மைக்காகப் பேசுகிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) கேட்போம். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**முனைவர் கு. ஜெயக்குமார்**: ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுககு இந்த அளவிற்கு மற்ற மாநிலங்களிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிப் பேசுகிறார். உட்காருங்கள். எல்லோருடைய நன்மைக்காகவும்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**முனைவர் கு. ஜெயக்குமார்**: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுகின்றது. அந்த அளவிலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் உட்காரச் சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்) நான் உட்காரச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள்.

(திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவையின் மையப் பகுதிக்கு வந்தார்)

Mr. ஜெயராமன், நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இடத்திற்குப் போங்கள். தேவையில்லாமல் இந்த மையப் பகுதிக்கு நீங்கள் வர வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் போங்கள். Please, நீங்கள் போங்கள். (குறுக்கீடுகள்) ஏதாவது ஆட்சேபணை இருந்தால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கவனத்திற்குக் கொண்டு வரட்டும். அவர் பேசலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Please, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் அது பற்றிச் சொல்லட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-40

**முனைவர் கு. ஜெயக்குமார்:** ஆக, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரே ஒரு செய்தி. ஏற்கெனவே சொல்லப்பட்ட வார்த்தையைத் திரும்பச் சொல்வதனால், அவர் கூறிய வார்த்தையை நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கருத்துகளைச் சொல்லலாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குப் போங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள், தொடர்ந்து அவர் பேச ஆரம்பித்ததிலிருந்து, விவாதத்திற்குரிய வார்த்தைகளாக இங்கே பேசி (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். எல்லோரும் அமைதியாக இருங்கள். நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** •• வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். •• (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் குறுக்கிட்டுப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குறுக்கிட்டுப் பேசக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** •• இங்கு அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கின்றேன்.

•• மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசப்பட்ட வார்த்தை கழுதை என்பது வேறு. ஒரு வேளை அந்த வார்த்தையை •• என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வதுபோல அந்த வாசகம் இருக்குமானால், அதை நம்முடைய அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். கழுதை என்ற வார்த்தையைச் சொல்வது வேறு. •• அந்தத் தொடர் யாரையும் குறிப்பதாக இருக்குமானால், வாக்கியம் இருக்குமானால், அதைத் தாங்கள் தாராளமாக நீக்கிவிட்டு, அவையைத் தொடர அனுமதிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவை முன்னவர் பேராசிரியர் சொன்னதை நானும் வழிமொழிகிறேன். ஆனால் ஒன்று. இதே அவையில் 'கழுதை என்ற வார்த்தை அவைக் குறிப்பிலே இடம் பெறக்கூடாது' என்று எதிர்கட்சிகளின் சார்பாக சொன்னபோது, அன்றைய அவைத் தலைவர் திரு. காளிமுத்து அவர்கள், 'அவைக் குறிப்பிலே அது இடம் பெறாது' என்று பத்திரிகையாளர்களுக்கும், நிருபர்களுக்கும் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார். சொன்ன பிறகு, அன்றையதினம் அம்மா அவர்கள் எழுந்து, 'கழுதை என்பது உழைக்கும் சின்னம்தான், அது அவைக் குறிப்பிலே இருக்கலாம்' என்று சொன்ன பிறகு, உடனே காளிமுத்து அவர்கள், 'ஆமாம், ஆமாம், அது உழைக்கும் சின்னம் ஆகவே, அது அவைக் குறிப்பிலே இருக்கலாம்' என்று சொல்லியிருக்கிறார். இதையும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், அதையும், நம்முடைய அவை முன்னவர் பேராசிரியர் சொன்னதையும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது தற்காலிகமாக, அதனால் ஒரு பிரச்சினை வரக்கூடாது என்பதற்காக, இப்போது மாத்திரம் அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம். அந்தக் கழுதையை விரட்டிவிடலாம். (மேசையைத் தட்டும் ஒலி) (பலத்த சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** •• அவைக் குறிப்பில் அது பதிவு செய்யப்பட்டிருந்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

•• மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*முற்பகல் 11-45*

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் அந்த எண்ணத்திலே கண்டிப்பாகப் பேசவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், 20 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குக் கொடுத்தது 10 நிமிடம் தான். *(குறுக்கீடு)* No, no, no.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கட்சிக்கு அப்பாற்பட்டு என்னிடத்திலே பல கோரிக்கைகளை வைத்து, உங்களுக்குச் சமர்ப்பிக்கச் சொன்னார்கள். உங்கள் வாயிலாக அரசுக்கு எடுத்து வைக்கச் சொன்னார்கள். ஆந்திர மாநிலத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 13 ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுகின்றது என்றும், மராட்டிய மாநிலத்திலே 30,500 ரூபாய் என்றும், இமாச்சலப் பிரதேசத்திலே 30 ஆயிரம் ரூபாய் என்றும், உத்தரப் பிரதேசம்—உத்தரப் பிரதேசத்தைப் பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். உத்தரப் பிரதேசத்திலே 30 ஆயிரம் ரூபாய் என்றும் வழங்கப்படுகின்றது. இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதோடு, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் தங்களுக்கு Laptop Computer வேண்டும் என்றார்கள். அதைச் செய்து கொடுத்தால், அவர்கள் பணியாற்ற சிறப்பாக இருக்கும் என்றும், குடும்ப ஓய்வூதியம் 1-4-1999-க்குப் பிறகு இறந்தவர்களுக்குத்தான் என்று சொல்கின்றார்கள். எப்பொழுது இறந்திருந்தால் என்ன? ஓய்வூதியம் கொடுக்கப்படுவது, குடும்பத்திற்கு இந்தத் தேதி வரைமுறை இல்லாமல் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்றும், இங்கே இருக்கின்ற அவைத் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், 21 நிமிடங்கள் ஆகி இருக்கின்றன.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no, no. *(குறுக்கீடு)*

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மேலும், அரசுக் கொறடா அவர்களுக்கும் 100 லிட்டர் பெட்ரோல் கொடுக்கின்றார்கள். (குறுக்கீடு) உங்களுக்கும் சேர்த்துப் பேசுகின்றேன். உங்களுக்கு 100 லிட்டர் பெட்ரோல்,



கொறடாவுக்கு 100 லிட்டர் பெட்ரோல். நாங்களெல்லாம் தொகுதியைச் சுற்றி வருகின்றோம். காசு கொடுங்கள் என்று கேட்கவில்லை. வண்டிக்கு ஒரு ஐம்பது லிட்டர் பெட்ரோல் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று உங்களை நான் கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பயணப் படியைப் பொறுத்தமட்டில் ரூபாய் 250-ஐ 400 ரூபாயாக மாற்றிக் கொடுத்திருக்கின்றீர்கள், நன்றி. வெளியூருக்குச் செல்லும்போது, ஏற்கெனவே 400 ரூபாயாக இருந்தது. ஆகவே, வெளியூருக்கு வேண்டிய பயணப் படியையும் அதற்கேற்றாற்போல் நீங்கள் உயர்த்த வேண்டும் என்று சொல்லி, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு, நிதித் துறையைப் பற்றி இந்த அவையிலே ஏற்கெனவே பேசினோம். 28 ஆயிரம் கோடி ரூபாய் கடனானது, 56 ஆயிரம் கோடி ரூபாயாக ஆனது. கடந்த முறை ஆட்சிப் பொறுப்பேற்றபோது இந்த அவையிலே ஒரு வெள்ளை அறிக்கையை வைத்தார்கள். அந்த வெள்ளை அறிக்கையின்மூலமாகப் பல கருத்துகளை நாம் தெரிந்துகொண்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. *(குறுக்கீடு)*

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இப்பொழுதுகூட ஒரு வெள்ளை அறிக்கையைக் கொடுத்திருக்கலாம் என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உரையை முடியுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, political and social realities determine the trajectory of economy. அந்த வகையிலேதான் இந்த அரசு அறிவித்திருக்கின்ற அறிவிப்புகளெல்லாம் இந்த நாட்டின் பொருளாதாரத் துறையை, பொருளாதாரப் பாதையை நிர்ணயிக்கும், வழிவகுக்கும் என்ற வகையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி. (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், உரையை முடியுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இன்றைக்கு அரசுக்குச் சொல்லி... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, நீங்கள் அமைதியாக இருங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** ஒரே ஒரு கருத்தை மட்டும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விருப்பப்படுகின்றேன்.

இன்றைக்கு இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். 1 கோடியே 44 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. இதில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கின்ற குடும்பங்களுக்கு மட்டும் நீங்கள் ஒதுக்கியிருக்கின்ற நிதியை வைத்தால் இனாமாகவே அரிசி கொடுக்கலாம் என்று எனக்குத் தோன்றுகின்றது. வறுமைக் கோட்டிற்குக்கீழாக 30 சதவிகிதம் குடும்பங்கள் இருக்கின்றன என்று எடுத்துக்கொண்டாலும், 44 இலட்சம் குடும்பங்கள். 44 இலட்சம் குடும்பங்களுக்கு 30 கிலோ அரிசி என்று மத்திய அரசின் விலையிலேயே 5 ரூபாய் 50 காசு, என்று எடுத்துக்கொண்டாலுங்கூட, உங்களுக்கு 871 கோடி ரூபாய்தான் வருடத்திற்கு வரும். ஆனால் நீங்கள் 1,950 கோடி ரூபாயை உணவு மானியத்திலே கொடுத்திருக்கின்றீர்கள். அது அரிசிக்கு மட்டும் அல்ல என்று எனக்குத் தெரியும். மற்ற பொருட்களுக்கும் சேர்ந்ததுதான். இருந்தாலும், இனாமாக என்று சொல்லக்கூடாது என்று முதல்வர் சொல்லி இருக்கின்றார். இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்றாலுங்கூட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். அடுத்து, திரு. மணி. (குறுக்கீடு)

**முனைவர் கு. ஜெயக்குமார்:** 30 கிலோ அரிசியை இலவசமாகக் கொடுத்தால், 871 கோடி ரூபாய்தான் உங்களுக்கு மானியமாக வரும் என்பதைக் கூறி, மற்றவற்றை எழுதிக் கொடுத்துவிடுகின்றேன் என்பதையும் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய 5 மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்ற நேரத்தில் நம்முடைய வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் இதுவரையிலே இல்லாத அளவிற்கு, சட்டமன்றத்தில் இடம் பெற்றிருக்கிற தோழமைக் கட்சிகள், எதிர்க்கட்சிகள் ஆகிய



அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உரிய விதத்தில் முக்கியத்துவம் கொடுக்கிற வகையிலேயும், அதே நேரத்தில் விதிகளை, மரபுகளை, மாண்புகளைக் கடைப்பிடித்து, சட்டமன்ற ஜனநாயகத்தை நிலைத்து நிற்கச் செய்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவருக்கு வழிகாட்டியாக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சரவைக்கும், நான் இந்த மன்றத்தைப் பாராட்டி முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

கடந்த காலங்களிலே இந்தச் சட்டமன்றத்திற்குச் சிறப்புகளும், மாண்புகளும் இருந்தன; இடைப்பட்ட காலத்தில் சற்றுக் குறை ஏற்பட்டாலும்கூட, அந்த இடத்தை நிறைவு செய்யக்கூடிய வகையில், அந்தத் தொய்வு வெற்றிடத்தை மீண்டும் நிலை பெறச் செய்யக்கூடிய வகையில் இதுவரையில் இல்லாத அளவிற்கு சட்டமன்ற ஜனநாயகம் காக்கப்படுகிறது, நிலை நிறுத்தப்படுகிறது என்பதை மீண்டும் இங்கே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, நம்முடைய சட்டமன்ற நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. எதிர்க்கட்சிகளை மதிக்கிற ஒரு பாங்கு என்பதற்கு எடுத்துக்காட்டு, நம்முடைய கலசப்பாக்கம் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே இடைநீக்கம் செய்யப்பட்டார்கள். அப்படி இடைநீக்கம் செய்யப்பட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த அவையில் சொல்லி, மீண்டும் அவரை அவைக்கு வர அனுமதித்து, சட்டமன்ற ஜனநாயகத்திலே தொகுதி மக்களுக்குப் பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைத்து, அவைக்குள் அழைத்தது, எதிர்க்கட்சியை மதிக்கிற ஒரு பாங்கு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இது மதிக்கிற சட்டமன்றம் என்பதை நான் மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, அமைச்சரவையைப் பொறுத்தவரையில், ஆற்றலும், அனுபவமும் மிக்க முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே நம்முடைய அமைச்சரவை மிகச் சிறப்பாகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், இதுவரையில் இல்லாத அளவிற்கு, அரசு நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் பங்கேற்கிற நிகழ்வுகள் என்பவை, ஆடம்பரம் இல்லாமல் எளிமையாக நடக்கக்கூடிய

நிகழ்ச்சிகளைப் பார்த்து, சிக்கன நடவடிக்கைக்கு நம்முடைய அமைச்சரவை எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை மீண்டும் நான் இங்கே அமைச்சரவையைப் பாராட்டிச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இப்படிச் சிக்கன நடவடிக்கையை அமைச்சரவை பின்பற்றுகிற நேரத்தில், அமைச்சர்கள் தொடர்ந்து அதை நிறைவேற்றுகின்ற நேரத்தில், நாட்டு மக்களும் உணர்வார்கள்; இது எளிமையான அமைச்சரவை, மக்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு நல்ல அரசு என்பதை எடுத்துக் காட்டக்கூடிய வகையிலேதான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது என்பதை மீண்டும் ஒரு முறை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இப்படி எளிமையாக, ஆடம்பரம் இல்லாமல் பணியாற்றக்கூடிய அமைச்சர்களுக்குச் சம்பளத்தைச் சற்றுக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், பயணப் படி போன்றவற்றையெல்லாம் கூடுதலாக வழங்க வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

அதே நேரத்தில், நம்முடைய சட்டமன்ற நிகழ்வுகளை நாட்டு மக்கள் நேரடியாகப் பார்க்க வேண்டும் என்பதற்காக, தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்ய வேண்டுமென்பதையும் நான் வேண்டுகோளாக வைக்கிறேன்.

அதே நேரத்தில், அமைச்சர்கள் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள். அந்தத் துறையினுடைய அதிகாரிகள் மேலும் சிறப்பாகச் செயலாற்றுவதற்கு, அதிகாரிகளுக்கு ஆலோசனை சொல்வதற்கு, துறை செவ்வனே இயங்குவதற்கு, ஒவ்வொரு துறைக்கும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டுமென்ற ஆலோசனையை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, இன்னும் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் நிறையக் கோரிக்கைகளை வைத்ததாகச் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு, வட்ட அலுவலகத்திற்கு ஈப்புகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரு தொகுதியைச் சுற்றி வரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னைக்கு வர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு வாகனம் இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நிறையச் சட்டமன்ற உறுபபினாகள் எதிர்பார்த்திருக்கிறார்கள், கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, ஒரு சட்டமன்றத்



தொகுதிக்கு ஒரு மகிழுந்து, அதாவது கார் வழங்கக்கூடிய நிலையை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எதிர்பார்க்கிறார்கள். 5 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றுகிறார்கள், பணிக் காலம் முடிந்த பிறகு, மீண்டும் அந்த வண்டியை, வாகனத்தை அங்கேயே விட்டுச் செல்லக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு ஒரு வாகனம் என்ற வகையில், ஒரு மகிழுந்து வழங்க வேண்டும்.

அதே நேரத்தில், அவர்கள் பணியைச் செவ்வனே செய்வதற்கு, சென்ற இடங்களில் கடிதம் கொடுப்பதற்கு, கடிதத் தொடாபு வைத்துக்கொள்வதற்கு நீங்கள் laptop வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நிறையப் பேர் சொன்னார்கள். நாங்கள் அதிகாரிகளைச் சந்திக்கிற நேரத்தில், சில அதிகாரிகள் மரபுகளைக் கடைப்பிடிப்பது இல்லை, எங்களைக் கொச்சைப்படுத்துகிறார்கள், இழிவுபடுத்துகிறார்கள் சில அதிகாரிகள் என்ற ஒரு மனக்குறையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர்களுக்கு இணையானவர்கள் என்று மரபு சொல்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களை மதிக்கத்தக்க வகையில் மரபுகளைப் பின்பற்ற வேண்டும் என்ற வேண்டுகோளையும் இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்தது தேர்தல். சட்டமன்றத்திற்கு, உள்ளாட்சிகளுக்குத் தேர்தல் மிக முக்கியமானது. தேர்தல் நேரத்திலே செலவு அதிகமாகிறது, செலவைக் கட்டுப்படுத்த வேண்டும். இன்னொன்று பார்த்தீர்களென்றால், இந்தச் செலவுதான் ஊழலுக்கும் வழி வகுக்கிறது. ஆகவே, நான் தொடர்ந்து இந்த மன்றத்திலே சொல்லிக்கொண்டிருக்கிறேன். 10 ஆண்டு காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அது உள்ளாட்சித் தேர்தலாக இருந்தாலும், சட்டமன்றப் பொதுத் தேர்தலாக இருந்தாலும், நாடாளுமன்றப் பொதுத் தேர்தலாக இருந்தாலும், தேர்தல் செலவைத் தேர்தல் ஆணையமே ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கே போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள், அவர் சுயேட்சையாக இருந்தாலும், அரசியல் கட்சியாக இருந்தாலும், ஒரு தொகையை முன்வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும். மீதித் தொகையைத தேர்தல் ஆணையமே வழங்கி, வாகனங்கள், சுவரொட்டி, துண்டறிக்கை

போன்ற எல்லாச் செலவினங்களையும் தேர்தல் ஆணையமே ஏற்றுக்கொண்டால், தேர்தல் செலவில்லாமல் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், பணியாற்றுவார்கள். ஊழலுக்கே வழி இருக்காது. ஆகவே, இந்த ஊழலை முக்கோண வடிவத்தில் சொல்கிறார்கள். ஒன்று தேர்தல், அடுத்து, அதிகாரிகள், மக்கள் பிரதிநிதி என்று இந்த மூன்றும், ஒன்றை ஒன்று பிணைந்து இருக்கின்றன. ஆகவே, ஊழல் இல்லாமல் இருப்பதற்கு அடித்தளமாக இருக்கிற தேர்தலை நாம் செழுமைப்படுத்த வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11-55*

உள்ளாட்சி, கையேந்தி நிற்கும் அமைப்பாக இருக்கிறது. அதிகாரம் இல்லாத, நிதியாதாரம் இல்லாத, கையேந்தி நிற்கும் அமைப்பாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் இருக்கிறது, அதிக அதிகாரம் வாய்ந்த அமைப்பு. மாநில அரசாங்கம் இருக்கிறது, அதைவிடச் சற்று அதிகாரம் குறைந்திருக்கிறது. ஆனால், உள்ளாட்சிக்கு அதிகாரம் இல்லை. உள்ளாட்சி என்பது அரசாங்கத்தைப்போல இயங்க வேண்டும். மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், உள்ளாட்சி அரசாங்கம் என்ற நிலையில், அதற்குக் கூடுதல் அதிகாரம் வழங்க வேண்டுமென்ற வகையில் உள்ளாட்சியை நாம் செழுமைப்படுத்த வேண்டும். அதே நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும், மாநிலங்களுக்கு இன்னும் கூடுதல் அதிகாரத்தை மத்தியிலிருந்து பெற வேண்டும். அதுதான் மாநில சுயாட்சியை மேலும் செழுமைப்படுத்தும் என்ற காரணத்தாலே, கூடுதல் அதிகாரத்தைக் கேட்டுப் பெற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று, மாவட்டங்களைப் பிரித்தல். இதைப் பற்றி நாங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறோம். முதலமைச்சரிடத்திலே நாங்கள், ஆண்டுதோறும் வெளியிடக்கூடிய வரைவு நிதிநிலை அறிக்கையில்கூடச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இது 6 தொகுதிகளை உள்ளடக்கியது. ஒரு நாடாளுமன்றத் தொகுதியைப்போல, ஒரு மாவட்டமாகப் பிரித்தால், அது எளிமையான நிருவாகத்திற்கு வழிவகுக்கும். அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பார்த்தால், பொது மக்கள் மனுக் கொடுத்தாலும் சரி, அல்லது எந்தத் துறையில் சட்டமன்ற உறுப்பினரும்,



நாடாளுமன்ற உறுப்பினரும், பொது மக்கள் பிரதிநிதிகள் மனுக் கொடுத்தாலும் அந்த மனுவுக்குப் பதில் வருவதில்லை. என்ன நடவடிக்கை, என்ன ஆயிற்று என்று தெரிவதில்லை. ஆகவே, மக்கள் பிரதிநிதிகளாக இருந்தாலும், மனுக் கொடுக்கின்றபோது அந்த மனுவின்மீது உரிய நடவடிக்கையை எடுத்து, அந்த மனுவுக்குப் பதில் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல நிலையை உருவாக்க வேண்டும். இதற்கு முன்னாலேகூட, அங்கே மனு நீதி நாட்கள், மக்கள் குறை தீர்க்கும் நாள் என்று நடைபெற்றன. இப்போது அது செழுமையாக இல்லை. அந்த நிலையை மீண்டும் உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது பார்த்தால், கடந்த காலங்களைவிட இப்போது பரவாயில்லை. முதலமைச்சரின் சிறப்புப் பிரிவு, தனிப் பிரிவு இருக்கிறது. அங்கே மனுக் கொடுத்தால், கொஞ்ச நாட்களிலேயே பதில் வந்துகொண்டிருக்கிறது. அதை இன்னும் விரைவுபடுத்த வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தனி மனிதனுடைய வாழ்க்கைக்கும், சமுதாய மேம்பாட்டுக்கும் இட ஒதுக்கீடு முக்கியம் என்று சொல்கிறோம். ஆனால், கடந்த *1996–2001*–ல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இட ஒதுக்கீட்டுக்கு முக்கியத்துவம் அளித்து, இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றாத அதிகாரிகள்மீது கடுமையான குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்பொழுதும் பரவலாகக் குறை இருக்கிறது. இட ஒதுக்கீட்டை முழுமையாகக் கடைப்பிடிக்காத அதிகாரிகள்மீது நீங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்துக் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுவை உருவாக்க வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல ஓய்வூதியம். முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ரொம்ப சிரமத்தில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குக் கூடுதலாக ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓய்வு பெற்ற அரசு ஊழியர், ஆசிரியர்கள் எல்லாம் ஓய்வூதியம் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். நாங்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பே கேட்டிருந்தார்கள். கேட்டதும் கொடுக்கப்படும், கேளாமலும் கொடுக்கப்படும் என்பதற்கு ஏற்றவர்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் என்பதற்கு இலக்கணம், ஏற்கெனவே ஓய்வூதியத்தை விதி *110*–ன்கீழ் அறிவித்திருப்பது நமக்கெல்லாம்

மகிழ்ச்சியாக இருக்கிறது என்பதையும், இந்த நேரத்தில் ஓய்வு பெற்ற அனைத்து அரசு ஊழியர்கள் சார்பிலேயும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஓய்வு பெற்ற காலத்திற்குப் பிறகு, சிலர் ஓய்வூதியம் வரவில்லையென்று குறை சொல்கிறார்கள். ஏதாவது ஒரு சிறிய குறை இருக்கிறது. அந்தக் குறை களையப்படவில்லை. அந்தக் குறையை, முறையற்ற காரணங்களைக் காட்டி ஓய்வூதியத்தைத் தள்ளிப் போடுவதை நீங்கள் வேகப்படுத்தி, விரைவாக ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சுதந்திரப் போராட்டத் தியாகிகள், மொழிப் போர்த் தியாகிகள் ஆகியவர்களுக்கு ஓய்வூதியம் ரொம்பக் குறைவாக இருக்கிறது மருத்துவப்படி குறைவாக இருக்கிறது. அவர்களுக்குக் கூடுதலாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். மொழிப் போர்த் தியாகிகள், சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கெல்லாம் ஓய்வூதியம் வழங்கிக்கொண்டிருக்கிறோம். இட ஒதுக்கீட்டுப் போராட்டத்திலே நிறையப் பேர் உயிரிழந்து இருக்கிறார்கள். பல பேர் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். மாதக் கணக்கிலே சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது சமூக நீதிக்கு வித்திட்ட அரசு, தந்தை பெரியார் வழி வந்த அரசு என்ற காரணத்தால், இட ஒதுக்கீட்டுப் போராட்டத்திலே இறந்தவர்கள் குடும்பங்களுக்கு, சிறைக்குச் சென்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று நான் இங்கே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அது மட்டுமல்லாமல், தமிழக வரலாற்றில் இதுவரையிலே இல்லாத அளவுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, மத்தியத் திட்டக் குழுவிடம் கூடுதலான நிதியைப் பெற்று, திட்டப் பணியை விரைந்து நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தமைக்கு, கூடுதல் நிதியைப் பெற்றமைக்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, திட்ட வளர்ச்சித் துறை என்ற மானியக் கோரிக்கையிலே நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நிதிச் சீர்திருத்த நடவடிக்கை 50 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இருந்தாலுங்கூட, நிதி ஆதாரத்தைப் பெருக்குவது, வரியே விதிக்காமல், வரி இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையை வழங்கி, நல்ல சீர்திருத்த நடவடிக்கையை, நிதி ஆதாரத்தைக் கையாண்டிருக்கிற நம்முடைய நிதி



அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த நேரத்திலே நான் பாராட்டுகிறேன்.

கருவூலங்கள், கணினிமயமாகாமல் இருக்கிற சில கருவூலங்களைக் கணினிமயமாக்கித் தலைமைக் கருவூலத்தோடு இணைக்க வேண்டும். அப்போதுதான் நேரடியாகக் கண்காணிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எல்லாம் கேட்கிறார்கள். வீட்டு வாடகைப்படி மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக இருக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அதையும் வழங்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய சட்டமன்றச் செயலகத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் நீண்ட காலமாக நிரந்தரமில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். ஊதிய உயர்வு வழங்க வேண்டும். அது மட்டுமல்லாமல், சட்டமன்றம் கூடும் நாட்களில் காலையிலே 6 மணிக்கு வருகிறார்கள். இராத்திரி 11, 12, 1 மணிக்குக்கூட போகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு, சட்டமன்றம் கூடும் நாட்களில் வழங்கக்கூடிய படியைக் கூடுதலாக வழங்க வேண்டும். தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றச் செயலகம், சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்திலே பணியாற்றக்கூடிய நிருபர்கள், சுருக்கெழுத்தர்கள் பணியினுடைய தன்மை கடினமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஊதியம், படி, இரண்டையும் கூடுதலாக வழங்கி, தலைமை நிருபர் பதவி உயர்விலே, அங்கே பணிமூப்பு அடிப்படையிலே பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு இருக்கின்ற பிரச்சினையாக, அவர்கள் சொல்வது என்னவென்றால், இங்கே சம்பளத்தையும், படியையும் வாங்குவதற்கு நாங்கள் வங்கிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது; இதிலே பல்வேறு பிரச்சினைகள், சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, வங்கியிலே பெறுவதைத் தவிர்த்து, நாங்கள் துறை அதிகாரிகள்மூலம் அவற்றைப் பெறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதை நம்முடைய அரசு விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீண்ட நாட்களாகச் சிறையில் வாடிய கைதிகளை அண்ணா பிறந்த நாளில் விடுதலை செய்வதற்கு 10 ஆண்டு என்று நிர்ணயித்து இருக்கிறார்கள், வழங்கினார்கள். அது வரவேற்கக்கூடியது, பாராட்டுகிறோம். ஆந்திரம், கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்களிலே 8 ஆண்டுகள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, 10 ஆண்டு என்பதை 8 ஆண்டாகக் குறைத்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினை. இப்போது நம்முடைய சென்னை மாநகர் என்பது இந்தியத் திருநாட்டிலே மிக முக்கியமான ஒரு மாநகரம். சென்னை, கொல்கத்தா, மும்பை, டெல்லி, இந்த நான்கும் பிரசித்தி பெற்ற நகரங்கள். இவற்றிலே சென்னை மிக முக்கியமான நகரம். இன்று காலச் சூழ்நிலைக்கேற்ப மக்கள் தொகைப் பெருக்கம் அதிகம். போக்குவரத்து நெரிசல் அதிகம். ஆக, இப்படிப்பட்ட மாநகரத்தை விரிவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆகவே, இந்த மாநகரை விரிவுபடுத்தக்கூடிய வகையில் துணை நகரம் அமைக்க வேண்டியது அவசியம் தேவை என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நானும் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதே வேளையில், இங்கே இந்தத் துணை நகரம் வரும் என்று ஆரம்பத்திலே சொல்லப்பட்ட செய்தி, 55 ஆயிரம் ஏக்கர் எடுக்கப்படும்; அதிலே இருக்கிற வீடுகளெல்லாம், கிராமங்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்படும். அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும் என்ற செய்திகள் எல்லாம் வந்தன. அதற்குப் பிறகுதான் அங்கே இருக்கிற இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள், திரு. ஆறுமுகம் அவர்களிடத்திலேயும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற முன்னாள் அமைச்சர் மூர்த்தி அவர்களிடத்திலேயும் சென்று, தினந்தோறும் மக்கள் முறையிட்டார்கள். நாங்கள் எல்லாம் உங்கள் வீட்டு முன்னால் சாகப் போகிறோம், தற்கொலை செய்துகொள்ளப் போகிறோம். நீங்கள் ஏதாவது எங்களுக்கு வழி செய்ய வேண்டுமென்று சொல்லிக் கேட்டார்கள். அவர்களும், எங்களுடைய நிறுவனத் தலைவர், மருத்துவர் அய்யா அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். சில பேர், தினமும் காலையிலும், மாலையிலுமாகத்



தைலாபுரம் தோட்டத்திற்குச் சென்றும் சொன்னார்கள். அதைப் பார்த்த மருத்துவர் அய்யா அவர்கள் நேற்று, இங்கே வர வேண்டாம், நீங்கள் எல்லாம் அங்கேயே இருங்கள், உங்களைச் சந்திக்கிறோம் என்று சொன்னார்கள். ஒரு இடத்திலே ஏறக்குறைய 6 ஆயிரம், 7 ஆயிரம் பொது மக்கள் கூடினார்கள். அந்த இடத்திலே அவர்கள் எல்லாம் உணர்ச்சிபூர்வமாக உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் சொல்லியது, நாங்கள் இங்கேயே இருக்கிறோம், இரண்டு தலைமுறை, மூன்று தலைமுறை, நான்கு தலைமுறைகளாக நாங்கள் இங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறோம், இங்கிருந்து தயவுசெய்து எங்களை அப்புறப்படுத்தாதீர்கள். அதிலே, நிறையப் பேர் அவரவர்கள் கோணங்களில் சொன்னார்கள்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவல்களை, பொறுப்பிலே இருக்கின்ற நாமே பரப்பக் கூடாது என்பதை நான் மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேற்றையதினம் இங்கே 110–வது விதியின்கீழ் ஒரு அறிக்கை படிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் எல்லா விவரமும் தரப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் அந்தப் பகுதியிலே உள்ள நிலத்தில், நாம் பயன்படுத்துவதாக இருப்பது, எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் பயன்படுத்துவதாக இருப்பது, 30 ஆயிரம் ஏக்கர்தான்; ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அல்லது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில். அதிலும், அங்கேயிருக்கின்ற எந்த வீட்டிற்கும், ஒரு சிறிய அளவிலேகூட பாதிப்பு வராமல், எல்லா வீடுகளையும் அப்படியே விட்டுவிடுவது, பயிர் பச்சைகள் இருந்தால், விவசாய நிலங்கள் இருந்தால், அதைத் தொடுவதில்லை என்கிற அளவிற்கு நாம் குறிப்பிட்டிருக்கின்றோம். அது மாத்திரமல்லாமல், நீர்வளம் உள்ள இடங்கள், அவற்றையும் எடுப்பதில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றோம். கோயில், குளங்கள், அவற்றையும் நெருங்குவதில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வளவு சொன்ன பிறகும், ஏதோ அங்கே இருப்பவர்களை எல்லாம் விரட்டியடிக்கப் போகிறோம் என்று சொல்வதும், அதை மிகப் பிரபலமான நாடாளுமன்ற உறுப்பினர் மூர்த்தியிடத்திலும், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலும், நண்பர் மணி போன்றவர்களிடத்திலும் வந்து மக்கள் முறையிட்டார்கள் என்றால், என்னைக் கேட்டிருக்கலாம் வந்து.

என்னிடத்திலே வந்து இப்படி நடக்கப் போகிறதா, இப்படி வதந்தி பரவுகிறதென்றால், அது வதந்திதான், உண்மையல்ல என்பதை நான் விளக்கியிருப்பேன்.

அது மாத்திரமல்ல, இதற்கான இந்த அறிவிப்பை, நேற்றையதினம் 110-வது விதியின்கீழ் அறிக்கையைப் படிப்பதற்கு முன்பே, எல்லாக் கட்சித் தலைவர்களிடத்திலும்—தோழமைக் கட்சித் தலைவர்களைக் குறிப்பிடுகிறேன்—காங்கிரஸ் கட்சித் தலைவரிடத்தில், அதைப் போலவே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், இருவரிடத்திலும் இங்கே பேசியது மாத்திரமல்ல, அவர்களுடைய கட்சிகளின் தலைவர்களிடத்திலும் பேசப்பட்டிருக்கிறது. ஓரே ஒரு தவறு நடந்துவிட்டதாகக் கருதுகிறேன். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மணியிடத்திலும் பேசிவிடுங்கள் என்று நான் வீராசாமியிடத்திலே சொல்லியிருந்தேன். அவர் என்னிடத்திலே, அவருடன் நானும் பேசிவிட்டேன், அவர் சம்மதித்துவிட்டார் என்று சொன்னார். அது எந்த அளவிற்கு உண்மை அல்லது உண்மைக்கு மாறானது என்பதை மணிதான் சொல்ல வேண்டும். அவர் பேசிவிட்டேன், சம்மதித்துவிட்டார் என்று சொன்ன பிறகுதான், நீங்கள் கவனித்திருக்கலாம், நேற்றுக் காலையிலேகூட நான் அறிக்கையைப் படிப்பதற்கு முன்பு, உங்களைப் பார்த்துத் தலையாட்டிவிட்டு, படிக்கலாமா என்று கேட்டுவிட்டுத்தான் படித்தேன். அதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. இப்போது, நேற்று மாலையிலே கூட்டம் நடைபெற்ற பிறகு மனதை மாற்றிக்கொண்டால், அதற்கு நான் பொறுப்பாளியல்ல.

என்ன செய்திருக்க வேண்டும்? ஒரு தோழமைக் கட்சியினுடைய தலைவர், இந்தச் சட்டமன்றத்திலே இடம் பெற்றிருப்பவர், அடிக்கடிப் பேசக்கூடிய வாய்ப்பும், அந்த அளவிற்கு உரிமையும் உள்ளவர், என்ன இப்படிச் செய்தி வந்திருக்கிறதே, வதந்தி பரவுகிறதே, உண்மையா, அங்கு இருப்பவர்களை எல்லாம் விரட்டப் போகிறீர்களா, அங்கேயிருக்கின்ற மக்களுக்கெல்லாம் அங்கே இடம் இருக்காதா, அங்கேயிருக்கிற கோயில், குளங்களையெல்லாம் இடித்துத் தள்ளப் போகிறீர்களா என்று என்னிடத்திலே கேட்டிருந்தால், நான் விவரத்தைச் சொல்லியிருப்பேன்; இப்படி ஒரு வதந்தியைப் பரப்புகிறார்கள் என்று நான் விவரத்தைச் சொல்லியிருப்பேன். என்னிடத்திலே கேட்காமல், 'போர்' என்று சொல்லிவிட்டால், நான் என்ன செய்ய முடியும்? 'போருக்கு நாங்கள் ஆயத்தமாகிவிட்டோம்' என்றுதான் நீங்கள் அறிவிக்கிறீர்களேயல்லாமல், இதிலே உண்மை என்ன என்பதைத் தெரிந்துகொள்ளவே முற்படாததற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகின்றேன். போருக்கு நீங்கள் தயார் என்றால், நானும் தயார். எந்தப் போருக்கு என்றால்,



உங்களோடு ஒத்துப் போகிற போருக்கு நான் தயாராக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒன்றை மறந்துவிடக் கூடாது.

ஒரு 10 ஆண்டு காலத்திற்குப் பிறகுதான் தெரியும். இப்போது இதை விட்டுவிட்டால், இந்த ஏற்பாட்டைச் செய்யாவிட்டால், 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு சென்னையினுடைய சுற்றுப்புறம் என்ன ஆகும், எவ்வளவு நெரிசலாகும் என்பதெல்லாம் அப்போதுதான் தெரியும். முன்கூட்டியே, அண்ணா நகர், கே.கே. நகர், மறைமலை நகர் இவையெல்லாம் உருவான காரணத்தால்தான், இப்போது சென்னையிலே ஓரளவு நெரிசல் குறைந்து இருக்கிறது. நெரிசல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. குறைந்திருக்கிறது என்றுகூடச் சொல்லமாட்டேன், கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்த நெரிசல் மேலும் மிகாமல் இருக்க ஓரளவு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடே தவிர வேறல்ல. இது யாருக்கும், எந்த ஏழை எளியவர்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும், உழைப்பவர்களுக்கும், விவசாயிகளுக்கும் கடுகளவு தொந்தரவும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசுக்கு உண்டு. எங்களை நீங்கள் நம்பி, அந்த மக்களுக்கு உறுதி அளிக்கலாம்.

*பிற்பகல் 12-10*

அடுத்த தேர்தலை எண்ணி நாம் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. தேர்தல் வரும், போகும். ஆனால், மக்கள், நாடு, இது வளமாக இருக்க வேண்டும். அது வசதியாக இருக்க வேண்டும். அயல்நாடுகளிலே எப்படி ஆங்காங்கே ஒரு பெரிய நகரத்துக்குப் பக்கத்தில் சிறு. சிறு நகரங்கள் இன்றைக்கு உருவாக்கப்படுகின்றன என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் கேட்கக்கூடும். அங்கு இருக்கிற வசதிதானா, அங்கு இருக்கிற வளம்தானா இங்கே என்று. இல்லை, எனக்கும் தெரியும். இங்கே இருக்கின்ற மக்கள் எவ்வளவு ஏழை பாழைகள், எப்படி உழைத்துப் பிழைப்பவர்கள், உழுது வாழ்பவர்கள் என்றெல்லாம் எனக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால், அவர்களுக்கு அணுவளவும் ஆபத்து வராமல், எந்தவிதமான சிறு சங்கடமும் வராமல் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. டாக்டர் அய்யா அவர்கள் சொல்லி இருப்பதைப்போல, ஏழையெளிய மக்களுக்கு, விவசாயிகளுக்கு, பாட்டாளிகளுக்கு இந்த ஆட்சி, இந்த 100 நாட்களில் இவ்வளவு நன்மைகளைச் செய்துவிட்டு, கடைசியிலே இப்படி ஒரு தீமையையா செய்யும் என்று கருதுகின்றீர்கள்? நிச்சயமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. ஜெயக்குமார்:** Speaker Sir, Point of order.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மிகுந்த உருக்கத்தோடு, ஆழ்ந்த கருத்துகளை மிகுந்த விளக்கமாகச் சொல்லி இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், முதலமைச்சருடைய கருத்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் துறைக்குண்டான மானியக் கோரிக்கையிலே பேசும்போது, surrender என்கின்ற அந்த வார்த்தை எனக்குப் பிடிக்காது என்று சொன்னார்கள். இன்றைக்கு நான் மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்கின்றேன், ஓத்துப் போகிற போர் என்றால், அவர் P.M.K-யிடம் surrender ஆகிவிட்டதாகத்தானே அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், இதுதான் Point of order-ஆ?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் ரொம்ப அதிகம் ஆங்கிலம் படித்தவன் அல்ல. ஆங்கிலத்திலே பெரிய நிபுணனும் அல்ல. நம்முடைய நண்பர் ஜெயக்குமார் அவர்களுக்கு இந்த ஆங்கிலதனைப் புரிய வைத்து, அவரைத் திருத்த முடியும் என்று நான் நம்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தை மிகுந்த உருக்கத்தோடு சொல்லி இருக்கிறார்கள். நான் அவருடைய எண்ணத்திற்கு, அல்லது மாநகரம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்கு இடையூறாகப் பேசவில்லை, நினைக்கவும் இல்லை. மருத்துவர் அய்யாகூட அந்தக் கூட்டத்திலே சொன்னது, அந்தப் பொது மக்களையெல்லாம் அழைத்து, அவர்கள் வெளியே சென்றுவிடுகிறார்களா, அங்கேயே இருக்கப் போகிறார்களா, எதை, என்ன சொல்கிறார்கள் என்று அறிந்துகொண்டு, முதலமைச்சரிடத்திலே பேசுவோம்—நேற்று திடீரென்று 110 வது விதியிலே சொல்வது தெரியாது. யாருக்கும் தெரியாது. எங்களுக்குக்கூடத் தெரியாது. 110-வது விதியில் என்று சொல்லவில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 110-வது விதியிலே சொல்வதாகச் சொல்லவில்லை.



உங்களிடத்திலே தலைவர் சொல்லச் சொன்னார் என்ற கருத்தைச் சொன்னார். நானும், மருத்துவர் அய்யா அவர்களிடத்திலே சொல்கிறேன், மக்களை எல்லாம் அழைத்து அவர்களது கருத்தைக் கேட்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதைக் கேட்ட பிறகு, தலைவரிடத்திலே பேசுகிறோம் என்று சொல்லியிருந்தோம். ஆக இப்போது நாங்கள் ஒன்றும் தவறாகப் போகவில்லை. அந்த மக்கள் எல்லாம், எங்களைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லி முறையிடுகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை விவாதமாக ஆக்க விரும்பவில்லை. ஏற்கெனவே அது குறித்துப் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் கருத்து பத்திரிகையிலே வந்த காரணத்தால், நான் இங்கே இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்களிடத்திலேயும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரதராஜன் அவர்களிடத்திலேயும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தா. பாண்டியன் அவர்களிடத்திலேயும் பேசும்போது, இது அவசியம் செய்தே தீர வேண்டிய பிரச்சினை, உடனடியாக செய்யச் சொல்லுங்கள்; நாங்கள் நூற்றுக்கு நூறு இதை வரவேற்கிறோம் என்று சொன்னார்கள். அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய கோ.க. மணி அவர்களிடத்திலே நேற்றையதினம் காலையிலேதான் தொடர்புகொள்ள முடிந்தது. விடியற்காலையிலே 7 மணிக்குத் தொடர்புகொண்டு, இப்படி ஒரு பிரச்சினை இருக்கிறது, இதிலே நீங்கள் நினைப்பதைப்போல, அங்கே இருக்கின்ற குடியிருப்பவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. எந்த நீர்நிலையும் பாதிக்காது. நஞ்சை நிலங்களை எடுக்க மாட்டார்கள், புஞ்சை நிலம், தரிசு நிலம், இவை மட்டும்தான் 30,000 ஏக்கர் எடுக்கப்படும். எனவே, அது மட்டுமல்ல, guideline value கொடுக்கப்படமாட்டாது. Market value தான் கொடுக்கப்படும்—இவ்வளவையும் நான் சொன்னதற்குப் பிறகு, உடனடியாக நான் அய்யா டாக்டர் அவர்களிடத்திலே இதைத் தெரிவித்து விடுகிறேன், அவர் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்கிறார்; இதை நான் தெரிவித்துவிடுகிறேன் என்று சொன்னார். எனவே, இவ்வளவும் நான் தெரிவித்ததற்குப் பிறகு, மறுபடியும் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருப்பது, ஏதோ நான் தவறு செய்துவிட்டேனோ என்ற அச்ச உணர்வு எனக்கு இருக்கின்ற காரணத்தினாலே இந்த விளக்கத்தைத் தருகிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நீங்கள் பேச ஆரம்பித்து, 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும். 1½ மணிக்குள் எல்லாம் முடிக்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** சீக்கிரம் முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மூர்த்திகூட அவராகப் போராட்டம் என்று சொல்லவில்லை. தொலைபேசியிலே பல பேர் அவரிடம் பேசியிருக்கிறார்கள். அவருக்கு உடம்பு சரியில்லை. வீட்டிலே இருக்கிறார். அவர்கள் 12 மணிக்குத் தொலைபேசியிலே பேசும்போது, "நீங்கள் தூங்கிக்கொண்டிருக்கிறீர்கள். எங்கள் நிலம், வீட்டை எல்லாம் அப்புறப்படுத்துகிறார்கள். நாங்கள் எல்லாம் நாளைக்குச் சாகப் போகிறோம். நீங்கள் வந்து கொடி போட்டுவிட்டுப் போங்கள் அய்யா" என்று தொலைபேசியிலே நிறையப் பேர் திட்டுகிறார்கள். அதற்காகப் பார்க்கப் போன இடத்திலே, நாங்கள் போராடப் போகிறோம், நாடாளுமன்ற உறுப்பினர் நீங்களும்கூட இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தச் செய்தியைப் பத்திரிகையிலே பெரிதாகப் போட்டிருக்கிறார்கள்.

அவர்கள், பொது மக்கள் சொன்னதை பத்திரிகையில் வந்த செய்தி, போராட்டம் என்று சொல்லி. மருத்துவர் அய்யா அவர்கள்கூட அவர்களிடம் நேற்றுப் பேசி, உங்களுடைய பிரச்சினையை நான் முதலமைச்சரிடத்திலே எடுத்துச் சொல்கிறேன் என்று அவர், அவர்களிடம் சொன்னது. பொது மக்கள் மத்தியிலே, 100 நாட்களிலே நல்லதைச் செய்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர், நம்முடைய அரசு. அவர் மக்களுக்கு எந்த வகையிலும் கெடுதல் செய்யமாட்டார், நல்லதையே செய்வார். நான் அவரிடத்திலே எடுத்துச் சொல்லுகிறேன், உங்களைக் காப்பாற்றுவோம். நீங்கள் பதற்றப்பட வேண்டாம், அமைதியாக இருங்கள், கட்டுப்பாடாக இருங்கள் என்றுதான் சொன்னார். ஆகவே, இந்த நேரத்திலே முதலமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் நான் வேண்டுகோள் வைப்பது, அங்கே 44 கிராமங்கள் என்று சொல்கிறார்கள். அதிகாரிகள்கூடத் தவறான தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வருவாய் கிராமங்கள் 44, 100-க்கு மேற்பட்ட ஊர்கள் பாதிக்கப்படுகின்றன. நாங்கள் சொன்னோம் நேற்றைக்கு, Market value கொடுக்கப் போகிறார்கள். சந்தை மதிப்பு விலை கொடுக்கிறார்கள். பட்டா நிலங்களிலேயும் புஞ்சை நிலத்தை மட்டும் எடுத்துக்கொள்கிறார்கள். நஞ்சை நிலத்தைத்



தொடுவதில்லை. குடியிருப்புகளை அகற்றுவதில்லை. நீர்நிலைகள் அப்படியே இருக்கும், காடுகள் அப்படியே இருக்கும் என்ற தகவலை எல்லாம் அவர்களிடத்திலே சொன்னோம்.

அவர்கள் சொன்னது—அந்த மக்கள் சொன்னது, ஒரு பெரிய நகரம், எழில்மிகு நகரம் அங்கே வரப் போகிறது. அங்கே குடிசை வீடுகளை, கூரை வீடுகளை எப்படி விட்டுவிடுவார்கள்? நெய்வேலியிலே நிலம் கொடுத்தோம், எல்லோருக்கும் வேலை கொடுப்போம் என்று சொன்னார்கள். இன்று வரையில் வேலை கொடுக்கவில்லை. அதிகாரிகள் வரும்போது எங்களைக் காலி பண்ணுவதற்கு அப்படித்தான் சொல்வார்கள். இப்போது வீடுகளைக் காலி பண்ணமாட்டோம் என்று சொல்வார்கள். பிறகு காலி பண்ணி விடுவார்கள் என்று பதற்றத்திலே, பீதியிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதுவும் 30,000 ஏக்கர், முதலில் 55,000 ஏக்கர் என்று சொல்லி, இப்போது 30,000 ஆகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நாங்கள் அதற்கு எதிராக இல்லை.

முதலமைச்சர் அவர்களே, உங்களோடு தோழமையோடு இருக்கிறோம். தோழமை தொடரும். உங்கள் திட்டத்திற்கு எதிராக நாங்கள் இருக்கமாட்டோம். அந்த மக்கள் வேண்டுவது எல்லாம், ஓரே இடத்தில் அந்த 30,000 ஏக்கரை எடுக்க வேண்டாம், நாங்கள் ஏறக்குறைய 25,000 குடும்பங்கள்—13,000 குடும்பங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்—பாதிக்கப்படுவது 25,000 குடும்பத்திற்கு மேற்பட்டவர்கள், ஓரே இடத்தில் எடுக்காமல் சென்னையைச் சுற்றியும் எடுங்கள். நகரை விரிவாக்கம் செய்யுங்கள் என்று அந்தக் கோரிக்கையை வைக்கிறார்கள். ஆகவே, நீங்கள் அதை மறு பரிசீலனை செய்து, எப்படியாவது நகர விரிவாக்கம் செய்வதை புது நகரம் அமைவதை நாங்கள் வரவேற்கிறோம், ஏற்றுக்கொள்கிறோம்—அந்த மக்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வேண்டி, விரும்பிக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வே. மாரிமுத்து. (குறுக்கீடு) செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு இடம் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த ** என்கின்ற வார்த்தை, ஏற்கெனவே அவைக் குறிப்பிலே இருந்து நீக்கியாகிவிட்டது. ** என்கின்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வார்த்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியாகிவிட்டது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் வே. மாரிமுத்து

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து, 7 minutes வே முடியுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 மானியக் கோரிக்கைகளைக் கொடுத்துவிட்டு, 7 நிமிடங்கள் என்பது பொருத்தமானது அல்ல என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்களுக்குப் பொறுப்பு இருக்கிறது நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமல்லவா?

**திரு. வே. மாரிமுத்து:** மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

சட்டமன்றம் என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் அமையப் பெற்ற ஜனநாயகத்தின் நான்கு அங்கங்களில் மிக முக்கியமானதொரு அங்கமாகும். எனவேதான், சட்டசபைத் துறை என்பது அரசுத் துறைகளில் ஒரு முக்கியமான துறையாகும். இந்த சட்டமன்றம் எந்த அளவுக்கு முனைப்பாகவும், திறமையாகவும் செயல்படுகிறதோ, மக்களுக்கு நீதி கிடைக்கின்ற முறையிலே செயல்படுகிறதோ, அந்த அளவுக்கு நாட்டில் ஜனநாயகம் வேரூன்றும், நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்பதை நாம் அறிவோம். ஆனால், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில், இந்த அவையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது, மதிப்பு மிக்க நேரங்கள் இந்த அவையிலே வீணடிக்கப்படுகிற நிகழ்ச்சியை நம்மால் பார்க்க முடிகிறது. எனவேதான், நான்



சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், கண்ணியமான விவாதத்தின்மூலம் இச்சட்டப் பேரவையின் வரலாற்றுப் பெருமையை நிலைநாட்ட எல்லாத் தரப்பினரும் முன்வர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறியதுபோல, அரசாங்கம் ஒரு வீடு, ஆளுங்கட்சி அதை வாடகைக்கு எடுத்திருக்கிறது, மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம், அதன் கணக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பார்க்கப்படுகிறது, மக்களைப் பார்த்து ஆள்பவர்கள் அஞ்ச வேண்டும், ஆள்பவர்களைப் பார்த்து மக்கள் அஞ்சக்கூடாது. ஆனால் இன்றைய நிலைமையில், ஆள்பவர்களைப் பார்த்து மக்கள் அஞ்சவில்லை என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், புதிய அரசு ஏற்பட்டவுடன் மக்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய பல்வேறுவிதமான வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றி வரக்கூடிய ஒரு அரசு என்கிற முறையில் இந்த அரசின்மீது ஒரு மிகப் பெரிய நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று மக்களின் தேவைகள் அதிகரித்து வரக்கூடிய காலம். தேவை என்பது வேறு, ஆசை என்பது வேறு. ஆசைகள் நிராகரிக்கப்படலாம், ஆனால், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு என்பது ஒரு அரசின் கடமை என்கிற முறையில் மக்களின் தேவைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். ஆனால், இன்றைக்கு மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுகிற இந்த அவையில், ஆண்டுக்கு ஒரு முறைதான் மானியக் கோரிக்கை என்பது வருகிறது. மக்களுடைய பிரச்சினைகளை இந்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுகிறபோது, ஆண்டுக்கு ஒரு முறைதான் பேச முடியும். ஆனால், மானியக் கோரிக்கைகளில் விவாதம் நடைபெறுகிறபோது, ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் விவாதம் என்பதில் மக்களுடைய பிரச்சினைகளை முழுமையாக விவாதிக்க முடியும் என்று நான் நம்பவில்லை. எனவேதான், மக்களுடைய பிரச்சினைகளை முழுமையாக மானியக் கோரிக்கைகள்மீது பேச வேண்டுமென்று சொன்னால், நேரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய பிரச்சினைகளை அதிகமாகப் பேச முடியாத நிலை இன்றைக்கு ஏற்படுகிறது. எனவே, ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை

சட்டமன்றம் கூடுகிற நிலையை அரசு உருவாக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

சபாநாயகர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் என்பது, சட்டமன்றங்கள் ஆண்டுக்கு 100 நாட்கள் நடைபெற வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சபாநாயகர்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட இன்னொரு விஷயம் என்பது, சபைகளில் அதிகமாகக் கூச்சல், குழப்பங்கள் ஏற்படுவதற்குக் காரணம், சபைகளில் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தினாலே, சபை உறுப்பினர்கள் இப்படிப்பட்ட நிகழ்வுகளில் இறங்குகிறார்கள் என்று சபாநாயகர்கள் மாநாட்டிலே பேசப்பட்டிருக்கிறது.

அதேபோல, மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு நாங்கள் வருகிறபோது, மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட கொள்கை அறிக்கை என்பது, முதல் நாள் இரவு 11 மணிக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கிறது. எனவே, 11 மணிக்குக் கிடைக்கக்கூடிய கொள்கை அறிக்கையைப் படித்து, முழுமையாக மறு நாள் விவாதிப்பது என்பது சாத்தியம் அல்ல. எனவே, 24 மணி நேரத்திற்கு முன்பாக மானியக் கோரிக்கையினுடைய கொள்கை அறிக்கை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைப்பதற்குண்டான உத்தரவாதத்தைப் பேரவைத் தலைவர் அவர்கள் வழங்க வேண்டும்.

பிற்பகல் 12-25

அதேபோல, சட்டமன்றத்தில் கேள்வி நேரம், கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவை உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவை மக்களுடைய பிரச்சினைகள் ஏற்படுகிறபொழுது, அவற்றைச் சபை நடந்துகொண்டிருக்கிற நேரத்தில் உடனுக்குடன் விவாதிப்பதுதான் அத்தகைய பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வை ஏறபடுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். நான்கூட 3 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். இன்று வரை ஒன்றுகூட எடுக்கப்படவில்லை என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக்கு உட்பட்ட கோரிக்கைகள் சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனு அனுப்புகிறோம். முதல்வர் அலுவலகத்திலேயிருந்து



எங்களுக்கு உடனடியாகப் பதில் கிடைக்கிறது. அதேபோல, மாண்புமிகு அமைச்சர்களுக்கு நாங்கள் அனுப்புகிறபொழுது, உடனடியாக அதற்குரிய பதிலை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்புகிற உத்தரவாதத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அல்லது சம்பந்தப்பட்ட துறைக்கு, அதிகாரிகளுக்கு அனுப்புகிறோம். ஆனால், பல மாதங்கள் கடந்ததற்குப் பின்னாலுங்கூட, அவற்றிற்குரிய பதில் எங்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, தேச விடுதலைக்காகப் போராடிய பல தியாகிகள் இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்டுக்காண்டு அவர்களுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. எனவே, அவர்களுக்கு வழங்கக்கூடிய ஓய்வூதியத்தை அதிகரிக்க வேண்டுமென்கிற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. அவற்றைப் பற்றியும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல, மொழிப் போராட்டத் தியாகிகள். மொழிப் போராட்டத் தியாகிகள் இறந்ததற்குப் பின்னால், அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்கக்கூடிய நிதி என்பது, ஓய்வூதியம் என்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக ஓய்வூதிய நிதியை வழங்குவதற்குண்டான பணியை அரசு மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பாராளுமன்றச் செயலக ஊழியர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. அப்படிப்பட்ட சலுகைகளைச் சட்டப் பேரவை அலுவலகத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும். இங்கே 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் பணியாற்றக்கூடிய O.A. என்று சொல்லக்கூடிய அத்தகைய ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பிலே பணியாற்றக்கூடிய தற்காலிகப் பணியாளர்களைப் பற்றியும் அரசு பரிசீலிக்க வேண்டும். அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** ஒரே நிமிடம். அதேபோல, சட்டமன்றப் பேரவை நிருபர் பணிக்குத் தகுதி பெற்றும், தொடர்ந்து இப்பணியில் பணியாற்றுவது மிகுந்த சிரமமான ஒன்று என்பதைக் கருத்தில் கொண்டு, மாதாந்திர சிறப்பு ஊதியத்தை 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ் மற்றும் ஆங்கில நிருபர் பணி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சுருக்கெழுத்து உயர் வேகத் தகுதிக்குக் கூடுதலாக உயர் வேகத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள நிருபர்களுக்குச் சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

தலைமை நிருபர் பதவி உயர்வுக்கு 15 வருடங்கள் நிருபராகப் பணியாற்றிட வேண்டுமென்று, வேறு எந்தப் பதவி உயர்வுக்கும் இல்லாத விதி தற்போது நடைமுறையில் உள்ளது. இவ்விதியை நீக்கி, பணி மூப்பு அடிப்படையில் பணி உயர்வு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, சிறகினை விரிக்காமல் பறவையால் எப்படிப் பறக்க முடியாதோ, புல்லாங்குழலுக்குள் காற்று நுழையாமல் எப்படி கீதம் இசைக்க முடியாதோ, துடுப்பினை இயக்காமல் எப்படிப் படகினை இயக்க முடியாதோ, அதேபோல, சட்டமன்றத்தில் மக்களுடைய பிரச்சினைகளைப் பேசாமல், தமிழக மக்களுடைய நலனைப் பாதுகாக்க முடியாது என்பதை மட்டும் சுட்டிக்காட்டி, வாய்ப்புத் தந்த தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற மிக முக்கியமான மானியக் கோரிக்கைகளின்மீது ஒரு சில கருத்துகளை, காலத்தின் அருமை கருதி விரைவாகக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, இங்கே திட்டத் துறையைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே, ஒரு நபருக்கு திட்ட ஒதுக்கீட்டினுடைய அளவுத் தொகையாக 29 ரூபாய் இருந்திருக்கிறது. அதுவே, 5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே 248 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இப்போது 10-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே கிட்டத்தட்ட 6,440 ரூபாயாக உயரும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பது



மகிழ்ச்சிக்குரிய ஒன்று. தனி மனிதனுடைய வளர்ச்சிக்காக இந்தத் திட்டத் துறையின்மூலமாகப் பல்வேறு வகைகளிலே நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனால், தனித்தனியாக அது ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்படுகிறபொழுது, தனி மனிதனுக்காக ஒதுக்கப்படுகிற நிதியினுடைய அளவு, மற்ற நாடுகளோடு ஒப்பிடுகிறபொழுது, அது பொதுவாக இந்திய நாட்டிலே போதுமானதாக இல்லை. தமிழகத்தில் அது மேலும் குறைவாக இருப்பதாகவே நான் கருதுகிறேன். ஆகவே, தனி நபருக்கு என்ற அடிப்படையில் ஒதுக்கப்படுகிற நிதி என்பது, எந்தெந்தத் துறைகளுடைய முக்கிய அவசியம் கருதி, அது மனிதனுடைய வளர்ச்சிக்காகப் பயன்படும் என்பதை உணர்ந்து, அதற்கான முறையிலே நிதி ஒதுக்கீட்டினை மத்திய அரசாங்கத்தின்மூலமாக நாம் பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

குறிப்பாக, மத்திய அரசிடம் இந்த ஆண்டு சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கான திட்ட ஒதுக்கீட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகவே சென்று, நமது தமிழகத்திற்குப் பெற்றிருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அதை வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். ஆனால், மத்திய அரசாங்கம், மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிற இந்த நிதி ஒதுக்கீடு என்பதைத் தேவை அறிந்து, போதுமானதாக ஒதுக்கவில்லை என்பதை நான் பதிவு செய்ய வேண்டிய கருத்தாகச் சொல்கிறேன். ஆகவே, இதை வலியுறுத்துவதற்கான முயற்சி என்ற அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையிலே, தமிழகத்திற்குரிய திட்ட ஒதுக்கீடுகளை மேலும் அதிகமாகப் பெறுவதற்குரிய வாய்ப்பினை நம்முடைய முதல்வர் அவர்கள் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

பிற்பகல் 12-30

தேசிய வளர்ச்சி என்ற அடிப்படையில், உற்பத்தி விகிதத்தைப் பார்த்தால், ஆண்டுக்கு 8 சதவிகித வளர்ச்சியைப் பெற வேண்டும் என்று இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான எல்லாவிதமான முயற்சிகளையும் நம்முடைய தமிழகத்திலே மேற்கொள்ள வேண்டும். இது மேலும் படிப்படியாக உயர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இங்கே சட்டமன்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவைத் தலைவர்களுடைய மாநாடு டெல்லியிலே கடந்த முறை நடைபெற்றது; சென்ற ஆட்சிக்

காலத்திலே. அதிலே குறிப்பிட்டுச் சொன்னதென்பது, ஒரு ஆண்டிற்குக் குறைந்தபட்சம் 105-லிருந்து 108 நாட்களாவது சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற வேண்டும்; கூட்டங்கள் நடைபெற வேண்டும். குறைவான நாட்களின் எண்ணிக்கையிலே சட்டமன்ற நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடாது என்று வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், ஒரு ஆண்டிற்கு 105 தினங்கள் சட்டமன்றம் நடைபெறுகிறதா என்று பார்த்தால், கண்டிப்பாக இல்லை. அதிலே சரி பாதி எண்ணிக்கையிலேகூட நம்மால் நடத்த முடியாமல் போகிறது. சென்ற ஆட்சியிலே இதைப் பற்றி நான் இந்த அவையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, சட்டமன்றம் கூடுகின்ற நாட்கள் என்பதை அதிகரிப்பதற்கான முயற்சிகளைப் பற்றி இந்த அரசு சிந்திக்க வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம்தான் நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை, தேவைகளை நாம் நேரடியாக உணர்ந்து, அவற்றிற்குரிய திட்டங்களை மதிப்பீடு செய்வதற்குரிய வாய்ப்புகளைப் பெறுவோம் என்ற காரணத்தினாலே, சட்டமன்றம் கூடும் நாட்களை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, நமது சட்டசபை நிகழ்ச்சியில் மானியக் கோரிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மானியக் கோரிக்கைகளுக்கான விளக்கக் குறிப்புகள் என்பவை, முதல் நாள் இரவு 12 மணி அளவிலேதான் கிடைக்கின்றன. ஆகவே, உறுப்பினர்கள் அவற்றைப் படித்து, அவற்றிற்குரிய குறிப்புகளைத் தயார் செய்வது என்பது இயலாத காரியமாகிவிடுகிறது. ஆகவே, ஒரு தினத்திற்கு முன்னதாக அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளை இனி வருங்காலங்களிலே கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் என்ற முறையிலே அவர்களுக்கு உதவியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக இருக்கிறது. அதற்கான ஊதியத்தையும் அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையையும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் வைக்கிறார்கள். இதிலே நான் சொல்ல விரும்புவது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஒரு உதவியாளர் என்று சொல்கிறபொழுது, அதைச் சட்டமன்ற உறுப்பினர்களே ஏற்பாடு செய்வதைவிட, நமது ஊரகத் துறை, உள்ளாட்சித் துறையிலே பணியாற்றக்கூடிய ஒரு பணியாளரை, சட்டமன்ற உறுப்பினருக்கான ஒரு உதவியாளர் என்ற முறையிலே



நியமனம் செய்தால், அது அரசுப் பொறுப்பிலேயே அமைந்துவிடும். அவர்களே அந்தச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வார்கள். ஒரு அனுபவம் உள்ள ஊழியராக சட்டமன்ற உறுப்பினருக்குக் கிடைப்பார். அதன்மூலமாக நல்ல காரியங்கள் செய்வதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும் என்ற காரணத்தினாலே, ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஒரு உதவியாளரை நியமிப்பதைப் பற்றி இந்த அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும், சிந்திக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே, சட்டமன்ற உறுப்பினர்கள் பல பேர் என்னிடம் சொன்ன கோரிக்கை—நாங்கள் கோரிக்கை வைப்பதில்லை—இருந்தாலும், அவர்களுக்கு இருக்கிற ஆதங்கம் என்னவென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அல்லது தன்னுடைய மகனுக்காக அல்லது வேறுவிதமான அவர்களுடைய இல்லக் காரியங்களுக்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ அல்லது தனியார் வங்கிகளிலோ கடன் பெறச் செல்வதற்குரிய முயற்சிகள் எடுத்தால், அங்கே மதிக்கப்படுவதில்லை. இந்த நாட்டு மக்களுக்காக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பிரதிநிதியாக வந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே சட்டமன்ற உறுப்பினர்கள் கடன் பெறுவதற்கான வாய்ப்பே கிடைப்பதில்லை. ஆகவே, இதைப் பற்றி ஒரு தனித்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் கோருகிற அந்தக் கடனைப் பெறுவதற்கு, தன்னுடைய பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கான முயற்சிகள் எடுப்பதற்குரிய செலவுகளுக்காக அவர்கள் கடன் பெறுவதற்கான முயற்சியை எடுக்கிறபொழுது மிகப் பெரிய இடையூறாக இருக்கிறது. இது பொது மக்களுக்கும் எந்த அளவிலே இருக்கும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இப்படிப்பட்ட பாதிப்புகள் இருக்கின்றன. அவற்றைச் சரி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

குறிப்பாக, ஓய்வூதியத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை வைத்தார்கள். அதிலே சிறப்பான வகையிலே பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதை நான் வரவேற்கிறேன். அதோடு, நமது தலைமைச் செயலகத்திலே பணியாளர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கான ஒரு உத்தரவினை

வழங்கி, அதன்மூலமாக அவர்கள் அந்த வாய்ப்பினைப் பெறுவதற்குரிய அந்தச் செயலை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய காலத்திலேதான் ஏற்கெனவே செய்திருக்கிறார்கள். அந்தப் பயன்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, 1998 ஆம் ஆண்டிலே பணி ஓய்வு பெற்றவர்களுக்கும் இணைந்த முறையிலே அந்த ஓய்வூதியம் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியுமா என்பதைப் பரிசீலித்து உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மொழிப் போர்த் தியாகிகள், அவர்களுக்கான அந்த ஓய்வூதியத்தைக் கேட்கிறார்கள். அதேபோல, சுதந்திரப் போராட்டத் தியாகிகள், அவர்களுடைய வாரிசுகளுக்கான முறையிலே சலுகைகளைக் கேட்கிறார்கள். குறிப்பாக, பொறியியல் கல்லூரிகளிலே, மருத்துவக் கல்லூரிகளிலே அவர்களுக்கு இடம் அளித்து உதவிட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குறிப்பாக, கைதிகள் விடுதலை பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நமது மரியாதைக்குரிய ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் அவர்களுடைய கோரிக்கைகளை. 10 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர்களெல்லாம் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். இதிலே, அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களிலுமே, குறைந்தது 8 ஆண்டுகள் அவர்கள் தண்டனை பெற்றாலே விடுதலை பெறலாம் என்றுதான் இருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழகத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தனித்த முறையிலே பரிசீலித்து, 10 ஆண்டுகள் என்பதை 8 ஆண்டுகளாகக் குறைத்து, அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதிலே ஒரே ஒரு கைதி, இன்று காலையிலே அவருடைய துணைவியாரும், மற்றவர்களும் என்னை வந்து சந்தித்தார்கள். கோவை, மத்திய சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். ரவி என்ற விசுவநாதன். 14 வருடங்கள் 2 மாதங்கள் அவர் தண்டனையை அனுபவித்து விட்டார். ஆனால், அவர் பெயர் இந்தப் பட்டியலிலே இடம் பெறாமல் போய்விட்டது என்று சொல்லப்படுகிறது. அதாவது, அவர் பரோலிலே 30 தடவைகள் சென்று, திரும்பவும் அந்தச்



சிறைச்சாலைக்கு வருகிறார். ஆனால், ஊருக்குச் சென்ற காலத்திலே இதே ரவி என்ற பெயருடைய ஒருவர்மீது வழக்கு இருந்த காரணத்தினாலே, இந்த ரவியை தவறுதலாகக் காவலர்கள் கைது செய்து, சிறையில் அடைத்து ஒரு வழக்கையும் போட்டுவிட்டார்கள். பின்னாலே, அவர் நீதிமன்றத்திற்குச் சென்று நிரபராதி என்ற தீர்ப்பும் பெற்றிருக்கிறார். ஆகவே, அந்த இடைவெளி இருந்த காரணத்தினாலே, அவருக்கு இந்த விடுதலை கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சத்தை அவர்கள் இன்று காலையிலே என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, கோவை, மத்திய சிறையிலே இருக்கக்கூடிய ரவி என்கிற விசுவநாதன் என்பவருடைய விடுதலைக்கான முயற்சிகளையும் இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல, பல பேர்கள் இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லி, ஒரே ஒரு வேண்டுகோளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் வைக்கக் கடமைப்பட்டிருப்பது, விவசாயிகளுக்கு மாபெரும் சாதனை படைத்திருக்கிற மாபெரும் கலைஞர் அவர்களே, இந்த ஆண்டு நம்பிக்கையோடு நம்முடைய விவசாயப் பணிகளை, காவிரி டெல்டா பகுதிகளிலே விவசாயிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் மேற்கொண்டிருக்கிற அந்தப் பணிகள்மூலமாக அறுவடை வரப் போகிறது. அறுவடை வரப் போகிற காரணத்தினாலே, அந்த விவசாயிகளுடைய கொள்முதலுக்கான ஏற்பாடுகளையும் நீங்கள் செய்திருக்கிறீர்கள். அந்த விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கிற அந்த நெல்லுக்கான வகையில், விவசாயிகளுக்காகக் கொள்முதல் நிலையங்கள்மூலமாக நமது அரசு ஏற்பாடு செய்திருக்கிற அந்த அடிப்படையிலே, கூடுதலாக ஊக்கத் தொகை வழங்குவதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எல்லோருடைய விருப்பமும், விவசாயிகளுடைய விருப்பமும், எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. குவின்டாலுக்கு 100 ரூபாய் ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்று விவசாயிகள் கோருகிறார்கள், விரும்புகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, 100 ரூபாய் ஊக்கத் தொகையை அறிவித்து, அந்த விவசாயிகளுக்கான வாழ்க்கையிலே ஒரு உத்தரவாதம், ஒரு விலை, ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தச் செய்வதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே முன்னாள் அமைச்சர், எனது அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய சகோதரர் தம்பிதுரை அவர்கள் பேசினார்கள். சொர்க்கம், நரகத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, நல்ல கதையைச் சொன்னார். இதுவெல்லாம் வாழ்க்கையிலே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். ஆனால், ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புவது, அவர் பேசிக்கொண்டிருக்கும்போது பல செய்திகளைப் பற்றி வந்தன. ஆனால், அவர் அமைச்சராக இருந்த காலத்திலே அவர் அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார். 13-12-2002 அன்று அவர் விடுவிக்கப்பட்டபோது, அவர் அரசாங்கத்தினுடைய இல்லத்திலே வசித்திருக்கிறார்.

நான் விஷயங்களைக் கேட்கிறபொழுது, அமைச்சர்கள் வாழ்கிற இல்லங்களிலே வாடகை எவ்வளவு, எவ்வளவு செலுத்த வேண்டியிருக்கிறது, செலுத்துகிறார்களா, இல்லையா, அமைச்சர் என்ற காரணத்தினாலேயே அரசு விட்டுவிடுகிறதா, எங்களிடம், சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே மட்டுமே பெறுகிறீர்களா என்று நான் அமைச்சரிடத்திலே கேட்பதுண்டு. ஆனால், அப்படி இல்லை, அமைச்சர்களும் வாடகை செலுத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சரி, ஒரு ஜனநாயகபூர்வமாகத்தான் இருக்கிறது, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாகுபாடாக இல்லை என்று நான் நம்பிக்கையோடு இருந்தேன். அதேபோலத்தான், அமைச்சராக இருந்த அண்ணன் தம்பிதுரை அவர்களும் இருந்திருக்கிறார். அவர் ஓய்வு பெற்றதற்குப் பின்னாலே, திரும்ப அதற்குரிய வாடகை செலுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு, 250 ரூபாய் என்ற அடிப்படையிலே வாடகை செலுத்தியிருப்பார் என்று கருதுகின்றேன். ஆனால், அரசாங்கத்தினுடைய அந்தக் குடியிருப்பிலேயிருந்தபொழுது, அந்த வாடகை செலுத்துவதற்கான முயற்சியை எடுக்கிறபொழுது, எல்லோரிடத்திலும் வாங்குவதற்குரிய வாடகையை நிர்ணயிக்கப் பார்க்கிறபொழுது, ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தால், கிட்டத்தட்ட 20 ஆயிரம் ரூபாய் அவர் வாடகையாகச் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால், அது அரசுக்கு வரவில்லை.

எதற்கு விஷயத்தைச் சொல்கிறேன் என்றால், தவறு செய்தால் நரகத்திற்குப் போய்விடுவார்கள் என்று இங்கே சித்தரித்துப் பேசிய அண்ணன் அவர்களே, அந்த சொர்க்கத்தில் பலவிதமான வாய்ப்புகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. நரகத்திலே மிகப் பெரிய தண்டனைகள் வழங்கப்படுவதற்குரிய முயற்சி இருப்பதாகச்



சொல்லப்படுகிறது. சிறு வயதிலே என்னுடைய பெற்றோர்கள் சொன்ன கதை, நரகத்திலே, தவறு செய்து போகிறவர்களுக்கு அங்கே பெரிய அகழி மாதிரி இருக்கக்கூடிய இடத்திலே, மிகப் பெரிய அளவிலே எண்ணெய் நிரப்பப்பட்டு, அது சூடாக்கப்பட்டு, இங்கிருந்து தப்புச் செய்தவர்களை எல்லாம் அந்த எண்ணெய்ச் சட்டியிலே போட்டு, வறுத்து எடுப்பதாகச் சொல்லுவார்கள். ஆகவே, இப்படியான காரியங்களைச் சொல்லி, இங்கே கதை சொன்ன அண்ணன் தம்பிதுரை அவர்களே, உங்களை எண்ணெய்ச் சட்டியில் போடுவதா? எந்த நரகத்திற்கு அனுப்புவது? (மேசையைத் தட்டும் ஒலி) சரி, பரவாயில்லை. இதையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற காரணத்தினாலே, இந்தச் செய்திகளைச் சொல்லுகிறபொழுது எச்சரிக்கை வேண்டும் என்பதற்காகச் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இரா. இராணி. *(கூச்சல்–குழப்பம்)* பின்னாலே என்ன? அவர்கள் நிற்கிறார்கள், அர்த்தம் இருக்கிறது, நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள் எல்லோரும். *(குறுக்கீடுகள்)* திரு. வைத்திலிங்கம், உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* திரு. விசுவநாதன், உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)*

***திருமதி இரா. இராணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலையில்... *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். *(குறுக்கீடுகள்)* திருமதி இராணி, பொறுங்கள். *(குறுக்கீடுகள்)* இரண்டே வார்த்தைகளில் சொல்லி முடியுங்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள், நான் அமைச்சர் பதவியை விட்ட பிறகு, அந்த இல்லத்திலே இருந்ததற்கு என்ன வாடகை என்றெல்லாம் சொன்னார்கள். என்ன அரசு நிர்ணயித்ததோ, அந்த வாடகையை நான் கட்டியிருக்கிறேன் என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இராணி. *(கூச்சல்–குழப்பம்)*

**திரு. இரா. விசுவநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், அவர் நான் தவறு செய்யவில்லை என்று சொல்லிவிட்டார் அல்லவா? உட்காருங்கள். முன்னாள் அமைச்சர் தவறு செய்யவில்லை' என்று சொல்லிவிட்டார். திரு. தம்பிதுரை அவர்கள் தவறு செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். உட்காருங்கள் முதலில். (கூச்சல் குழப்பம்) சிவபுண்ணியம், உட்காருங்கள். திருமதி இராணி, நீங்கள் பேசுங்கள். (கூச்சல் குழப்பம்) வேண்டாம், வேண்டாம்.

**திருமதி இரா. இராணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி இராணி, பேசுங்கள்.

**திருமதி இரா. இராணி:** திருச்சி மாவட்டம், (கூச்சல் குழப்பம்) திருச்சி மாவட்டம்... (கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது என் துறை சம்பந்தப்பட்டது. பொதுவாக அமைச்சராக இருப்பவர்கள், எம்.எல்.ஏ.-ஆக இருப்பவர்கள், அரசுக் குடியிருப்பிலே இருப்பார்கள். அப்பொழுது அதற்குத் தனி ஒரு வாடகை. பிறகு அந்தப் பதவி போய்விட்டால், grace period உண்டு. இவ்வளவு நாட்களுக்கு, ஒரு 3 மாதம், 4 மாதம் இருக்கலாம் என்று. அதற்குப் பிறகு market value தான் போடப்படும். அந்த market value என்னவோ அதுதான் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு, நானே கோஷன் பிளாக்கிலே இருந்தேன், ஒரு காலத்திலே எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது பதவி போனவுடனே கொஞ்ச நாள் இருந்தவுடனே, market value போட்டுத்தான் என்னிடம் வாங்கினார்கள். இரண்டாவது, தூக்கிப் போட்டுவிட்டார்கள். ஆனால், இதிலே இப்போது சொன்னதிலிருந்து நான் தெரிந்துகொள்கிறேன் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்களுக்கு வாடகை 250 ரூபாய்; அப்படியென்றால், அவர் இருந்தது, குறிஞ்சி என்ற ஒரு பெரிய பங்களாவில். இருந்ததிலேயே பழைய காலத்திலே, பழைய காங்கிரஸ் காலத்திலே கட்டிய பங்களா. அதிலே 250 ரூபாய் வாடகையிலே இருந்தார்கள் என்று சொன்னால் எம்.எல்.ஏ.-வைத் தவிர, தம்பி அவர்கள் வேறு எந்தப் பொறுப்பிலும் இருந்தால்கூட அதற்காகக்கூட சலுகை காட்டியிருக்கலாம். ஆனால், ஒரு அமைச்சராக இருந்து, அமைச்சர் பதவி போனதற்குப் பிறகு, எம்.எல்.ஏ. வாக இருக்கிறபொழுது, வெறும் 250 ரூபாய்க்கு,



2000 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 3, 4 வருடங்கள் 250 ரூபாய் கட்டியிருந்தால், இப்போது எனக்கு ஒரு புது கேஸ் கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் என்னுடைய இலாகாவில் பார்த்து, இதற்கு யார் உரியவர்கள் என்று கண்டுபிடித்து, அதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அவர் சொன்னார், எனக்கு நரகம், நரகம் என்று, நரகத்திலே ஒரு exemption இருக்கிறது. அதாவது என்ன exemption என்றால், என்ன தப்புப் பண்ணினாலும் நரகத்திலே தண்டனை உண்டு. இந்த வீடு என்று பார்க்கிறபோது, வீடு என்றால் மோட்சம் பாருங்கள், இது மாதிரி வீட்டு வாடகை கட்டவில்லையென்றால்கூட, அதற்கு ஒரு exemption இருக்கிறது. ஆகையினால், அதை நமக்குத் தருவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இராணி.

பிற்பகல் 12-45

***திருமதி இரா. இராணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலையில் உள்ள புத்தூர் என்னும் ஒரு சிறிய மலைக் கிராமத்தில், எளிய குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு 2001 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்து, வெற்றி வாய்ப்பினை இழந்தாலும், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், என் மேல் நம்பிக்கை வைத்து, மீண்டும் இரண்டாவது முறையாக அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, வெற்றி பெறச் செய்து, உப்பிலியாபுரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக்கி அழகு பார்த்த தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர், (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாவது முறையாகத் தமிழக முதல்வராக அரியணையேறி, தேர்தல் அறிக்கையில் உள்ள அறிவிப்புகளை 3 மாதத்திற்குள் செயல்படுத்தி, வரலாறு படைத்துக்கொண்டிருக்கும் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர்களின் விடிவெள்ளியாய், எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனக்காகத் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்து வெற்றிககு வித்திட்ட மாண்புமிகு நிதி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னை இரண்டு முறை வேட்பாளராகப்

பரிந்துரை செய்து, தொகுதி முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, எனது வெற்றி வாய்ப்பை உறுதி செய்த திருச்சி மாவட்டச் செயலாளர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மத்திய வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியினருக்கும், உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, அவர்களுக்காகப் பணியாற்ற வாய்ப்பளித்த உப்பிலியாபுரம் வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

எனது உப்பிலியாபுரம் தொகுதி, திருச்சி மாவட்டத்திலேயே மிகவும் பின் தங்கிய தொகுதி. எந்தவொரு தொழிற்சாலையும் இல்லாத, முழுவதுமாக விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் உள்ள தொகுதி. முதலாவதாக, துறையூர் நகரில் போக்குவரத்து அதிகமாக உள்ளதால், அதனைத் தவிர்க்கப் புறவழிச் சாலைத் திட்டம் என்பது, ஏற்கெனவே கழக ஆட்சியில் திட்டமிடப்பட்டு, அரசு ஒப்புதல் பெற்று, கடந்த ஆட்சியில் நிதி ஒதுக்கப்படாமல் உள்ளது. எனவே, அதற்கான நிதியை ஒதுக்கி, புறவழிச் சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் எந்தவொரு அரசுக் கலைக் கல்லூரியோ, அரசுத் தொழில்நுட்பக் கல்லூரியோ, தொழில்நுட்பப் பயிற்சி நிலையமோ இல்லை. எனவே, ஓர் அரசுக் கலைக் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சுற்றுலா மையமாக உள்ள புளியஞ்சோலை சுற்றுலா மையமாகக் கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்டாலும், போதிய நிதி ஒதுக்காமல், போதுமான வசதிகள் இல்லாமல் உள்ளது. எனவே, அதற்குத் தேவையான நிதியொதுக்கி, அங்கு ஒரு நீச்சல் குளமும், ஒரு செயற்கை நீர்வீழ்ச்சியும் அமைத்து, அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வழிவகை செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்

உப்பிலியாபுரத்தில் ஒரு பேருந்து நிலையமும், ஒரு கிளைப் பணிமனையும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



துறையூர்–சேலம் சாலையில், துறையூர்–மங்கப்பட்டி வரை உள்ள சாலையில் போக்குவரத்து அதிகமாக உள்ளதால், அச்சாலையை இரு வழிச் சாலையாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலையிலிருந்து வரும் உபரி நீர், அதிக அளவில் வந்து, அய்யாற்றின் வழியாக, காவிரியுடன் சேர்ந்து கடலில் கலந்து வீணாகிறது. எனவே, அதனைத் தடுக்க ஓர் அணை கட்டி, நீரைத் தேக்கி வைத்து, விவசாயத்திற்குப் பயன்படுத்த வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பச்சைமலையில் உள்ள சில மலைக் கிராமங்களுக்குச் சாலை வசதி இதுவரை இல்லாமல் உள்ளது. அக்கிராமங்களுக்குச் சாலை வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் நகரில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனையினைத் தரம் உயர்த்தி, 24 மணி நேர விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மழைக் காலங்களில் கொல்லிமலையில் இருந்து வரும் தண்ணீரால் அய்யாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, ஆற்றின் மேற்குப் பகுதியில் உள்ள பல கிராமங்கள் துண்டிக்கப்படுகின்றன. இதனால், பள்ளிக் குழந்தைகளும், பொது மக்களும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். ஆகவே, ஏரகுடி, பாலகிருஷ்ணன்பட்டி, வைரிசெட்டிபாளையம், காலிங்கமுடையான்பட்டி ஆகிய நான்கு இடங்களில் உயர் மட்டப் பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பச்சைமலையிலிருந்து வரும் தண்ணீரால் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் துறையூர்–நரசிங்கபுரம் துண்டிக்கப்படுகிறது. ஆகவே, காக்காவாரியில் ஓர் உயர் மட்டப் பாலமும், நரசிங்கபுரம்–காணப்பாடி இடையில் ஓர் உயர் மட்டப் பாலமும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பச்சைமலைக்குச் செல்லும் மலைச் சாலைகளும், மலைக்கு மேல் உள்ள சாலைகளும் போக்குவரத்திற்குப் பயன்பட முடியாத நிலையில் பழுதடைந்துள்ளன. இதனால், மலைக் கிராமங்களுக்குச் செல்லும் சிற்றுந்துகளுக்கு அடிக்கடிப் பழுதுகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தச் சாலைகளை உடனடியாகச் செப்பனிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோபனபுரம்–காஞ்சேரிமலை, நாகநல்லூர்–சுக்கலாம்பட்டி ஆகிய சாலைகள் நீண்ட நாட்களாகக் கப்பிச் சாலைகளாகவே உள்ளன. அந்தச் சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்றி, அங்கு வாழும் மலைவாழ் ஏழை மக்களின் துயரைப் போக்கிட வேண்டுகின்றேன்.

சாதிச் சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்கிட, மலைவாழ் மக்கள் வசிக்கும் இடங்களுக்கு R.D.O. நேரடியாகச் சென்று விசாரணை செய்து வயது வித்தியாசமின்றி அனைத்து மலைவாழ் மக்களுக்கும் உடனடியாக சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுகிறேன்.

கடந்த காலங்களில் வட்டாட்சியர் வழங்கிய போலி S.T. சான்றிதழ்மூலம் பணியிலுள்ள உயர் சாதியினரை அடையாளம் கண்டு, உரிய விசாரணை நடத்தி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

அரசுத் துறைகளில் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் உள்ள மலைஜாதியினரின் பணியிடங்களை உடனடியாக நிரப்பி, மலைவாழ் மக்களின் வாழ்வில் ஒளியேற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஏற்கெனவே நமது கழக ஆட்சியில் துறையூர் நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்றியதுபோல, தற்போது துறையூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புறவழிச் சாலைத் திட்டத்தினையும் நிறைவேற்றித் தருமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொண்டு, இதுவரை பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம் என்கிற ஒரு மானியத்தை எடுத்திருக்கிறோம். இதில் மாநிலச் சட்டமன்றத்தைப் பற்றி அதிகமாக யாரும் பேசவில்லை. அது குறித்துச் சில கருத்துகளை நான் இந்த இடத்திலே, (குறுக்கீடு) ஒரே point நான் கேட்டுவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? Point of order, point of clarification இருந்தால் சொல்லுங்கள். Otherwise, no. (குறுக்கீடு) நான்



சொல்கிறேன் அல்லவா? Point of order or point of clarification இருந்தால் மட்டும்தான் allowed.

**திரு. சி. ஞானசேகரன்:** I am asking on a point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். என்ன அது?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம் என்கிற மானியத்தைக் குறித்து நாம் விவாதித்துக்கொண்டிருக்கிற இந்த வேளையில், பொதுவாக மற்றவர்களுக்கெல்லாம் வாரி, வாரி வழங்கிய வள்ளலாக இருக்கும் தமிழகத்தினுடைய முதல்வர் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று இதுவரை எந்தவிதமான அறிவிப்பையும் செய்யாமல் இருக்கிறார்கள்.

பக்கத்திலே இருக்கிற ஆந்திராவை எடுத்துக்கொண்டால், ஆந்திராவிலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம் 43 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால், எங்களுக்குச் சம்பளமே வேண்டாம். நீங்கள் கொடுக்கிற சம்பளம் 2,000 ரூபாயைக் கழித்துக்கொண்டு, படிகளாக இருக்கக்கூடியவற்றை மட்டும் எங்களுக்கு 41,000 ரூபாய் என்று நீங்கள் அறிவித்தாலும்கூட—நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளமே இல்லாமல் பணியாற்றுவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) படிகளை மட்டும் நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள் என்ற பணிவன்பான வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இப்போதெல்லாம் பக்கத்திலே உள்ள மாநிலத்தைப் பார் என்கிறோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போதுகூட (குறுக்கீடுகள்) ஏ.சி. நீல்சன் என்கிற—(மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோது, அமெரிக்காவில் இருக்கக்கூடிய ஏ.சி. நீல்சன் என்கிற அந்த அமைப்பு நடத்திய ஒரு கருத்துக் கணிப்பைச் சொல்லிக்கூட இன்று முதல்வர் பதவிக்கு யார் தகுதியுள்ளவர் என்ற சர்வேயிலே, நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு அருமையான முதல்வர் என்று அவர்கள் கருத்துக் கணிப்பிலே கூறியிருக்கிறார்கள். சொல்லப் போனால், இன்று நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள்தான் ஒரு நல்ல அமைச்சர் என்றுகூட அந்தக் கருத்துக் கணிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முதலமைச்சர் இருக்கிறபோதே எங்களுக்கு இந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை என்று சொன்னால்,

என்று நிறைவேறப் போகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற ஒரு கேள்விதான் நம்முடைய சட்டமன்றத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், முதலிலே சம்பளத்தைக் கேட்டீர்கள். அதிலே நியாயம் இருக்கிறது. திருப்பி எதற்குப் பேச்சை வளர்த்துக்கொண்டு போகிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** இப்போது இருக்கக்கூடிய இந்த கம்ப்யூட்டர் யுகத்திலே அவர்கள் போட்டி போட்டுச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், எல்லோருக்கும் laptop—laptop ஒரு வருஷம், இரண்டு வருஷத்திலேயே போய்விடுகிறது—எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் laptop வழங்க வேண்டுமென்று கோருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மகாராஷ்டிராவிலே ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் கார் தருகிறார்கள். டிரைவர் தருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஒன்றரை மணிக்கெல்லாம் நம்முடைய நிதி அமைச்சரும் பதில் சொல்லியாக வேண்டும். காங்கிரஸ் கட்சி சார்பாக சுதர்சனம் அவர்கள் ஒருவருக்கு வாய்ப்பு அளித்தால் போதும் என்று சொன்னார். 23 நிமிடங்கள் அவர் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இவருக்குக் கொடுத்தது point of clarification—லேதான் கொடுத்திருக்கிறது. வேறொன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** Point of Clarification என்று மறுபடியும் பேச ஆரம்பித்தால் நிதி அமைச்சர் எப்போது பதில் சொல்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிராவிலே சட்டமன்ற—நம்முடைய முதல்வர் அவர்கள் காவல்



துறைக்கு 100 Accent கார்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஏனென்றால், இப்போது மந்திரிகளையெல்லாம் கழித்து, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரைக் கழித்து, நம்முடைய கொறடாவைக் கழித்துக்கொண்டால், அதேபோல, துணைத் தலைவர் அவர்களைக் கழித்தால், 200 கார்கள்தான் வரும். ஆகவே, 200 கார்களை நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலமாக எல்லா எம்.எல்.ஏ.—க்களுக்கும் வழங்கலாம். டிரைவரை வழங்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, ரிப்பேர் எல்லாம் —எப்படி மற்றவர்களுக்கு வி.ஐ.பி. கார்களை maintain பண்ணுகிறீர்களோ, அதே அளவிற்கு நீங்கள் காரைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல உதவியாளர். பொதுவாக கம்ப்யூட்டர் கொடுத்துவிடுகிறீர்கள். கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் வேண்டும். எல்லா எம்.எல்.ஏ.—க்களுக்கும் கம்ப்யூட்டர் ஆப்பரேட் செய்யத் தெரியும் என்று சொல்ல முடியாது. ஆகவே ஒரு கம்ப்யூட்டர் ஆப்பரேட்டரை நியமிப்பதற்கும், அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தில் பொதுவாக, இப்போது 'சாப்பிட வாங்க' கான்டீனிலே சட்டமன்ற உறுப்பினர்கள் போனால், நின்றுகொண்டு சாப்பிட வேண்டிய ஒரு அவல நிலைமை. அதற்கு ஏற்கெனவே 1991–1996—லே பார்த்தால், தனியாக ஒரு private room இருந்தது. அதிலே Concession rate—லே உணவு கொடுத்தார்கள். அப்படி நீங்கள் தயவுசெய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், போதும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய இந்த மானியங்கள் இந்த அவை முன்னர் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொரு கட்சித் தரப்பிலேயும் ஏராளமான வெட்டுத் தீர்மானங்களை வழங்கியிருக்கிறார்கள். அதிலேயும் குறிப்பாக, இங்கே 7 மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. தம்பிதுரை அவர்கள், திரு. குருசாமி

அவர்கள், திரு. ஞானசேகரன் அவர்களுக்குப் பதிலாக திரு. ஜெயக்குமார் அவர்கள், திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. மாரிமுத்து அவர்கள், திரு. சிவபுண்ணியம் அவர்கள், திருமதி இராணி அவர்கள், பேசும் வாய்ப்பு விட்டுப் போன காரணத்தால் தன்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக்கொண்டு திரு. ஞானசேகரன் அவர்கள் ஆகியோர் பேசியிருக்கிறார்கள்.

குறிப்பாக, மாநிலச் சட்டமன்றம் இப்பொழுது மிகச் சிறப்பாக நடப்பதையும் குறிப்பிட்டார்கள். அதன்மூலமாக, ஜனநாயக உணர்வு தழைப்பதற்கு வழி தேடியிருக்கிறோம் என்பதையும், இன்னும் இந்தச் சட்டமன்றம் அதிக நாட்கள் நடைபெற வேண்டும்; அதிகமான அளவுக்கு மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கிற வாய்ப்பைப் பெற வேண்டுமென்று பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கடந்த காலங்களிலே இருந்ததைப்போல, சட்டமன்றத்திலே, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் உரையாற்றுகிற வாய்ப்பு எந்த வகையிலும் குறைக்கப்படமாட்டாது. இந்தப் பேரவையின் தொடக்க நாளிலேயிருந்து இதுவரையில் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், குறிப்பாக அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் உரையாற்றுவதற்கு எப்படி வாய்ப்பு அளிக்கப்பட்டதோ, அதே முறையில் எதிர்க்கட்சிகளுக்கும், தோழமைக் கட்சிகளுக்கும் சட்டப்படியாக, சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளுக்கும் உரிய வாய்ப்பு வழங்கப்படும் என்பதிலே, யாரும் ஐயுறத் தேவையில்லை. ஏனென்றால், கலைஞர் அவர்கள் ஒரு அரசியல் கட்சித் தலைவராக இருந்தும், முதலமைச்சராக இருந்தும்கூட, நாட்டினுடைய எதிர்கால நன்மைக்கு, ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும் என்பதிலே, மிக அழுத்தமான, உறுதியான நம்பிக்கையுடையவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நம்பிக்கையின் அடிப்படையில், எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு, முறையாக அந்த எண்ணங்கள் வெளிப்படுமானால், யாரும் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு நிறைவான வாய்ப்பு வழங்கப்படும் என்று, 'சட்டமன்றம்' என்ற அடிப்படையில், அந்தத் துறை பற்றி வாதம் நடைபெறுகிற காரணத்தால் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய திரு. தம்பிதுரை அவர்கள், ஏதோ இப்போது இந்த ஆட்சி 'மிக அதிகமான நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி, பற்றாக்குறை நிதிநிலை அறிக்கைக்கு ஆளாகிவிட்டது' என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். நிதிநிலை அறிக்கையைப் பற்றி இங்கே வாதம் செய்வதற்கு அவசியமில்லை என்றாலும்கூட, எடுத்துச் சொன்னதற்குப் பின்னர், அதை விளக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.



2006–2007 திருத்த மதிப்பீடுகளில் உள்ள வருவாய்க் கணக்கில், வருவாய் மதிப்பீடு, 2006–2007 இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அளித்த வருவாய் மதிப்பீடுகளைவிட ரூ.4,685 கோடி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணங்கள் என்ன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை திரு. தம்பிதுரை அவர்கள் எடுத்துச் சொல்லி, அதையே ஒரு பெரிய குறையாகச் சொன்னார்கள். 2006 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மற்றும் ஜூன் திங்கள்களில் அரசுக்குக் கிடைத்த சொந்த வரி வருவாய், 20 சதவிகிதம் வளர்ச்சி விகிதத்தில் உள்ளதால்; வரி வருவாய் 20 விழுக்காடு மாதந்தோறும் அதிகப்பட்டு வருகிற புள்ளிவிவர அடிப்படையிலேயும், அரசின் சொந்த வரி வருவாயின் இந்தப் போக்கைக் கருத்தில் கொண்டு, ரூ.3608.9 கோடி அதிகமாக சொந்த வரி வருவாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு திங்களுக்கு 20 விழுக்காடு கடந்த காலத்தைவிட அதிகம் வருகிறது என்ற அந்தப் புள்ளிவிவரப்படி இந்தத் தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் முத்திரைத் தீர்வை வருவாயில் ஏப்ரல்—ஜூன் கால் ஆண்டில் 40 விழுக்காடு வளர்ச்சி விகிதம் உள்ளது. அது real estate விற்பனை முதலானவை, மறுபடியும் அந்தத் தொழில்கள் மிக வேகமான வளர்ச்சி பெற்ற காரணத்தால், இந்த 40 விழுக்காடு அதிகம் வருவதற்கான வாய்ப்பைப் பெற்றது. மைய அரசின் நிதிநிலை அறிக்கை முந்தைய இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 24–1–2006–ல் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்தான் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அது பாராளுமன்றத்திலே வந்த தேதி 28–2–2006. மைய அரசு நிதிநிலை அறிக்கையில் உள்ள மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் மத்திய அரசு வரிகளின் பங்கு, மற்றும் திட்டப் பணிகளுக்கான மானியம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் மட்டும் மைய அரசின் மானிய வருவாய் ரூபாய் 554 கோடி அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மைய அரசு வரியைப் பகிர்ந்தளிப்பதில் கூடுதலாக 378.9 கோடி ரூபாய் கிடைக்க மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 2006–2007 திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் அளித்துள்ள அதிக வருவாய் மதிப்பீடுகள் மிகத் துல்லியமாகக் கணக்கிடப்பட்டு, நிதித் துறையாலே வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–00

அது மட்டுமல்ல, பொதுவாகவே பற்றாக்குறைக்கு ஆளாகிற காரணத்தால், எதிர்காலத்திலே வருந்த நேரிடும், ஏமாற்றம்

ஏற்படும். பொது மக்கள் ஏமாற்றப்படுவார்கள் என்றெல்லாம்கூட திரு. தம்பிதுரை அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு 2003 ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி, அந்த ஆண்டு வந்த நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி ஆறு மாதத்திற்கு ஒரு முறை மாநிலத்தின் வரவு-செலவு பற்றிய இடைக்கால மதிப்பீடு நிதி அமைச்சரால் சட்டமன்றத்திலே சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகள் Performance Budget-ஐ மானியக் கோரிக்கையின்போது அளிக்கின்றன. ஆகவே, இவை காரணமாக, பற்றாக்குறை அளவு கடந்தும், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கும் ஆவதற்கு நிதித் துறை இடம் தராது. மேலும், தமிழ்நாட்டில் நிதிச் சிக்கனம் குறித்து அதிகபட்ச அளவில் ஆராய்ந்து, அவ்வப்போது அரசாணை வெளியிடப்பட்டு, கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இத்துடன், நிதிப் பொறுப்புடைமைச் சட்டம் இயற்றப்பட்டு, அதன்படி நிதிநிலை பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கொண்டு பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதற்கு இதைவிட அதிகமாக ஆலோசனை செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஒன்று, இந்த அரசு நிதிநிலை அறிக்கையிலே பொது மக்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்த நன்மைகள், சலுகைகள், அரிசி கிலோ இரண்டு ரூபாய்க்கு வழங்குவது என்பது முதலானவையெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் கற்பனையாகச் சொல்லப்பட்டு, கனவு உலகத்திலே பேசும் செய்திகளாக இல்லாமல், நடைமுறைச் செய்திகளாக, கட்சி வேறுபாடுகளின்றி அனைத்து மக்களும் அந்தப் பலனைப் பெறக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி நிறைவேற்றி வருவதிலே, அரசு ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு, கடந்த 1988-வது ஆண்டிலே ஒரு நிதிக் குழு அமைக்கப்பட்டபோது, அந்த ஐந்தாவது நிதிக் குழுவிடம் கேட்கப்பட்ட கருத்து, மத்திய அரசு வழங்குகிற அதே அளவு ஊதியத்தை மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்குவது குறித்து உரிய ஆலோசனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்தக் குழு ஆலோசனையும் வழங்கியது. ஆனால், அந்தக் குழு வழங்கிய அந்த ஆலோசனையை நிறைவேற்றியது கலைஞருடைய ஆட்சிதான். கலைஞருடைய ஆட்சி இல்லாதபோது ஏற்படுத்தப்பட்ட நிதிக் குழு தந்த ஆலோசனையை நிறைவேற்றியது 9-8-1989-ல் முதலமைச்சராக அன்றைக்கு இருந்த கலைஞர்



அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்குத் தரப்பட வேண்டும், மத்திய அரசு எவ்வப்போது ஊதியத்தை உயர்த்துகிறதோ, அவ்வப்போது உயர்த்தித் தர வேண்டும். அகவிலைப் படி உயர்த்தப்படுகிறபோதெல்லாம் அந்த அகவிலைப் படியும் மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த ஆணைகளைத் தொடர்ந்து பிறப்பித்தவர் கலைஞர் என்பதை, அவர் முதலமைச்சராக இருந்த வாய்ப்பு காரணமாக அறிவித்தார் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

அதேபோல, கடந்த கால ஆட்சியில் 1 இலட்சத்து 75 ஆயிரம் அலுவலர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்ட செய்தி நாடறிந்த செய்தி. இதிலே ஒன்றும் அரசியல் பேசுவதாகக் கருதத் தேவையில்லை. இது அரசியலுக்கு அப்பாற்பட்டது. அரசு அலுவலர்கள் வீட்டுக்கு வீடு உலை வைக்க முடியுமா, மறு நாள் காலையிலே என்ற பிரச்சினையை ஏற்படுத்திய அந்தச் சூழ்நிலை அன்றைக்கு ஏற்பட்டது. பின்னர் அவர்களை எல்லாம், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு காரணமாக, மறுபடியும் வேலையில் எடுக்கவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. உயர் நீதிமன்றம் சொன்ன ஆலோசனைகூட அன்றைய அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. உச்ச நீதிமன்றத் தீர்ப்பில், அவர்களை எடுத்தே தீர வேண்டும், நீக்கியது செல்லாது என்று சொல்கிற அளவிற்கு ஒரு நிலைமை ஏற்பட்டு, அதற்குப் பின்னர் அவர்கள் திரும்ப வேலையிலே சேர்ந்தார்கள்.

அப்படிச் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பல. அதிலேயும் குறிப்பாக, அரசு ஊழியர்கள் பெற்று வந்த சலுகைகள் பல குறைக்கப்பட்டன. போனஸ் குறைக்கப்பட்டது. பல ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. இன்றும் பல இடங்களில் ஊழியர்கள் பணிக்கு எடுக்கப்படவில்லை, வேலைகள் பல நிரப்பப்படவில்லை. உழைப்பு அதிகமாயிற்று. ஊதியம் குறைந்து போயிற்று. சலுகைகள் காணாமல் போயின. அரசு ஊழியர்களுக்குக் கிடைத்த பல வகையான, நலன்கள் அத்தனையும் ஏறத்தாழப் பறிக்கப்பட்டன. அவர்கள் ஓலமிட்டார்கள், குறைபட்டார்கள். சட்டமன்றத்திலேகூட அதனுடைய பிரதிபலிப்பு இருந்தது. ஆனால், பலன் கிடைக்கவில்லை. அவர்கள் இழந்த அத்தனை சலுகைகளும் இப்பொழுது, திரும்ப வழங்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) போனஸ் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் வழங்கிய கலைஞர், கடைசியாக, விட்டுப் போனவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிக எண்ணிக்கையில் இருந்தவர்களாக, கடந்த காலத்திலே கவனிக்கப்படாமல் இருந்த சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களுக்கெல்லாம், 2,158 ரூபாய் ஊதியம் பெற்றவர்களுக்கு, இன்றைக்கு ரூ.1,300-20-1,500-25-2,000 என்ற அந்த ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு, 260 ரூபாய் சேர்த்து, 2,418 ரூபாய் ஊதியம் வழங்குவதென்று கலைஞர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, அங்கன்வாடியிலே பணியாற்றுகிற பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. அதற்கு இந்த அவையிலே பலர் நன்றியும்கூடத் தெரிவித்தார்கள். நான் இது பற்றியெல்லாம் முழு விவரத்திற்குச் செல்ல விரும்பவில்லை. இந்த நேரம் வரையில், அவர் அறிவித்த ஒவ்வொன்றும், இழந்தவர்களுக்கு மறுவாழ்வு ஊதியம் குறைவாக இருந்தவர்களுக்கு ஊதிய உயர்வு, மக்களுக்குச் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற அந்தக் கடமையான பணிகள் யாவும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அதேபோல, இன்றைக்கு ஓய்வூதியம் பெறுகிறவர்களைப் பற்றி, ஓய்வூதியம் வழங்குகிற அந்தத் துறையைப் பற்றிய கருத்துருவும் இங்கே விவாதிக்கப்பட்டது, பேசப்பட்டது. அதிலே குறிப்பாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏறத்தாழ 30, 40 ஆண்டுகளாக ஓய்வூதியம் பெறுகிறவர்களிலே ஒரு சாரார், 82 ஆயிரத்து 432 பேர் பல குறைகளுக்கு ஆளாகியிருந்தார்கள். தங்களுக்குச் சமமான நிலையில் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்ற முறையில் அவர்கள் முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களிலே சிலர், குறிப்பாக, அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்த ஓய்வூதியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத்திலே வழக்குப் போட்டு, அவர்களுக்கு உரிய சலுகையை வழங்க வேண்டுமென்று உயர் நீதிமன்றத்திலே தீர்ப்பு வழங்கப்பட்டு, அந்தத் தீர்ப்பைப் பின்பற்றி, வேறு பல ஓய்வூதியர் சங்கத்தார்கள் வழக்குப் போட்டு, அவர்கள் நியாயம் பெறக்கூடிய நிலைமை இருந்தது.

அதுவே தொடர்ந்த நிலையில், உயர் நீதிமன்றத்திற்குச் சென்றுதான் நீதி பெற வேண்டும் என்ற அவசியம் இல்லாத அளவிற்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த 82 ஆயிரத்து 432 ஓய்வூதியதாரர்களின் நலன் கருதி, இந்த அரசு எடுத்த முடிவின் பயன், இந்த ஆண்டுக்குள் ஓய்வூதியதாரர்களுக்குக் கிடைக்கும் என்ற உறுதியோடு இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 350 கோடி ரூபாய்



செலவில். இதெல்லாம் கனவா? இதெல்லாம் ஏமாற்றமா? இதெல்லாம் நரகத்திற்குப் போகிற வழியா? ஒரு வேளை யாராவது அங்கிருந்து எங்களைக் கூப்பிடுகிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேனே தவிர, வேறில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த நன்மைகளைச் செய்கிறபோது, (குறுக்கீடுகள்) நன்மைகளைச் செய்கிறபோது, (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். நம்முடைய எண்ணங்களின் தகுதிதான் நம்மை நரகத்திற்கோ, மோட்சத்திற்கோ அனுப்புகின்றன. சில பேர் எண்ணும் எண்ணங்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கலைராஜன், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால், உங்களையெல்லாம் பார்க்கிறபோது, அப்படியும் ஒரு இடம் இருக்குமோ என்ற சந்தேகம் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கலைராஜன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஒன்றரை மணிக்கு guillotine. உட்காருங்கள்.

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய திரு. கோ.க. மணி அவர்கள் பேசுகிறபோது, விடுதலைப் போராட்ட வீரர்கள், தியாகிகள், மொழிப் போர்த் தியாகிகள், அவர்களுடைய குடும்பத்தார் முதலானோர் பெறுகிற அந்த ஓய்வூதியத்தைப்போல, இட ஒதுக்கீட்டுப் போர்த் தியாகிகளுக்கும்கூட வழங்க வேண்டுமென்றார்கள். சில ஓய்வூதியங்கள் நீதிமன்றத்திலே அடிபட்டுப் போய்விடுகின்றன. குறிப்பாக, மொழிப் போர்த் தியாகிகளுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம், குடும்பத்தாருக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம், இனி வழங்க முடியாதவாறு உயர் நீதிமன்றத் தீர்ப்பிலே ஒரு தடை ஏற்பட்டுவிட்டது. அந்தத் தடை ஏற்பட்டது 2003–வது ஆண்டு, அதற்குப் பின்னர் ஒரு வேளை அது பற்றி மேல்முறையீடு செய்திருக்கலாமோ என்று நான் எண்ணுகிறேன். ஆனால், செய்யப்படவில்லை. ஆக, அதனுடைய விளைவு, இப்பொழுது யாருக்கும் புதிதாக ஓய்வூதியம் வழங்கினால், நாட்டிற்காக, மொத்தத்திலே தேசியத்திற்காகப் பாடுபட்டவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு வழங்குவதை உயர் நீதிமன்றத்திலேயோ, உச்ச நீதிமன்றத்திலேயோ தடை செய்துவிடக்கூடிய ஒரு ஆபத்து இருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல, திரு. சிவபுண்ணியம் அவர்கள் உரையாற்றுகிறபோது, ஏற்கெனவே முதல் ஐந்தாண்டுத் திட்டம் வருகிறபோது, தலைக்கு, தனி நபருக்கு 20 ரூபாய் என்ற வீதத்திலேதான அந்தத் திட்டம் இருந்தது என்ற அந்தப் புள்ளிவிவரத்தையும், இன்றைக்கு இது 6,000 ரூபாய்க்கு மேல் உயர்ந்திருப்பதையும் எடுத்துக் காட்டி, அவ்வளவு பெரிய வளர்ச்சி இருக்கிறது, ஆனால் பயன் குறைவாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர்த்தினார்கள். உண்மையாகவே ஒரு அரசாங்கம் எந்த அளவிற்கு முறையாக, சீராகச் செயல்படுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் எந்தத் திட்டமும் பயனளிக்கக்கூடியதாக இருக்கும். அரசு அலுவலர்கள் அந்தப் பொறுப்பை உணர்ந்து நிறைவேற்றுகிறபோது, அந்தத் திட்டத்தினுடைய பலன் மிகச் செம்மையாக இருக்கும்.

எனக்குத் தெரிந்து ஒரு அலுவலர், ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார். தஞ்சை மாவட்டத்திலே, அவர் அங்கேயிருந்து பணியாற்றியபோது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினுடைய பலனை மக்களே விரும்பினார்கள். விரும்பி, அதை ஆதரித்தார்கள். ஆனால், அதுபோல ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரோ, ஒரு துறைத் தலைவரோ, ஒரு நிருவாகத்திலே உள்ளவரோ தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியிலே, அது வேளாண்மைத் துறையாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தருகிற பணியாக இருந்தாலும் சரி அல்லது சமூக நன்மைக்கான எந்தப் பணியாக இருந்தாலும் சரி, அதை நிறைவேற்றுகிறவர்களைப் பொறுத்துத்தான் அந்தப் பணியினுடைய முழுப் பயன் மக்களுக்குப் போய்ச் சேரும்.

பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் காலத்திலேயே எடுத்துக்கொண்ட பெரிய முயற்சியான திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள், அதனுடைய பலன்கள் கடைசியாக உள்ள மக்களைப் போய் முழுவதும் சேர்ந்ததாகத் தெரியவில்லை என்று பண்டிதர் நேரு அவர்களே குறிப்பிட்டார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள்கூட ஒரு முறை ஒரு உவமையைச் சொன்னார்கள். ஒரு பனிக்கட்டியை எடுத்து ஒரு வரிசையாக நிற்கிற 50 பேர், 100 பேர்களில் முதலாமவரிடத்திலே அந்தப் பனிக்கட்டியைக் கொடுத்து, கடைசியிலே உள்ளவருக்கு அனுப்பு என்று சொன்னால், அதை ஒவ்வொரு கையாக மாற்றி அனுப்பினால், கடைசியிலே போகிறபோது கைதான் இருக்குமே தவிர, பனிக்கட்டி இருக்காது என்றார். அதுபோல, அரசுப் பணிகள் பலவற்றிலே பல குறைகள் ஏற்படுவதை மறந்துவிடக்கூடாது. சட்டமன்றத்தில் உள்ள கட்சி



வேறுபாடு, அந்தக் கட்சி வேறுபாடு காரணமாகத்தான், சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற வாய்ப்பை நாம் பெற்றோம் என்று ஒவ்வொருவரும் கருதுகிறபோது, அந்த வேறுபாடு முன்னிலைப்படுத்தி எண்ணப்பட்டாலும்கூட, அதற்கப்பால், அந்த வேறுபாடுகளுக்கு அப்பால், பொது மக்களுக்காகத்தான் நாம் இருக்கிறோம் என்ற உணர்வு நம்முடைய மனதிலே இருக்குமானால் அரசு ஆற்றுகிற பணிகளும், அது ஒரு கட்சிக்காக அல்ல, மக்களுக்காகவே என்பது தெளிவாகும். இன்னும் ஒரு வகையிலே நீங்கள் ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால், ஒரு கட்சிக்காகவும் அல்ல, ஒரு கட்சித் தலைமைக்காகவும் அல்ல, அமைச்சர்களுக்காகக்கூட அல்ல, மக்களுக்காக. அந்த மக்களுக்காக ஆற்றப்படுகிற பணிகள், திட்டப் பணிகள். அந்தத் திட்டப் பணிகளைச் செம்மையாக நிறைவேற்றுவதற்கு எந்த அளவிற்கு நாம் ஒத்துழைக்க முடியுமோ, அப்படி ஒத்துழைப்பதன்மூலமாகத்தான் இன்றைக்கு ஆறாயிரத்திற்குக் குறையாத அளவிற்கு சராசரி per capita நிதி ஒதுக்கப்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும், திட்டத்தினுடைய பலனை மக்கள் அனுபவிக்கச் செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–15

அதேபோல, ஓய்வூதியம் பெறுகிறவர்களுடைய நிலைமைகளைப் பற்றி ஒரு கருத்து. முதியோர் உதவித் தொகை பெறுகிறவர்களில், அவர்களுடைய பிள்ளைகளுக்கு 18 வயதிற்கு மேலாகியிருக்குமானால், அந்த முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப்படுகிறது. அப்படி நிறுத்தப்படக்கூடாது என்று சில நண்பர்கள், சில உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அது பற்றிய விளக்கம். முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் விதவைப் பெண், கணவனால் கைவிடப்பட்ட மனைவி ஆகியோருக்கு 18 வயதிற்கு மேற்பட்ட ஆண் வாரிசு இருந்தால், முதியோர் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகை கிடைக்காது என்று உள்ள விதிமுறை நீக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில், திருமணமாகி விதவையாகியுள்ள, மறுமணம் செய்யாமல் இருக்கும் ஆதரவற்ற பெண்களுக்கும், 30 வயது நிரம்பிய, கணவருடன் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் எவ்விதத் தொடர்பும் இல்லாமலும் அல்லது நீதிமன்றத்திலிருந்து விவாகரத்துச் சான்றிதழ் பெற்றவருமாகிய, கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கும் 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும், அவர்களுக்கும் முதியோர் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அந்த உதவித் தொகையை வழங்கலாம் என (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஆணை

வெளியிட்டுள்ளது. அந்த ஆணை பின்பற்றப்படும் என்ற காரணத்தால், முதியோர் உதவித் தொகை வழங்குவதில் அப்படி ஒரு குறை இனி ஏற்படாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் குறைகளை நீக்குவதற்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ரூ.1.2 கோடியாக உயர்த்தப்பட்டிருப்பதை மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் அறிவார்கள். எதையும் உயர்த்தினால் ஒரேயடியாக உயர்த்திடக் கூடாது. மிக வேகமாக உயர்த்தினால், பிறகு சரிந்து போகும். ஆகவே, ஒரு கோடி ரூபாயிலிருந்து 1 கோடி 20 இலட்சமாக உயர்த்தப்பட்டு கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே Lap Top Computer வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களுடைய குறைகளிலே ஒரு சிறு அளவாவது நீக்க முடியும் என்ற நம்பிக்கையோடு இதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது மாதம் ஒன்றிற்கு 16 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான சம்பளம் மற்றும் படிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணியைத் தத்தம் தொகுதிகளில் இன்னும் சிறப்பாகச் செய்ய ஏதுவாக, அவர்களுக்கு வழங்கப்படும் தொகுதிப் படி மாதம் ஒன்றிற்கு ரூபாய் 2 ஆயிரம் என்பதிலிருந்து 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈட்டுப் படி—compensatory allowance ரூபாய் 4 ஆயிரத்திலிருந்து ரூ.5 ஆயிரமாக உயர்த்தப்படும். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்தச் சம்பளம் மற்றும் படிகள் ரூபாய் 16 ஆயிரம் என்பதிலிருந்து ரூபாய் 18 ஆயிரமாக உயரும். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அரசுத் தலைமைக் கொறடா ஆகியோருக்கு வழங்கப்படும் ஈட்டுப் படி ரூபாய் 6 ஆயிரம் என்பதிலிருந்து 7 ஆயிரம் ரூபாயாகவும், தொகுதிப் படி ரூபாய் 2 ஆயிரம் என்பதிலிருந்து 3 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்படும். இதன்மூலம் மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் பேரவைத் தலைவர் ஆகியோரின் மொத்தச்



சம்பளம் மற்றும் படிகள் ரூ.18 ஆயிரம் என்பதிலிருந்து ரூ. 20 ஆயிரமாக உயரும்.

பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசுத் தலைமைக் கொறடா ஆகியோருக்கு 17,500 ரூபாய் என்பதிலிருந்து ரூ.19,500 ஆக உயர்த்தப்படும். உயர்த்தப்பட்ட படி வீதங்கள் 1-9-2006 முதல் நடைமுறைக்கு வரும்.

பிற்பகல் 1-20

மேலும், பல வெட்டுத் தீர்மானங்கள்—பெறப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் இந்த மானியத்திலே விவாதிக்கப்படுவதற்குரியதாக நேரடியாக அமையவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு ஞானசேகரனும், மற்ற உறுப்பினர்களும் திரும்பவும் எழுந்து கேட்பதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 18 ஆயிரம் ரூபாய் என்பதை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) 20 ஆயிரம் ரூபாயாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியம் உயர்த்தப்படுகிறது. அதற்கேற்ப, மாண்புமிகு அமைச்சர்களுடைய ஊதியம் 22 ஆயிரம் ரூபாயாக உயரும். அந்த விகிதாச்சார முறைப்படியே துணைத் தலைவருக்கு, கொறடாவுக்கு, அவர்களுக்குள்ள ஊதியமும் தீர்மானிக்கப்படும். (குறுக்கீடு)

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் பல அந்தந்தத் துறைக்கு உரியதாக இருக்கின்றன. அவை மின் துறைக்குரியது, வேறு பல பொதுப் பணித் துறைக்கு உரியது. கல்வித் துறைக்குரியதாக அமைந்திருக்கின்றன. அந்த வெட்டுத் தீர்மானங்கள் இந்த மானியத்தின்மீது தரப்பட்டிருந்தாலும்கூட, அந்தந்தத் துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அவர்களுடைய வேண்டுகோள்கள் அந்த வெட்டுத் தீர்மானங்களுடைய நிறைவேற்றப்படுவதற்குரிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல், இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு.ப. வேலுமணி.

**திரு. கு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி. இருக்கையில் இல்லை.

திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. காவேரி. இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.



**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 15,87,27,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 17,26,71,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வலியுறுத்தியபடி முதிய பெண்களுக்கு, ஆண் வாரிசு இருந்தாலும், அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவோம் என்பதனை இன்றைக்கு நமது அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பதற்கு உள்ளபடியே மகிழ்ச்சியை, பாராட்டுதல்களை, நன்றியை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த பல ஆண்டு காலமாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, கடந்த காலங்களில் நிறைவேற்றப்படாமல், இன்றைக்கு ஆதரவற்ற, முதிய பெண்களுக்கு, ஆண் வாரிசு இருந்தாலும் உதவித் தொகை வழங்குவது என்று அரசு எடுத்த முடிவு, மிக, மிகப் பொருத்தமான, பாராட்டுக்குரிய நடவடிக்கை.

அதேபோன்று, இந்த நடவடிக்கைக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக—சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வினை அரசு அறிவித்திருக்கிறது. மற்ற உறுப்பினர்களுக்கு ஒரு கருத்து இருக்கலாம். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய மாற்றுக் கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறது. அரசுக்கும் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. மக்களுக்கும் சிரமம் கொடுக்கக்கூடாது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு என்பது தேவையற்றது என்பது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாகும். *(குறுக்கீடு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவர்கள் கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். உட்காருங்கள்.

மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை, *(குறுக்கீடு)* வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடு)* என்ன சார்? என்ன வேண்டும்? சொல்லுங்கள்.

*பிற்பகல் 1–25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு பாலபாரதி அவர்கள் இங்கே கூறுகிறபோது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட கட்சி சார்பாக நாங்கள் இந்த ஊதிய உயர்வை எதிர்க்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் ஆண்டுகொண்டிருக்கிற கேரளாவில் இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 35,000 ரூபாய் என்று வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறதே, அதை அங்கு இருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏதாவது நிறுத்துகிறதா? அதேபோல, நாடாளுமன்றத்திலே இன்று 65,000 ரூபாய் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிறார்கள். அங்கேயிருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கள் அந்தச் சம்பளத்தை வாங்காமல் இருக்கிறார்களா? ஆகவே, இப்படிப்பட்ட நிகழ்வுகளைப் பொதுவாக அவர்களுடைய கட்சி எதிர்க்கிறது என்று சொல்லி— ஏனென்றால், ஏற்கெனவே இதுவே குறைவு என்று நாங்கள் மாண்புமிகு முதல்வரிடம் போராடிக்கொண்டிருக்கிறோம். பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திராவிலே 43,000 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மகாராஷ்டிராவிலே 65,000 ரூபாய் படியோடு சேர்த்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவர்கள் எதிர்க்காமல் இருந்தால் இன்னும்கூட, கொஞ்சம்கூடக் கொடுத்திருப்போம். *(மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, கோவிந்தசாமி?

**•திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலும் இந்தச் சம்பள உயர்வு வந்தபோதும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தக் கருத்தை வலியுறுத்தியது என்பதை நான்

நினைவுபடுத்துகிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சட்டம் இயற்றுகிற அதிகாரம் நம் கையில் இருக்கிற காரணத்தினால் நாம் கூடுதலாக இதுபோன்று ஊதியங்களை உயர்த்திக்கொள்கிறோம் என்ற கருத்து மக்கள் மனதில் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். அந்த அடிப்படையில்தான் சொல்கிறோம். எல்லா மாநிலங்களிலும், கேரளாவில் உயர்த்தியபோது, காங்கிரஸ் ஆட்சி இருக்கிறபோதுதான் உயர்த்தினீர்கள். அங்கேயும் நாங்கள் இதை எதிர்த்தோம். ஆகவே, அந்த முறையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். Right, எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) Time பாருங்கள். (குறுக்கீடு) நான் முடிக்க வேண்டும். (குறுக்கீடு) சொல்லுங்கள், திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வரி. இது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கை என்ற அடிப்படையில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கையும் அதுதான். மற்றவர்களுடைய விருப்பம் என்பதை நாங்கள் தடுக்க வேண்டும் அல்லது அதை எதிர்த்துப் பேச வேண்டுமென்பது அல்ல. இது எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு, கொள்கை.

## (இ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றன என்று அறிய விரும்புகின்றேன். கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களு வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் தி பெறப்படுகிறது. திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. சிவராஜ் அவர்களு வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் தி பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறபபெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

நினைவுபடுத்துகிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சட்டம் இயற்றுகிற அதிகாரம் நம் கையில் இருக்கிற காரணத்தினால் நாம் கூடுதலாக இதுபோன்று ஊதியங்களை உயர்த்திக்கொள்கிறோம் என்ற கருத்து மக்கள் மனதில் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். அந்த அடிப்படையில்தான் சொல்கிறோம், எல்லா மாநிலங்களிலும், கேரளாவில் உயர்த்தியபோது, காங்கிரஸ் ஆட்சி இருக்கிறபோதுதான் உயர்த்தினீர்கள். அங்கேயும் நாங்கள் இதை எதிர்த்தோம். ஆகவே, அந்த முறையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். Right, எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) Time பாருங்கள். (குறுக்கீடு) நான் முடிக்க வேண்டும். (குறுக்கீடு) சொல்லுங்கள், திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வரி. இது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கை என்ற அடிப்படையில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கையும் அதுதான். மற்றவர்களுடைய விருப்பம் என்பதை நாங்கள் தடுக்க வேண்டும் அல்லது அதை எதிர்த்துப் பேச வேண்டுமென்பது அல்ல. இது எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு, கொள்கை.

### (இ) கோரிக்கை எண் 16—நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மானியக் கோரிக்கை எண் 16—நிதித் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2006 செப்டம்பர் 1

திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.



2006 செப்டம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. சுப்ரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.466,68,21,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.18,23,55,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (ஈ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ராஜகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது



"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.15,33,57,000/– ஆகியவற்றுக்கு ரூ.121,80,94,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. மற்றும் வழங்கப்பெற வேண்டும்" என்னும் மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மேற்படாத தொகைகள் அரசுக்கு

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (உ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ். இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி.க. ராஜா. இருக்கையில் இல்லை. திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி. இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.



**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி. இருக்கையில் இல்லை.

திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி. இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இலலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவாகளுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,687,16,75,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

## 3. அறிவிப்புகள் தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு நிதி அமைச்சர்



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## 9. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல். மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2006) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2006). மாண்புமிகு நிதி அமைச்சர்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2006) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.





பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் அளிக்கும் விருந்திற்குச் செல்லப் பேருந்து வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று, 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாள், வெள்ளிக்கிழமை இரவு 7-30 மணிக்கு

Hotel Le Royal Meridien-ல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வதற்கு வசதியாகத் தனிப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அப்பேருந்துகள் 1-9-2006 அன்று மாலை 6-00 மணி முதல் 6-45 மணி வரையிலான கால அளவில், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலிருந்து புறப்பட்டு, Hotel Le Royal Meridien-ஐச் சென்றடையும் என்றும், விருந்து முடிந்தவுடன் அப்பேருந்துகள் அங்கிருந்து புறப்பட்டு, மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்புக்கு வந்து சேரும் என்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை, மீண்டும் நாளை (2-9-2006) சனிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

41. 2004-2005 ஆம் ஆண்டிற்கான அரியலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

42. 2004-2005 ஆம் ஆண்டிற்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

43. 2004-2005 ஆம் ஆண்டிற்கான கடலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

44. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்



(தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

45. 2004-2005 ஆம் ஆண்டிற்கான கோயமுத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

46. 2004-2005 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் கணக்குகளின்மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

47. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

113. மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

114. மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

115. மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

116. பொதுப் பணித் துறை-கட்டடங்கள் மற்றும் பாசனம் மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006-2007. (தமிழ்)

117. பொதுக் கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கை. (2006-2007)

## இணைப்பு I

*(71 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

தமிழக அரசின் பொது நிதி நிருவாகப் பொறுப்பு நிதித் துறையைச் சார்ந்ததாகும். ஆகவே, ஒவ்வோராண்டும் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவைக்கு அளிப்பதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநிலத்தின் பொது நிதியை நிருவகிக்கும் பொறுப்பை வகிக்கும் நிதித் துறை, மாநிலத்தின் வரவுகளையும், செலவுகளையும் நிருவகிப்பதோடு, கடன் பொறுப்புகள் நிறைவேற்றப்படுவதையும் உறுதி செய்ய வேண்டியுள்ளது. வரவுக்கேற்றபடி செலவினங்களைக் கட்டுப்படுத்தி, அரசின் நிதிநிலை குறித்த இலக்குகளை எய்தும்பொருட்டு, பொது நிதியிலிருந்து செலவுப் பொறுப்புகளைக் கோரும் பல்வேறு அரசுத் துறைகளின் கருத்துகளை, தேவை, செலவுக்கேற்ற பயன், வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம், நிதி விதிமுறைகள் ஆகியவற்றிற்கேற்ப நிதித் துறை கூர்ந்தாய்வு செய்கிறது.

2. நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் ஏழு துறைகள் இயங்கி வருகின்றன:

(1) கருவூலக் கணக்குத் துறை

(2) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(3) சிறு சேமிப்புத் துறை

(4) அரசு தகவல் தொகுப்பு விவர மையம்

(5) கூட்டுறவுத் தணிக்கைத் துறை

(6) துறைத் தணிக்கை மற்றும் சட்டப்படி அமைந்த அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை

(7) ஓய்வூதிய இயக்ககம்

3. நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரம் வருமாறு:

## கருவூலக் கணக்குத் துறை

4. கருவூலக் கணக்குத் துறை 1-4-1962 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. இத்துறையின்கீழ் 9 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 30 மாவட்டக் கருவூலங்கள், 203 சார் கருவூலங்கள், 3 வட்டார இணை இயக்குநர் அலுவலகங்கள், சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், முத்திரைத் தாள் உதவிக் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் சென்னையிலுள்ள கருவூலக் கணக்குத் துறை ஆணையாளரின் தலைமையிட அலுவலகம் ஆகியவை உள்ளன. அரசுப் பணியாளர்களுக்குச் சம்பளங்களும், ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதும், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அரசு ஒப்புதலளித்த தொகைகளை அரசுத் துறைகளுக்கு வழங்குவதும் இத்துறையின் முதன்மையான பணியாகும். அரசுக்குச் சேர வேண்டிய தொகைகளைப் பெற்று, அவற்றுக்கான விரிவான கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அளிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும். பத்திரப் பதிவுக்குப் பயன்படுத்தப்படும் முத்திரைத் தாள்கள் முறையாக வழங்கப்படுவதையும் கருவூலக் கணக்குத் துறை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நல நிதியைக் கருவூலக் கணக்குத் துறை பராமரிக்கிறது. அரசுத் துறைகள் கருவூலங்களில் வைப்பீடு செய்யும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்களைக் கருவூலங்கள் பத்திரமாகப் பாதுகாக்கின்றன.

5. மின் ஆளுகைத் திட்டத்தினைச் செயல்படுத்தத் தேர்வு செய்யப்பட்ட துறைகளில் கருவூலக் கணக்குத் துறையும் ஒன்றாகும். மின் ஆளுகை சிறப்பு முயற்சிகளை அறிமுகப்படுத்துவதற்காகப் புதிய கணினிகள் வாங்க மொத்தம் ரூ.15 கோடி நிதியொதுக்கத்தில், 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி, மூன்றாண்டு கால அளவில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டம் இத்துறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையில் நவீன வசதிகளுடன்கூடிய மின் ஆளுகைக்கான மையம் ஒன்று ஏற்படுத்தப்பட உள்ளது.

6. இதன் தொடர்பாக மின்னணுத் தீர்வை முறையில் அரசுப் பணியாளர்களுக்குச் சம்பளப் பணம் பட்டுவாடா செய்தல், தானியங்கி முறையில் பட்டியல்கள் பரிசீலித்தல், கருவூலக் கணக்கு ஆணையரக அலுவலகத்தில் அலுவலகப் பணிகளை மின்னணு அலுவலக நடைமுறைமூலம் செயல்படுத்துதல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்னணுத் தீர்வை முறையில் சம்பளப் பட்டுவாடா செய்யும் முறை அனைத்து மாவட்டக் கருவூலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கருவூலக் கணக்கு ஆணையரகம் மின்னணு ஆளுகைக்காக நவீன முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. கணினி இணைப்பின்மூலம் பட்டியல்களுக்கு உடனடியாக ஒப்பளிக்கும் முறை கரூர் மற்றும் தேனி மாவட்டம் மற்றும் தலைமைச் செயலக சம்பளக் கணக்கு அலுவலகத்திலும் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்களை ஒளிக்காட்சி-கலந்தாய்வுமூலம் நேர்காணல் செய்யும் முறையினை அமல்படுத்துவதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது.



7. இம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 203 சார் கருவூலங்களில், 201 சார் கருவூலங்கள் வங்கிமூலம் தொகை செலுத்தும் சார் கருவூலங்களாக மாற்றப்பட்டுவிட்டன. ரிசர்வ் வங்கியின் இசைவு கிடைத்தவுடன், மீதமுள்ள 2 சார் கருவூலங்களும், (திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ராதாபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம்) வங்கிமூலம் தொகை செலுத்தும் சார் கருவூலங்களாக மாற்றப்படும்.

8. பணம் மற்றும் பட்டியல்களை நேரடியாகக் கையாளுவதைத் தவிர்க்கும்பொருட்டும், பட்டியல்கள் சேதமடைவதைத் தவிர்க்கும்பொருட்டும், மாவட்டக் கருவூலங்களில் காசோலை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இந்தத் திட்டம் பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள 168 சார் கருவூலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

9. இத்துறையால் உருவாக்கப்பட்டு, தேசிய தகவல் மையத்தினால் சான்றளிக்கப்பட்ட மென்பொருளைக் கொண்டு தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம் கருவூலக் கணக்கு ஆணையரகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அனைத்திந்திய அலுவலர்களின் மாத ஊதியத்தில் மாதச் சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு, அவர்கள் ஓய்வு பெறும்போது வட்டியுடன் திருப்பி அளிக்கப்படுகிறது. அவர்களிடம் இருந்து பெறப்படும் சந்தாத் தொகை பற்றிய தகவல்கள் கருவூலம்மூலமாகப் பெறப்பட்டு, வாரிசு நியமனதாரர் பற்றிய தகவல்கள் உட்பட அனைத்துத் தகவல்களும் ஒரு தகவல் அட்டவணையில் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு

இந்த நடவடிக்கை கணினிமயமாக்கப்படுவதனால் கேட்புகள் விரைவாகத் தீர்வு செய்வது எளிதாக்கப்பட்டுள்ளது.

10. இவ்வலுவலகத்தால் நிர்வகிக்கப்படும் தமிழ்நாடு அரசு ஊழியர் மருத்துவ நல நிதித் திட்டம் முழுவதுமாகக் கணினிமயமாக்கப்பட்டு, அவ்வப்பொழுது பெறப்படும் கேட்புகள் வரிசைக்கிரமமாகத் தீர்வு செய்யப்படுகின்றன. கணினி இணைப்புமூலமாக நேரடியாகக் கேட்புகளைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11. இத்துறையால் உருவாக்கப்பட்ட மென்பொருளைக் கொண்டு, மின்னணு முறைமூலம் கருவூல ஆய்வு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மென்பொருள் தேசிய தகவல் மையத்தினால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

12. மூத்த குடிமக்களுக்கு மேலும் உதவியளிப்பதற்காக எளிய முறையில் ஓய்வூதியம் வழங்குவதற்கேற்ப, ஓய்வூதியம் வழங்கல் அலுவலகத்தை நவீனமயமாக்கும் திட்டம் ஒன்று அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

13. மாநிலத்திலுள்ள நகர்ப் பகுதி மற்றும் ஊரகப் பகுதி உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர பல்வகை நிறுவனங்களின் கணக்குகளை, அவற்றுக்குரிய சட்ட விதிகளின்கீழ் சட்டபூர்வத் தணிக்கை செய்யும் பொறுப்பு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும்.

14. பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன:

| தொடர் எண் (1) | நிறுவனங்கள் (2) | மொத்த எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 6 |
| 2. | (அ) நகராட்சிகள் | 102 |
| | (ஆ) மூன்றாம் நிலை நகராட்சிகளாக உயர்த்தப்பட்ட பேரூராட்சிகள் | 50 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 3. | பேரூராட்சிகள் | 561 |
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 30 |
| 5. | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6. | பல்கலைக்கழகங்கள் | 18 |
| 7. | உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள் | 29 |
| 8. | மாவட்ட விற்பனைக் குழுக்கள் | 24 |
| 9. | பல்வகை நிறுவனங்கள் | 09 |
| 10. | தேசிய சமூக நலத் திட்டங்கள் | 29 |
| 11. | உள்ளூர்த் திட்டக் குழுமங்கள் | 20 |
| 12. | கிராம ஊராட்சிகள் (சோதனைத் தணிக்கை மட்டும்) | 2,524 |

## நகர்ப்புறப் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடனிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

15. மேற்கூறப்பட்ட தணிக்கை நிறுவனங்களில் அனைத்து மாநகராட்சிகளிலும், 19 நகராட்சிகளிலும் 14 பல்கலைக்கழகங்களிலும் உடனிகழ்த் தணிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தணிக்கைக் குழுக்கள் இந்நிறுவனங்களிலேயே செயல்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உடனிகழ்த் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, 119 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு தணிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

16. உடனிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அளிக்கும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, குறைகள் சரி செய்யப்பட்டதை

உறுதி செய்து தணிக்கைத் தடைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புகள் அடங்கிய தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் சரி செய்யப்பட்ட பின்னர், தணிக்கை மறுப்புகளுக்குரிய பதில்கள், சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டு, அவை தொடர்பாகத் தணிக்கை மறுப்புகளுக்குத் தீர்வு காணப்படுகின்றன.

## கிராம ஊராட்சி நிறுவனங்களின் சோதனைத் தணிக்கை

17. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில், மொத்த அமைப்புகளின் எண்ணிக்கையில் 20 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த அமைப்புகளின் எண்ணிக்கை 2,524 ஆகும். மேலும், வாவினங்கள், மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரால் கிராம ஊராட்சிகள்மீது பெறப்பட்ட குறிப்பான புகார்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 2 விழுக்காடு அளவிற்குத் தணிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

18. இதர நிறுவனங்களான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், மாவட்ட வேளாண்மைக் குழுக்கள், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் பல்வகை நிறுவனங்கள் ஆகியவற்றின் தணிக்கை ஆண்டுக் கணக்குகள் வரப் பெற்ற பின்னர், உள்ளூர் அளவில் ஆண்டுத் தணிக்கையாக மேற்கொள்ளப்படுகின்றன.

## நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் இயல்பாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையைச் செயற்படுத்துதல் (Accrual Based)

19. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையைச் சீரமைக்கும் ஒரு நடவடிக்கையாக, தமிழ்நாடு அரசு, 1999-2000, 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இயல்பாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையை இரு கட்டங்களாகச் செயற்படுத்தியுள்ளது. அனைத்துப் பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இயல்பாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை செயல்படுத்தப்பட்டது.

20. ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and



Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் உண்மையான நிதிநிலையை அறிந்துகொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) தயாரிக்க, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறைக் கோட்பாட்டின்படி இந்தக் கணக்கு வைப்பு முறையை அமைப்பதே நோக்கமாகும்.

21. இந்த நடைமுறையினால், நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடு அறியவும், சொத்துப் பதிவேட்டுக் கணக்குகளில் சேர்த்து, பதிவேட்டின்மூலம் அறிந்துகொள்ளவும் முடியும். நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் மேம்படுத்தப்பட்ட கணக்கு வைப்பு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதனத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்கள் இதனால் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

22. உள்ளாட்சி நிறுவனங்களில் பேணப்பட்டு வரும் கணக்குகளில் சீர்திருத்தங்களை 2000-01 முதல் வெற்றிகரமாகச் செயல்படுத்தியதில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் பெற்றுள்ளது.

## கிராமப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் புதிய கணக்கு முறையைச் செயல்படுத்துதல்

23. பதினோராம் நிதிக் குழு பரிந்துரைத்தவாறு, மாநிலக் கணக்காயர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியவர்களுடன் கலந்தாலோசித்து, பின்னர் கிராமப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கான புதிய கணக்குப் படிவம் வடிவமைக்கப்பட்டது. ஊரக வளர்ச்சி இயக்குநருடனான கலந்தாய்வுக்குப் பின்னர், இப்படிவத்திற்கு மாநிலக் கணக்காயரின் ஒப்புதல் பெற்று மென்பொருள் (software) ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய கணக்குப் படிவத்தில் கணினிகளைப் பயன்படுத்தி கணக்குகளைப் பராமரிக்க சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கான பயிற்சி ஊரக வளர்ச்சி இயக்குநரால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

24. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு இந்திய அரசுத் தணிக்கைத் துறைத் தலைவரால் வடிவமைக்கப்பட்ட புதிய கணக்குப் படிவத்தினைப் பராமரிப்பதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினை "கட்டுப்பாட்டுத் துறையாக" (Budget Master) அரசு நியமித்துள்ளது.

## உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குதல்

25. உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும், தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அங்கீகாரமற்றவை என்பது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனவே, அரசாணை (பல்வகை) எண் 93, நிதி (நி.த) துறை, நாள் 28-3-2003-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, உள்ளாட்சி நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் இயல்பாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்குகள் முறைப்படி தயார் செய்யப்பட்டு, ஆண்டுக் கணக்குகள் இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கைச் சான்று வழங்கப்படுகின்றது.

## தணிக்கை நிலை

26. 30-6-2006 அன்றைய நிலவரப்படி பல்வேறு நிறுவனங்களின் தணிக்கை நிலை விவரம் கீழ்வருமாறு:

| தொ. எண் | நிறுவனங்களின் பெயர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | தணிக்கை முடிவுற்றது | | தணிக்கை நடைபெற்று வருவது | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | மாநகராட்சிகள் | 6 | 2002-03<br>2003-04 | 5<br>2 | 2002-03<br>2003-04<br>2004-05<br>2005-06 | 1<br>4<br>6<br>6 |
| 2. | நகராட்சிகள் & மூன்றாம் நிலை நகராட்சிகளாகப் புதிதாக நிலை உயர்த்தப்பட்ட பேரூராட்சிகள் | 102<br>102<br>102 + 49<br>102 + 50 | 2002-03<br>2003-04<br>2004-05<br>2005-06 | 101<br>74<br>37<br>1 | 2002-03<br>2003-04<br>2004-05<br>2005-06 | 1<br>28<br>114<br>151 |
| 3. | ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் | 385 | 2004-05 | 385 | 2005-06 | 385 |
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 30 | 2004-05 | 30 | 2005-06 | 30 |
| 5. | பேரூராட்சிகள் | 611<br>611<br>562<br>561 | 2002-03<br>2003-04<br>2004-05<br>2005-06 | 610<br>557<br>275<br>9 | 2002-03<br>2003-04<br>2004-05<br>2005-06 | 1<br>54<br>287<br>552 |
| 6. | பல்கலைக்கழகங்கள் | 18<br>18<br>18 | 2003-04<br>2004-05 | 17<br>10 | 2003-04<br>2004-05<br>2005-06 | 1<br>8<br>18 |
| 7. | உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள் | 29 | 2003-04<br>2004-05 | 26<br>16 | 2003-04<br>2004-05<br>2005-06 | 3<br>13<br>29 |
| 8. | விற்பனைக் குழுக்கள் | 21<br>24 | 2003-04<br>2004-05 | 19<br>11 | 2003-04<br>2004-05<br>2005-06 | 2<br>13<br>24 |
| 9. | தேசிய சமூக நலத் திட்டங்கள் | 29 | 2002-03<br>2003-04<br>2004-05 | 26<br>22<br>10 | 2002-03<br>2003-04<br>2004-05<br>2005-06 | 3<br>7<br>19<br>29 |
| 10. | உள்ளூர்த் திட்டக் குழுமங்கள் | 20 | 2001-02<br>2002-03<br>2003-04<br>2004-05 | 19<br>15<br>10<br>6 | 2001-02<br>2002-03<br>2003-04<br>2004-05<br>2005-06 | 1<br>5<br>10<br>14<br>20 |
| 11. | பல்வகை நிறுவனங்கள் | 9 | 2001-02<br>2002-03<br>2003-04<br>2004-05 | 8<br>4<br>2<br>1 | 2001-02<br>2002-03<br>2003-04<br>2004-05<br>2005-06 | 1<br>5<br>7<br>8<br>9 |
| 12. | கிராம ஊராட்சிகள் | 12,620<br>சோதனைத் தணிக்கை 20%)<br>2,524 | 2003-04<br>2004-05 | 1,050<br>240 | 2003-04<br>2004-05<br>2005-06 | 1,474<br>2,284<br>2,524 |

27. உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்தும், இதர பல்வகை நிறுவனங்களிலிருந்தும் அரசு வரையறுத்துள்ள காலக்கெடுவுக்குள் ஆண்டுக் கணக்குகள் வரப் பெற்றதும் ஆண்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படுகிறது. பெரும்பாலானவையான நிறுவனங்களில் தணிக்கைப் பணி மனநிறைவு அளிப்பதாக உள்ளது. கடந்த ஆண்டு இந்நிறுவனங்களில் இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட தணிக்கைக்கு உட்பட்ட மொத்தத் தொகை ரூ.9,406.19 கோடியாகும்.

## தணிக்கை மறுப்புகளைத் தீர் செய்யும் நடைமுறை

28. தணிக்கை அறிக்கையின்மீதான தொடர் நடவடிக்கை இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் கடும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர கால முறை அறிக்கைமூலம் அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையின் தலைவருக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றது.

29. தணிக்கை மறுப்புகளுக்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு தணிக்கை மறுப்புகள் நீக்கப்படுவது வழக்கமாகும். மேலும், தணிக்கை மறுப்புரைகளுக்குப் பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிர்வாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின்மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கை மறுப்புரைகளுக்கான உடனடித் தீர்வு காணப்படுகிறது.

30. மேலும், ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர் நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி இயக்குநரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர் நிலைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உயர் நிலைக் குழுக்கள் 1998 முதல் செயல்பட்டு வருகின்றன. 2005 ஆம் ஆண்டில் 14 மாவட்ட உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, தணிக்கை மறுப்புகள் அடங்கிய 1,169 எண்ணிக்கையிலான பத்திகள் நீக்கப்பட்டன. மிகைத் தொகை வழங்கியது மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இழப்பு ஏற்படுத்தியது ஆகியன தொடர்பாக, 2004-05 ஆம் ஆண்டில் ரூ.22.52 இலட்சம் பிடித்தம் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் நிதியில் வரவு



வைக்கப்பட்டன. இதேபோன்று, மாநில உயர் நிலைக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, இக்கூட்டத்தில் ஆய்வுக்குப் பின்னர் 17 தணிக்கை மறுப்புகள் நீக்கம் செய்யப்பட்டன. இதனால், ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெற உள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் தங்களுக்குச் சேர வேண்டிய ஓய்வூதியப் பலன்களைத் தாமதமின்றி எளிதாகப் பெற முடிகிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளதுபோன்று, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கும் உயர் நிலைக் குழுக்கள் அமைப்பதற்குக் கருதப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் உயர் நிலைக் குழுக்கள் செயல்படும் அமைப்பு இந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது என்பதும், வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற அமைப்பு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயனீட்டுச் சான்றிதழ் அளித்தல்

31. பல்கலைக்கழகங்களுக்குப் பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் நிதியுதவிகள், மற்றும் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட இதர நிறுவனங்களுக்கு மாநில/மத்திய அரசுகளினால் வழங்கப்படும் மானியங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியதற்கு இத்துறையினால் மானியங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. திட்டப் பயன்பாட்டுத் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன் பயனீட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

## சிறப்புப் பணிகள்

32. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

- நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி ஆகியவற்றில் ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியப் பயன்கள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் வழங்குதல்.
- நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்புச் செய்து வழங்குதல்.
- நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்புச் செய்து வழங்குதல்.

- உள்ளாட்சி நிறுவனங்களின் சேம நல நிதி கருவூல வைப்பு இருப்புக்கு வட்டி ஒப்பளித்தல்.
- அரசு அறக்கட்டளைகளுக்கான பொருளாளராகப் பணியாற்றுதல்.

## உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்:

33. நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்களுக்குச் சான்றளித்தல் மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 30,803 ஓய்வூதியர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர்.

34. 2006-2007 நிதி ஆண்டிற்கு உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வுக்காலப் பயன்கள் வழங்கத் தேவைப்படும் நிதி ரூ.154.13 கோடி ஆகும். ஓய்வூதியப் பயன்கள் உடனுக்குடன் இத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றன.

| தொடர் எண் | உள்ளாட்சி நிறுவனங்களின் பெயர் | ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | 2006-07 ஆம் ஆண்டுத் தேவை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | நகராட்சிகள் | 16255 | 86.44 |
| 2. | பேரூராட்சிகள் | 5652 | 24.31 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் | 8896 | 43.38 |
| | **மொத்தம்** | **30803** | **154.13** |

35. மாநகராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை ஓய்வூதியப் பயன்களுக்கான தணிக்கைச் சான்றிதழ்கள் இத்துறையின் உள்ளுறைத் தணிக்கைக் குழுக்களால் வழங்கப்படுகின்றன. அதனடிப்படையில், இவர்களது ஓய்வூதியப் பயன்களை அந்தந்த நிறுவனங்கள் தமது நிதியிலிருந்து வழங்குகின்றன.



## நகராட்சி ஓய்வூதியர்களுக்கு நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்துதல்:

36. அரசுப் பணியாளர்களுக்குச் செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல், நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம், அரசாணை (பல்வகை) எண் 1200, ந.நி.கு.வ. துறை, நாள் 25-5-1999-ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1-8-1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பின்வருமாறு 2005-06 ஆம் ஆண்டில் கோரிக்கைகள் பெறப்பட்டு, தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

| நலத் திட்டம் | | குடும்பப் பாதுகாப்புத் திட்டம் | |
|---|---|---|---|
| கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை ரூபாய் இலட்சத்தில் | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை ரூபாய் இலட்சத்தில் |
| 110 | 9.04 | 468 | 86.77 |

## உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்:

37. அரசு ஆணை எண் 533, நிதித் துறை, நாள் 17-6-1967-ன்படி, உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும், அவற்றின் முதலீடுகளும் அரசால் ஏற்கப்பட்டன. உள்ளாட்சி நிறுவனங்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து வட்டித் தொகைக் கோரிக்கை பெறப்பட்டு, அரசின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வட்டித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.8 கோடி வட்டித் தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறும் வட்டித் தொகைக் கோரிக்கையின் அடிப்படையில் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## அறக்கட்டளை நிதிக் கணக்குகளின் பொருளாளர்:

38. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் 1-4-1952 முதல் அறக்கட்டளை நிதிப் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளை நிதிக்கான பொருளாளர், கல்விக்காக ஏற்படுத்தப்படும்

அறக்கட்டளைகளுக்கு நன்கொடைகள் பெறுகிறார். அறக்கட்டளையை அரசு ஏற்று ஆணைகள் பிறப்பித்து, அரசிதழில் சம்பந்தப்பட்ட நிர்வாகத் திட்டங்கள் வெளியிடப்பட்ட பின்னரே அறக்கட்டளை செயல்பாட்டுக்கு வருகிறது.

39. இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து வரும் கோரிக்கையின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் ரூ.4 இலட்சம் மதிப்புள்ள நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், ரூ.10.21 கோடி மதிப்புள்ள 769 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. 2005-06 ஆம் ஆண்டில் அறக்கட்டளையிலிருந்து கிடைக்கப் பெற்ற வரவுகளிலிருந்து 207 பயனாளிகளுக்கு உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக ரூ.7.57 இலட்சம் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைக் கட்டணம்:**

40. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள், நகராட்சிகள் தணிக்கைக்கு 50% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.4.17 கோடி தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**சிறு சேமிப்பு**

41. சிறு சேமிப்பு, மாநிலத் திட்டங்களுக்கும், கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கும் தேவைப்படும் முக்கியமான பெரிய நிதி ஆதாரமாக விளங்குகிறது. 1-4-2002-லிருந்து மாதந்தோறும் வசூலாகும் நிகர சிறு சேமிப்பு வசூலுக்குச் சமமான தொகையை மத்திய அரசு, மாநில அரசுக்குக் கடனாக வழங்கி வருகிறது. இக்கடன் தொகைக்கு மத்திய அரசு தற்போது விதிக்கும் வட்டி வீதம் 9.5 சதவீதமாகும்.

**சிறு சேமிப்புத் திட்டங்கள்**

42. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் பல்வேறு வகையான சிறு சேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவை பின்வருமாறு:



| | | |
|---|---|---|
| 1. | பல்வகை வருவாய்த் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம் |
| 2. | வருமான வரிச் சலுகை அளிக்கும் திட்டம் | தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு<br>15 ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதி |
| 3. | கால முறை அடிப்படையிலான தொடர் வருவாய்த் திட்டம் | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் மற்றும் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் |
| 4. | தொடர் சேமிப்புத் திட்டம் | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் |
| 5. | குறித்த கால வைப்புத் திட்டம் | 1 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | | 2 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | | 3 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | | 5 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| 6. | மற்ற திட்டங்கள் | அஞ்சலக சேமிப்புத் திட்டம் |

43. பல்வேறு திட்டங்களுக்கு அளிக்கப்படும் வட்டி வீதங்கள் மத்திய அரசால் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டவையாகும். சிறு சேமிப்புத் திட்டங்களுக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் வட்டி வீதங்கள் பின்வருமாறு:

| வ. எண் | திட்டம் | வட்டி விகிதங்கள் 1–3–2003 முதல். |
|---|---|---|
| 1. | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் | 8.00% |
| 2. | 1 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.25% |
| | 2 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.50% |
| | 3 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.25% |
| | 5 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.50% |
| 3. | தேசிய சேமிப்புப் பத்திரம் 8–வது வெளியீடு | 8.00% |
| 4. | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 8.00% |
| 5. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 9% |
| 6. | அஞ்சலக சேமிப்புக் கணக்கு | 3.5% |
| 7. | அஞ்சலக தொடர் வைப்பீட்டுத் திட்டம் | மாதம் ரூ.10/–வீதம் 5 வருடம் செலுத்தினால் முடிவில் ரூ.728.90 முதிர்வுத் தொகை கிடைக்கும். |
| 8. | கிசான் விகாஸ் பத்திரம் | முதலீடு 8 வருடம் 7 மாதங்களில் இரட்டிப்பாகும். |

## 2005–06 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் சாதனை

44. ஒவ்வோர் ஆண்டும் மொத்த மாநிலத்திற்கான சிறு சேமிப்பு வசூல் இலக்கினை நிர்ணயித்து, அதில் ஒவ்வொரு மாவட்டமும் வசூலிக்க வேண்டிய தொகையின் அளவையும் மாநில அரசு வரையறுக்கிறது. 2005-2006 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட நிகர வசூல் இலக்கு ரூபாய் 5,000 கோடியாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதிலும், அரசு நிர்ணயித்துள்ள இலக்கினை எய்துவதிலும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். 2005-2006 ஆம் ஆண்டின் நிகர வசூல் தொகை ரூபாய் 5,594.13 கோடியாகும். 2006-2007 ஆம் ஆண்டுக்கான நிகர வசூல் இலக்கு ரூபாய் 5,700 கோடியாகும்.

## சிறு சேமிப்புக்குரிய முகவர் அமைப்பு

45. சிறு சேமிப்பு வசூலைத் திரட்டுவதற்கு மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். வெவ்வேறு வகை சேமிப்புத் திட்டங்களுக்காக 3 வகையான முகவரமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | முகவரமைப்பு வகை | நியமிக்கப்பட்ட திட்டங்கள் | 31-3-2006 ஆம் நாள் நிலவரப்படி மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 15,397 |
| 2. | மகளிர் முகவர்கள் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 26,588 |
| 3. | அதிகாரபூர்வமான முகவர்கள் (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்) | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 3,055 |
| | மொத்தம் | | 45,040 |



46. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் இதுவரை கொண்டு வரப்படாத வட்டாரங்கள்/கிராமங்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் முகவர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த வகையில், 400 குடும்பங்களுக்கு ஒரு முகவர் எனும் அளவை அடைய அரசால் இலக்கிடப்பட்டுள்ளது.

## முகவர்களுக்கான ஊக்கத் தொகை:-

47. முகவர்கள் அவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காகக் கீழ்க்காணும் வீதத்தில் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:

| தொடர் எண் | முகவரமைப்பு வகை | மத்திய அரசு வழங்கும் தரகுத் தொகை | மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகமைத் திட்டம் | 1% | 0.5% | 1.5% |
| 2. | மகளிர் முகவர் திட்டம் | 4% | 2% | 6% |
| 3. | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் | 1% | இல்லை | 1% |
| 4. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 0.5% | இல்லை | 0.5% |

48. மின்னணு இணைப்புத் தீர்வுமூலம் முகவர்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் அஞ்சலகங்களிலேயே அவர்களின் ஊக்கத் தொகை அவரவர் கணக்குகளில் வரவு வைக்கப்பட அனைத்து மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்காக ரூபாய் 70 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது.

## சிறு சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள்

49. தொடர் விளம்பரங்கள்மூலமும், முகவர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு ஊக்கத் தொகை வழங்குதல்மூலமும், தமிழ்நாட்டில் சிறு சேமிப்புத் திட்டத்தை அரசு செம்மையாக ஊக்குவித்து வருகிறது. சிறு சேமிப்பு வசூலில் ஈடுபட உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும்பொருட்டு, முந்தைய ஆண்டைவிட நடப்பு ஆண்டில் கூடுதலாக சிறு சேமிப்பு நிகர வசூலை ஈட்டிய மாவட்டங்களுக்கு, அவை ஈட்டிய வசூல் தொகை அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டும் அரசு ஊக்க மானியம் வழங்குகிறது. சிறப்பாகச் செயல்பட்ட மாவட்டங்களுக்கு

ஊக்கத் தொகை வழங்குவதற்காக 2005-2006 ஆம் ஆண்டிற்கு அரசு ரூபாய் 40 கோடி அனுமதித்தது. இவ்வூக்கத் தொகையானது பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், சுகாதார நிலையங்கள் முதலியவற்றை மேம்படுத்துதல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. தமது மாவட்டங்களில் சிறு சேமிப்பைத் திரட்டுவதில் மாவட்ட அதிகாரிகளுக்கிடையே உற்சாகமான போட்டியை இத்திட்டம் ஏற்படுத்துகிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 40 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அரசு தகவல் தொகுப்பு விவர மையம்

50. அரசுத் துறைகளின் பலதரப்பட்ட நிதிச் செயல்பாட்டுப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும், அவற்றைத் தகவல் தொகுப்பு முறை வாயிலாக ஆராய்வதற்கும், மேம்பட்ட முறையில் நிதி ஒதுக்கீடு செய்யவும் வழிவகுக்கும் ஒரு சிறந்த தகவல் தொகுப்பு மேலாண்மை மையமாக செயல்படுவதற்காக, அரசு தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இம்மையம் தற்போது பின்வரும் பணிகளை மேற்கொண்டுள்ளது:

(1) அரசுத் தேர்வு இயக்ககத்தினால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு/ மேல்நிலைப் பள்ளித் தேர்வு மற்றும் துணைத் தேர்வு முடிவுகள் வெளியிடுவதற்கு உதவி புரிதல்

(2) அரசுத் தேர்வு இயக்ககத்தினால் நடத்தப்படும் ஊரகச் செயல் திறன் சோதனைத் தேர்வு முடிவுகள் வெளியிடுவதற்கு உதவி புரிதல்

(3) தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் நியமன வாரியம் நடத்திடும் உதவி ஆய்வாளர், காவலர், தீயணைப்புப் படை வீரர் மற்றும் சிறைப் பாதுகாவலர் தேர்வுகளின் தெரிவுப் பணிகள், தேர்வு முடிவுகள் வெளியிடுவதற்கு உதவி புரிதல்

(4) தொடக்கக் கல்வி இயக்ககத்தின் வேண்டுதலின்படி, மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வைப்பு நிதியைக் கையாளுதல்

## தேர்வு முடிவுகளைக் கணினிமயமாக்குதல்

51. பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் 1974 செப்டம்பரில் கணினிமயமாக்கப்பட்டன. மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகளைத்



தொகுக்கும் பணி 1980 மார்ச் மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்போதிலிருந்து, மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளித் தேர்வு முடிவுகள் உட்பட அனைத்துப் பள்ளி இறுதித் தேர்வு முடிவுகளும் முறையாகத் தொகுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறும் தேர்வுகளின் முடிவுகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் துல்லியமாக வெளியிடப்படுகின்றன. 2005 ஆம் ஆண்டில் 18,07,112 மாணவர்களின் தேர்வு முடிவுகள் தொகுக்கப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

### அட்டவணை

| தேர்வுகள் | மார்ச் | சிறப்புத் துணைத் தேர்வு | அக்டோபர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளி | 5,72,229 | 1,08,632 | 46,534 | 7,27,395 |
| பத்தாம் வகுப்பு | 7,69,525 | 98,816 | 68,720 | 9,37,061 |
| மெட்ரிகுலேஷன் | 95,867 | 8,029 | 4,889 | 1,08,785 |
| ஆங்கிலோ இந்தியன் | 4,887 | 231 | 131 | 5,249 |
| ஊரகச் செயல் திறன் சோதனை | 28,622 | – | – | 28,622 |
| மொத்தம் | 14,71,130 | 2,15,708 | 1,20,274 | 18,07,112 |

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம்

52. 49,076 ஆண் மற்றும் பெண் நிலை II காவலர்கள் மற்றும் 10,345 தீயணைப்புப் படை வீரர்கள் ஆகியோர் தேர்வு செய்யப்படுவதற்கு அரசு தகவல் தொகுப்பு விவர மையம் உதவி செய்துள்ளது.

## ஆசிரியர் வைப்பு நிதி

53. இம்மையத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் வைப்பு நிதிக் கணக்குகளைத் தொகுத்து, கணக்குத் தாள்களைத் தொகுக்கும் பணி நடைபெறுகிறது. அரசின் அறிவுரைப்படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்/நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குப் புதிதாக ஆசிரியர் வைப்பு நிதிக் கணக்கு எண்கள் தொகுத்து வழங்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

54. ஊராட்சி ஒன்றியப் பள்ளி சந்தாதாரர்களின் 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான கணக்குத் தாள்கள் தொடக்கக் கல்வி இயக்குநரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டுக்கான கணக்குத் தாள்கள் தயார் செய்யப்பட்டு வழங்கப்படும் நிலையில் உள்ளது. மேலும் 2000-01 முதல் 2004-05 முடியவுள்ள ஆண்டுகளுக்கான கணக்குகளைத் தொகுத்து, முதனிலைப் பேரேடுகள் தயாரிக்கப்பட்டு, தொடக்கக் கல்வி இயக்குநரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொடக்கக் கல்வி இயக்குநரகத்திலிருந்து திருத்திய பேரேடுகள் பெறப்பட்டபின், கணக்குத் தாள்கள் தொகுக்கப்பட்டு, அத்துறையிடம் ஒப்படைக்கப்படும்.

55. இந்த ஆண்டு மொத்தம் 8,63,424 ஆசிரியர் வைப்பு நிதியின் கணக்குத் தாள்கள் தொடக்கக் கல்வி இயக்குநரகத்திற்கு வழங்கப்பட்ட விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் வருமாறு:

| வருடம் | சந்தாதாரர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1996–1997 | 84,016 |
| 1997–1998 | 72,928 |
| 1998–1999 | 69,976 |
| 1999–2000 | 89,784 |
| 2000–2001 | 93,928 |
| 2001–2002 | 1,52,024 |
| 2002–2003 | 1,07,644 |
| 2003–2004 | 1,01,588 |
| 2004–2005 | 91,536 |
| **மொத்தம்** | **8,63,424** |

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

56. "சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற கூட்டுறவுத் தணிக்கை" என்ற கொள்கையின் அடிப்படையில் கூட்டுறவுத் தணிக்கைத் துறை 17-6-1981-ல் உருவாக்கப்பட்டது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக, 14 செயல் பதிவாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 80 ஆம் பிரிவிற்கிணங்கத் தணிக்கை மேற்கொள்வது கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் முக்கியப் பணியாகும்.



57. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் கீழ் வரும் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| தொடர் எண் | பதிவாளரின் பெயர் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 11,158 |
| 2. | கைத்தறி மற்றும் துணி ஆணையர் | 1,630 |
| 3. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 358 |
| 4. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 1,794 |
| 5. | தலைமைச் செயல் அலுவலர், பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | |
| 6. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 1,031 |
| 7. | மீன்வளத் துறை இயக்குநர் | 1,080 |
| 8. | கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் | 957 |
| 9. | சர்க்கரைத் துறை ஆணையர் | 18 |
| 10. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 374 |
| 11. | வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் | 220 |
| 12. | பட்டுப் புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | 45 |
| 13. | சமூக நலத் துறை இயக்குநர் | 139 |
| 14. | ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் | 38 |
| | மொத்தம் | 18,842 |

## கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்:

58. கணக்குகளைச் சரிபார்க்கவும், ஐந்தொகைக் கணக்கும், வரவு-செலவுக் கணக்கும், முறையாகவும், சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் • பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்யவும் கூட்டுறவுத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

59. கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை இரு வகைப்படும். அவையாவன:

1) உடனிகழ்த் தணிக்கை.

2) அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கை.

**உடனிகழ்த் தணிக்கை:**

60. 45 நாட்களில் தணிக்கையினை முடிக்கக்கூடிய அளவில் உள்ள சிறிய கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைகளுக்கு உடனிகழ்த் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையாளரின் நிலை மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 2005-2006 ஆம் நிதியாண்டில் தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 2.01 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கை:**

61. பெரிய அளவிலான நிறுவனங்களில் அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கையாளர்களை நியமித்து தணிக்கை செய்யப்படுகிறது. இதன்கீழ் தணிக்கை செய்யும்பொழுது ஏற்படும் தணிக்கைச் செலவு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அவர்களுடைய நிதிநிலை மற்றும் மொத்த நிதி நடவடிக்கைகளின் அடிப்படையில் முழுமையான கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, அரசு 23-11-2004 முதல் தணிக்கைச் செலவு வசூலிப்பை 100 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாகக் குறைத்துள்ளது. 2005-2006 ஆம் நிதியாண்டில் அடிப்படை விதி தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 6.73 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**தணிக்கைப் பணியில் முன்னேற்றம்:**

62. கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவுத் தணிக்கைத் துறை மேற்கொண்ட தணிக்கைகளின் விவரம் வருமாறு:

| வ. எண் | ஆண்டு | முடிக்கப் பெற்ற தணிக்கை அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2001–2002 | 19,753 |
| 2. | 2002–2003 | 21,654 |
| 3. | 2003–2004 | 21,842 |
| 4. | 2004–2005 | 20,018 |
| 5. | 2005–2006 | 18,335 |



**சிறப்பு அறிக்கைகள்:**

63. நிதி இழப்பு மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளை மீறிய பற்று வரவுகள் மற்றும் சட்ட மீறல் உள்ளிட்டவை அடங்கிய கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாகக் கூட்டுறவுத் தணிக்கைத் துறை அளித்த சிறப்பு அறிக்கைகள் மற்றும் கடந்த ஐந்தாண்டு காலத்தில் அவற்றில் சம்பந்தப்பட்ட தொகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | ஆண்டு | சிறப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2001–2002 | 1,261 | 6,902.90 |
| 2. | 2002–2003 | 1,445 | 7,450.56 |
| 3. | 2003–2004 | 1,146 | 14,518.22 |
| 4. | 2004–2005 | 839 | 23,696.28 |
| 5. | 2005–2006 | 690 | 5,295.34 |

**துறைத் தணிக்கை மற்றும் சட்டபூர்வ நிறுவனத் தணிக்கைத் துறை**

64. "அரசு வணிகத் திட்டத் தணிக்கைத் துறை" 1969 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு இத்துறை மேலும் வலுப்படுத்தப்பட்டு, மறுசீரமைக்கப்பட்டது. இந்திய அரசு தலைமைக் கணக்குத் தணிக்கைத் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகளின்படி, சுதந்திரமாக இயங்கும் உள் தணிக்கைத் துறையை உருவாக்கும் வகையில், இத்துறை மறுசீரமைக்கப்பட்டு, இத்துறையின் பெயர் "துறைத் தணிக்கை மற்றும் சட்டபூர் [illegible] தணிக்கைத் துறை" என மாற்றியமைக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227436
சென்னை-600 008

## தணிக்கை வரம்பு

65. இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டுள்ள நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சட்டபூர்வ நிறுவனங்கள் | 10 |
| 2 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்கள | 78.644 |
| 3. | அரசுத் துறைகள் | 14 |
| 4. | பிற நிறுவனங்கள் | 2.646 |

66. இவற்றைத் தவிர, ஆண்டுதோறும் ரூ.0.20 இலட்சம் மற்றும் அதற்கு மேல் தொடர் மானியமாகவும், ரூ.1.20 இலட்சம் மற்றும் அதற்கு மேல் தொடரா மானியமாகவும் மானியம் பெறும் 428 அரசு சாரா நிறுவனங்களின் தணிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

67. 2004-2005 ஆம் ஆண்டில் சட்டபூர்வ நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வமற்ற நிறுவனங்களில் ரூ.8,964.01 கோடி மதிப்பிற்கு வரவு-செலவுகள் (சட்டபூர்வ நிறுவனங்கள் ரூ.2,118.92 கோடி மற்றும் சட்டபூர்வமற்ற நிறுவனங்கள் ரூ.6,845.09 கோடி) தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

## தணிக்கை நிலை

68. 30-6-2006 அன்று தணிக்கை நிலை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | தணிக்கை நிறுவனத்தின் பெயர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | எந்த ஆண்டு தணிக்கை முடிக்கப் பட்டுள்ளது | எந்த ஆண்டிற்கான தணிக்கை நடைபெறுகிறது |
|---|---|---|---|---|
| 1. | சட்டபூர்வ நிறுவனங்கள் | 10 | 2004-05 7<br>2005-06 7 | 2004-05 3<br>2005-06 3 |
| 2. | சட்டபூர்வமற்ற நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் நிறுவனங்கள் | 2.984 | 2002-03 | 2003-04 |
| | மாவட்ட நூலகங்கள் | 30 | 2003-04 | 2004-05 |
| | சிறு சேமிப்பு – மாவட்ட அலுவலகங்கள் | 30 | 2003-04 | 2004-05 |
| | மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி | 30 | 2003-04 | 2004-05 |
| | | 3,074 | | |
| 3. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்ட மையங்கள் | 78.644 | 2003-04 | 2004-05 |



## தணிக்கைச் சான்று வழங்குதல்

69. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் ஆகிய 6 பெரிய சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுக் கணக்குகள் இத்துறையில் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய அனைத்து அலகுகளின் ஒப்படைப்புக் கணக்குகள் மற்றும் 889 வேளாண்மை விரிவாக்க மையங்களின் கணக்குகள் இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன. 385 ஊராட்சி ஒன்றியங்களில் ஓய்வு பெறும் ஆசிரியர்களின் சேம நல நிதி இறுதி இருப்புக்கள் இத்துறையால் சான்றளிக்கப்படுகின்றன.

70. அரசு உதவி பெறும் 3 தனியார் பொறியியல் கல்லூரிகள், அரசு உதவி பெறும் 36 தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள், அரசு மானியம் பெறும் 428 அரசு சாரா நிறுவனங்களின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

71. தணிக்கை வரம்பிற்குட்பட்ட சட்டபூர்வ வாரியப் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு பாடநூல் கழகப் பணியாளர்களின் ஓய்வூதிய முன்மொழிவுகள் இத்துறையால் சரிபார்க்கப்பட்டுச் சான்றளிக்கப்படுகின்றன.

## சிறப்புத் தணிக்கை

72. வாலாயத் தணிக்கையுடன், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பிற அரசுத் துறைகளின் சிறப்புத் தணிக்கையும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

73. அனைத்து அரசுப் பணியாளர்களின் 1-1-1996 நிலை திருத்திய ஊதிய நிர்ணயத் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. வருவாய் மற்றும் காவல் துறைக்கான தணிக்கை முடிக்கப்பட்டு, கடும் குறைபாடுகள், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் மற்றும் அரசுச் செயலாளர்களுக்கும், நிதித் துறைச் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. பிற துறைகளின் தணிக்கை நடைபெற்று வருகிறது.

74. பின்வரும் அரசுத் துறைகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு/ மருந்தகங்களுக்கு மருந்து விநியோகம் குறித்து சிறப்புத் தணிக்கை 2005-2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

1) குடும்ப நல இயக்ககம்

2) மருத்துவக் கல்வி இயக்ககம்

3) பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் இயக்ககம்

4) மருத்துவம் மற்றும் ஊரகப் பணிகள் இயக்ககம்

75. சிறப்புத் தணிக்கை அறிக்கையுடன், மேற்கண்ட துறைகளுக்குட்பட்ட மருத்துவமனைகள் / மருந்தகங்களுக்கு மருந்துகள் வழங்கும் தற்போதைய நடைமுறையில் கணக்குகள் பேணுதல் தொடர்பான முறையினை மேம்படுத்தக் கருத்துருக்கள் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## தணிக்கைத் தடைத் தீர்வு

76. நிர்வாகத் துறை அலுவலர்களால் மாதந்தோறும் ஏற்பாடு செய்யப்படும் கூட்டமர்வுகளில் இத்துறையின் மாவட்ட அலுவலர்கள் கலந்துகொள்கின்றனர். பெறப்பட்ட பதில்கள் மற்றும் ஆவணங்களைச் சரிபார்த்து, நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. இதனால் தேவையற்ற கடிதப் போக்குவரத்துகள் தவிர்க்கப்படுவதுடன், மேலும் தாமதமின்றி தணிக்கைத் தடைகள் உடனுக்குடன் தீர்வு செய்யப்படுகின்றன. இத்துறையால் ஓய்வூதிய முன்மொழிவுகள் சரிபார்க்கப்பட்டு சான்றளிக்கப்படும் நிறுவனங்களில் ஓய்வு பெறும் பணியாளர்கள், காலதாமதமின்றி உடனுக்குடன் ஓய்வூதியப் பயன்கள் பெற்று வருகின்றனர்.

## 2005–2006 ஆம் ஆண்டில் செயலாக்கம்:

77. 2005-2006 ஆம் ஆண்டில் 19,719 தணிக்கைத் தடைகள் (2004-2005 ஆம் ஆண்டு வரையுள்ள கணக்குகளில்) எழுப்பப்பட்டன. 2005-2006 ஆம் ஆண்டில் தணிக்கைத் தடைகளில் ஆட்சேபிக்கப்பட்ட தொகை ரூ.4.24 கோடி சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் வசூலிக்கப்பட்டு 13,596 தணிக்கைத் தடைகள் (முந்தைய ஆண்டுத் தணிக்கை அறிக்கைகளில் குறிப்பிட்ட தணிக்கைத் தடைகள் உட்பட) தீர்க்கப்பட்டன.



## தணிக்கைக் கட்டண வசூல்

78. 2005-2006 ஆம் ஆண்டில் இத்துறை தணிக்கைக் கட்டணமாக ரூ.5.22 கோடி ஈட்டியுள்ளது. தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1) | சட்டபூர்வ வாரியங்கள் (தணிக்கை வரம்பிற்குட்பட்டவை) | ரூ.5.04 கோடி |
| 2) | வக்ஃபு மற்றும் அரசு மானியம் பெறும் நிறுவனங்கள் | ரூ.0.18 கோடி |
| | மொத்தம் | ரூ.5.22 கோடி |

## ஓய்வூதிய இயக்ககம்

79. ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற பின் ஓய்வூதிய விதிகளின்கீழ், அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் ஓய்வூதியத்தை மாவட்டக் கருவூலங்கள், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் பொதுத் துறை வங்கிகளிடமிருந்து பெற்று வருகின்றனர். இவர்களைத்தவிர, குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேலும், ஓய்வூதியர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே வருகிறது. இவர்களுக்கு ஓய்வூதியம் சம்பந்தமாகப் பல்வேறு பிரச்சினைகள் காலப்போக்கில் எழுகின்றன. ஓய்வூதியம் கணக்கிடுவதற்கு விடுபட்ட பணிக்காலம், திருத்திய ஓய்வூதிய நிர்ணயம், ஓய்வூதியம் கிடைக்கப் பெறாமை போன்ற பிரச்சினைகள் அவற்றில் முக்கியமானவையாகும். இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வயதான ஓய்வூதியதாரர்கள், தாங்கள் பணிபுரிந்த பல்வேறு அலுவலகங்களுக்குச் சென்று விவரங்களைப் பெற மிகுந்த சிரமப்படுகிறார்கள். மூத்த வயதினரான ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அவர்களின் நலன்களைக் காப்பதற்கும் ஒரு தனி அமைப்பு தேவை எனக் கருதி, அவர்களுக்கு ஒரு ஓய்வூதிய இயக்ககத் துறையை, 1-9-1994 முதல் நடைமுறைப்படுத்திட தமிழக அரசு ஆணையிட்டது. இந்த ஓய்வூதிய இயக்ககம் அரசு நிதித் துறையில் இணைச் செயலர் நிலையில் ஒரு இயக்குநரையும், அரசு நிதித் துறையில் துணைச் செயலர் நிலையில் ஒரு இணை இயக்குநரையும், துணை இயக்குநர்கள் மற்றும் ஆதாரப் பணியாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த இயக்குநரகம் தற்போது கீழ் வரும் பணிகளைச் செய்து வருகிறது:

(i) ஓய்வூதியர்கள் குறைகளைத் தீர்த்தல்.

(ii) அனைத்து அரசு அலுவலர்களும்/தலைமை துறை அலுவலர்களும் ஓய்வூதியக் கருத்துருவினை மாநிலக் கணக்காயர்களுக்கு உரிய நாளில் அனுப்பினார்களா என்பதனை உறுதி செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

(iii) மாநிலக் கணக்காயர் அலுவலகத்தில் தொடர்புகொண்டு, ஓய்வுபெறும் நபர்களுக்கு ஓய்வுபெறும் நாளன்று அனைத்து ஓய்வூதியப் பயன்களும் தாமதமின்றிப் பெற்றிட ஆவன செய்தல்.

(iv) ஓய்வூதியர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(v) கருவூலக் கணக்குத் துறையில் பராமரிக்கப்பட்டு வந்த சிறப்பு சேம நல நிதித் திட்டத்தினை இத்துறைக்கு மாற்றம் செய்து அப்பணிகளை இத்துறையில் கவனித்தல்.

(vi) கணக்கு அலுவலர் (நிதி) அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு தொழிற்சாலைப் பணியாளர்களது சேம நல நிதித் திட்டம் மற்றும் தொடர்பான பணிகளை இத்துறைக்கு மாற்றல் செய்து பராமரித்தல்.

(vii) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் மருத்துவ நல நிதித் திட்டம், 1995.

(viii) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்பப் பாதுகாப்பு நல நிதித் திட்டம், 1997.

(ix) தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000.

80. 31-3-2006 வரை ஓய்வூதியம் பெறும் நபர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:



| விவரம் | ஓய்வூதியர்கள் | குடும்ப ஓய்வூதியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| சிவில் ஓய்வூதியர் | 2,91,230 | 1,26,888 | 4,18,118 |
| ஆசிரியர் ஓய்வூதியர் | 65,458 | 27,162 | 92,620 |
| பிற ஓய்வூதியர்கள் | 49,428 | – | 49,428 |
| மொத்தம் | 4,06,116 | 1,54,050 | 5,60,166 |

**ஓய்வூதியர்கள் குறை களைவு**

81. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஓய்வூதியர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை நான்கு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்பட்டு வருகிறது. இயக்குநரக அலுவலர் ஒருவர் இக்கூட்டத்தில் பங்கேற்று, அம்மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்கள் குறைகள் கேட்டறிந்து, விரைந்து முடித்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிந்து வருகிறார். மேலும், மாநிலக் கணக்காயர் அலுவலகத்தில் அது சம்பந்தமாகக் கோப்பு நிலுவையில் இருந்தால் தொடர் நடவடிக்கைகள் இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நேரடியாகவோ அல்லது முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாகவோ பெறப்படும் மனுக்களைக் கருணையுடன் பரிசீலித்து, அவர்களது துறைத் தலைவர்களுடன் தொடர்புகொண்டு ஓய்வூதியர்கள் குறைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. ஓய்வு பெறும் அரசு அலுவலர்கள் தாமதமின்றி உடனடியாகத் தங்களது ஓய்வூதியப் பயன்களைப் பெற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

82. ஓய்வூதியர்களின் குறை தீர்க்கும் மன்றம் (Pension Adalat) உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக் குழுவால் 22-2-2002 முதல் அமைக்கப்பட்டு செயல்படுகிறது. இந்த மன்றத்தினால் வழங்கப்படும் கட்டளைகளின்மீது தொடர் நடவடிக்கை எடுத்திட அரசு ஓய்வூதிய இயக்குநர், தலைமைச் செயலக நிர்வாகத் துறை சார்பாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயர் சார்பாளர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஓய்வூதிய இயக்குநர் இதன் தொடர்பு அலுவலராவார். மாதந்தோறும் இந்த அதாலத் நடைபெறுகிறது. மேலும், அதிக அளவில் ஓய்வூதியர் பயனடைந்திடும் வகையில் இது டிசம்பர் 2003 முதல் மாதமிரு முறை நடைபெறுகிறது.

83. ஓய்வூதியப் பயன்களை ஓய்வூதியர்கள் அறிந்துகொள்ளும்பொருட்டு வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.tn.gov.in/dop) ஓய்வூதியப் படிவங்கள் இணையதளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காகப் பெற்றுக்கொள்ளலாம். மின் அஞ்சல் மூலமாகவும் இத்துறையினைத் தொடர்புகொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் குறியீடு dop@tn.nic.in.

## 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ நல நிதித் திட்டம்

84. தமிழ்நாடு அரசு சிவில், ஆசிரியர் மற்றும் தமிழக அரசு சார்ந்த இந்திய அரசுப் பணியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட சிறப்பு சிகிச்சை/அறுவை சிகிச்சை மேற்கொண்டதற்கு நிதி உதவி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ நல நிதித் திட்டம் 1-7-1995 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியர் தனது வாழ்நாளில் மேற்கொண்ட மருத்துவ சிகிச்சை/அறுவை சிகிச்சைக்கான செலவுத் தொகையில் 75% அல்லது அதிகபட்சமாக ரூ.50,000/-, இதில் எது குறைவோ, இந்த நிதியிலிருந்து அத்தொகை அவருக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ரூ.10/- பிடித்தம் செய்யப்படுகிறது. 31-3-2006 வரை ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட 25,930 விண்ணப்பங்களுக்கு ரூ.25.45 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம், 1997

85. தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம் 1-1-1997 முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் ஓய்வூதியர் ஒரு குறிப்பிட்ட சந்தாத் தொகையைத் தொடர்ந்து பன்னிரண்டு மாதங்கள் செலுத்தியிருக்க வேண்டும். இந்த நிதி 1-1-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட சந்தாத் தொகையைக் குறைந்தது ஓராண்டாவது செலுத்திய பின்னர் ஓய்வூதியர் இறந்தால் அவரது மனைவி (அ) கணவர்/நியமனதாரர்/வாரிசுதாரருக்கு ரூ.25,000/- வழங்கப்படுகிறது. இது ஒரு விருப்பத் திட்டம். ஓய்வூதியர் இத்திட்டத்தில் சேர்ந்த பின்பு இத்திட்டத்திலிருந்து விலகிக்கொள்ள நேர்ந்தால் அவர் மாதந்தோறும் செலுத்திய தொகை திரும்ப வழங்கப்படும். தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் ரூ.70/- மாதச் சந்தா ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்படுகிறது. 30-6-2006 முடிய



இத்திட்டத்தில் 58,421 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ரூ.146.92 கோடி அளவில், இறந்து போன ஓய்வூதியரின் குடும்பங்களுக்கு குடும்பப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

## 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம்

86. அரசுத் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தினக்கூலிப் பணியாளர்களின் நலன் கருதி இத்திட்டம் 1969 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக 1-4-1989-க்கு முன்னர் பணியாளர்களின் கூலித் தொகையில் 8.33 சதவீதத் தொகை சந்தாவாகவும், அதற்குச் சரிசமமான அளவு நிறுவனரின் பங்குத் தொகையாகவும் அளிக்கப்பட்டு வந்தது. 1-4-1989-க்குப் பின்னர் பணியாளரின் கூலித் தொகையில் 10 சதவீதத் தொகை சந்தாவாகவும், அதற்குச் சரிசமமான அளவு அரசுப் பங்காக வழங்கப்பட்டு வருகிறது. விவசாயம், வனத் துறை, பொதுப் பணித் துறை, கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ச்சித் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் விதைப் பண்ணைகள் போன்ற அரசுத் துறைகள் சார்ந்த 453 அலகுகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, 20,200 உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் கணக்குகள் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ரூ. 43.23 கோடி அளவிலான வருவாய் அரசு தன் வைப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

## 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்

87. இந்தத் திட்டம் 1-4-1984 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூ.20/- வீதம் 148 மாதங்கள் வரை அரசுப் பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அத்தொகை பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய சந்தாத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூ.5,000/- கொடுக்கப்படுகிறது. இத்தொகை 15-9-2000 முதல் ரூ.10,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்

88. இத்திட்டம் 1-10-2000 முதல் எல்லா நிரந்தர அரசு ஊழியர்களுக்கும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

[2006 செப்டம்பர் 1

அ. இத்திட்டத்தில் ரூ.50/- வீதம் மாதா மாதம் செலுத்தி, ஓய்வு பெறும் மாதத்திற்கு முன்மாதம் வரை செலுத்தலாம். அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

ஆ. இத்திட்டத்தில், ஏற்கெனவே உள்ள பணியாளர்கள் விருப்பத்தின் பேரில் சேரலாம். 1-10-2000 அன்றோ, அல்லது அதற்குப் பின் பணியில் சேர்பவர்களுக்கு இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்தொகையுடன் வட்டியும், அரசின் பங்குத் தொகை ரூ.10,000/-ம் பணியில் இருந்து ஓய்வு பெறும்போது திரும்ப வழங்கப்படுகிறது.

89. இவ்வாறு இந்த இயக்ககம் ஓய்வூதியதாரர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குண்டான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தேவைப்படும்போது சம்பந்தப்பட்ட துறைகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதால், இதுபோன்ற சிரமமான சூழ்நிலைகளிலிருந்து வயதான ஓய்வூதியதாரர்கள் எளிதில் விடுபடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



2006 செப்டம்பர் 1]

# இணைப்பு II

*(71 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

**1.1 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பணிகளாவன:**

(i) மாநிலத் திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல்.

(ii) திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணித்தல்.

(iii) திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைமூலம் மதிப்பீடு செய்தல்.

(iv) பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைமூலமாகப் புள்ளிவிவரங்கள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வெளியிடுதல். இப்பணிகளில், மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண்மைக் கணக்கெடுப்பு மற்றும் சிறப்பு ஆய்வுகள் ஆகியவைகளுடன் மாநிலப் பொருளாதார மாதாந்திரக் கண்காணிப்பு ஆகியவை அடங்கும்.

(v) இருபது அம்சத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்.

(vi) பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் மாவட்டத் திட்டக் குழுவின் பணிகளை மாநிலத் திட்டக் குழுவின் உதவியுடன் மேற்பார்வையிடுதல்.

(vii) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து மேற்பார்வையிடுதல்.

(viii) மாநில அளவில் உலக வர்த்தக அமைப்பின் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளின் பாதிப்புகளைக் கண்காணித்தல்.

(ix) பெரிய கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

(x) சிறப்பு முயற்சிகளின்கீழ் வரும் திட்டங்களைத் துவக்குதல் மற்றும் அவற்றின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

(xi) ஆண்டுத் திட்டங்களுக்கான திட்டம் மற்றும் வரவு-செலவுத் திட்ட இணைப்பினைத் தயாரித்தல்.

(xii) தொலை உணர்வு நுட்பம் பயன்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

(xiii) ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

(xiv) மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகள்மீது தொடர் நடவடிக்கை எடுத்தல்.

## 1.2 இந்தப் பணிகள் பற்றிய குறிப்பு பின்வருமாறு:

### 1.2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்:

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முதலாகத் திட்ட ஒதுக்கீடுகளை மாநில அரசு தொடர்ந்து எய்தி வந்துள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதல் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

(ரூபாய் கோடியில்)

| திட்டக் காலம் | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|
| முதல் திட்டம் (1951-56) | 86 | 80 |
| இரண்டாவது திட்டம் (1956-61) | 186 | 188 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் (1961-69) | 608 | 613 |
| நான்காவது திட்டம் (1969-74) | 552 | 559 |
| ஐந்தாவது திட்டம் (1974-79) | 1,122 | 1,165 |
| ஆறாவது திட்டம் (1980-85) | 3,150 | 3,645 |



| | | |
|---|---|---|
| ஏழாவது திட்டம் (1985-90) | 5,750 | 6,317 |
| ஆண்டுத் திட்டம் (1990-91) | 1,450 | 1,591 |
| ஆண்டுத் திட்டம் (1991-92) | 1,600 | 1,726 |
| எட்டாவது திட்டம் (1992-97) | 10,200 | 14,024 |
| ஒன்பதாவது திட்டம் (1997-2002) | 25,000 | 25,036 |

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.29 ஆக இருந்தது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.248 ஆக உயர்ந்தது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு, உயர்ந்த அளவான ரூ.6,440 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 1.2.2 பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002-2007):

தேசிய அளவில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான கண்ணோட்டம் 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் கூட்டப்பட்ட தேசிய வளர்ச்சிக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் பத்தாவது திட்டக் காலத்தில், அதாவது 2002 முதல் 2007 வரையிலான காலத்தில், தேசிய மொத்த உற்பத்தி வீதத்தில் ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சி இருக்குமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாநிலத் திட்டக் குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ.40,000 கோடி என்ற ஒதுக்கீட்டிற்கு மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. 8 சதவீத வளர்ச்சியை அடைவதைத் தவிர, மனிதவளம் குறித்த முக்கிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

### 1.2.3 2002-2003, 2003-2004, 2004-2005 மற்றும் 2005-2006 ஆம் ஆண்டுத் திட்டம்:

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளுக்கான ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவின விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபாய கோடியில்) | செலவினம் | சாதனை விழுக்காடு |
|---|---|---|---|
| 2002-2003 | 5750.00 | 5841.05 | 101.58 |
| 2003-2004 | 7000.00 | 7088.31 | 101.26 |
| 2004-2005 | 8001.00 | 8285.84 | 103.56 |
| 2005-2006 | 9100.00 | 9675.84* | 106.33 |

* தற்பொழுதுக்கானது

### 1.2.4 2006–2007 ஆம் ஆண்டுத் திட்டம்:

2006–2007 ஆம் ஆண்டிற்கு ரூ.12,500 கோடி என்ற உயரளவு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டளவிற்கு 6–6–2006 ஆம் நாளன்று புது தில்லியில் மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் முதலமைச்சர் அளவிலான கலந்துரையாடலின்போது ஒப்புதல் பெறப்பட்டது. இந்த ஒதுக்கீடு 2005–2006 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் மிக உயர்ந்த அளவில் அமைந்துள்ளது.

### 1.2.5 ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா:

ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டம், திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் மத்திய அரசின் திட்டக் குழுவின் முழு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, குறைந்த வேளாண்மை உற்பத்தி, வேலையின்மை, சமூகம் மற்றும் ஏனைய கட்டமைப்புகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுதோறும் சிறப்பு மத்திய நிதி உதவியாக ரூ.15.00 கோடி என மூன்றாண்டுகளுக்கு மத்திய அரசு வழங்குகிறது. இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாபபு, வனவளம், சமூக வளம், நீர்வடிப் பகுதி வளர்ச்சி, சிறு பாசனம், வேளாண்மை, தோட்டக்கலை, கட்டமைப்பு வசதி (சாலைகள் மற்றும் மின் சக்தி), சமூகத் துறை (மருத்துவம் மற்றும் கல்வி) மற்றும் பிழைப்பதற்கான உதவி (வருமானம் பெருக்குவதற்கான நடவடிக்கைகள், குறிப்பாகக் கைத்தறி, தகவல் தொழில் நுட்பம், வேளாண்மை செய்முறை மற்றும் பல) ஆகியவை அடங்கும். இத்திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்திய பின்னர் தனி நபர் வருமானம் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆகியவை உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.2.6 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்/மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்:

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவியுடன்) மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவது கண்காணிக்கப்படுகிறது. திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்





ஆகியவற்றை ஒப்பளிப்பு செய்யும் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டங்களில் செயலாக்கத்தின் முன்னேற்றம் பல்வேறு நிலைகளில் மாதாந்திர அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது.

### 1.2.7 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்:

சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களைக் கண்காணிக்க ஏதுவாகவும், வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து உருவாகும் புத்தாக்கத் திட்டங்களை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக துறைகளுடனும், இதர சார்புத் துறைகளுடனும் கலந்தாலோசித்துச் செயல்படுத்தும் நோக்குடனும், "திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை" என்பது "திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை" என்று திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் 29–4–2003 நாளிட்ட 31 ஆம் அரசாணைப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து சிறப்பு முயற்சிகள் தொடர்பாகப் பின்வரும் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்பட்டன:

(அ) உயிரி எரிசக்தி உற்பத்தித் திட்டம்: உயிரி பொருள்கள் வழங்குதல்.

(ஆ) சர்க்கரை ஆலைகளிலிருந்து எத்தனால் தயாரித்தல்: கருப்பஞ்சாற்றுக் கசண்டு அல்லாத ஏனைய ஆதாரங்களான சர்க்கரைக் கிழங்கு (Sugarbeet), இனிப்புச் சோளம், மக்காச் சோளம், மரவள்ளிக் கிழங்கு மற்றும் ஏனைய மாச்சத்துத் தாவரங்களிலிருந்து எத்தனால் தயாரித்தல்.

(இ) காட்டு ஆமணக்கு மற்றும் சைமருபா கிளாக்கா மரம் ஆகியவற்றிலிருந்து உயிரி எரிவாயு தயாரித்தல்.

(ஈ) உயர் தொழில்நுட்ப விவசாயம்.

### 1.2.8 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1975 முதல் மத்தியத் திட்டக் குழுவின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. மலைப் பகுதியின் உயிரினச் சூழல்களைப் பாதுகாத்து மேம்படுத்துதல், அதனை மேலும் வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிக்கு உறுதுணையாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள், இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதும், இயற்கைச் சூழலை நிலைப்படுத்துவதும் ஆகும். இதன் அடிப்படையில் பல்வகை உயிரினச் சூழலைப் பாதுகாக்கவும், மலைவாழ் உயிரினங்களைப் பாதுகாத்துப் புத்துயிர் ஊட்டும் வகையில் அனைத்து வளர்ச்சிப் பணிகளும் திட்டமிடப்படுகின்றன. நீலகிரி மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடி பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, முன்னுரிமை நீர்வடிப் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. அதற்கான பணிகள் முன்னுரிமை நீர்வடிப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன. சாகுபடி செய்யத்தக்க நிலங்களில் வடிகால்களைச் சுத்திகரித்தல், மழை நீரைச் சேமித்தல், ஈரப்பதத்தைத் தக்கவைத்தல் போன்ற சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள்மூலம், சிறிய நுண்நீர்வடிப் பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டிற்கு மத்தியத் திட்டக் குழு சிறப்பு மத்திய உதவியாக ரூபாய் 2,210 இலட்சத்தை வருடாந்திர ஒதுக்கீடாகச் செய்து வந்தது. இந்த சிறப்பு மத்திய உதவி, மானியமாகவும், கடனாகவும் 90 : 10 என்ற அடிப்படையில் விடுவிக்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு சிறப்பு மத்திய உதவியின் மானியத்தை மட்டும் விடுவித்து வருகிறது. கடன் பகுதியை, வெளிச் சந்தைக் கடனாகப் பெறுவதற்கு மாநில அரசுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## 2005–2006 ஆம் ஆண்டின் செயல்பாடு

2005–2006 ஆம் ஆண்டிற்கு மொத்த ஒதுக்கீடு ரூபாய் 2,210 இலட்சமாகும். இந்த முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், பெருமளவு தொகை மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டப் பயிர் வளர்ப்பு, உள்ளாட்சி மன்றங்கள் மேம்பாடு, சாலைகள் மேம்பாடு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகிய திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

## 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்டச் செயற்குறிப்பு

மாநிலத்தின் சிறந்த செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு 2006–2007 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்திரத் திட்டத்திற்கு ரூபாய் 3,550 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய மத்தியத் திட்டக் குழு ஒப்புக்கொண்டுள்ளது. அதற்கேற்ப ஆண்டுத் திட்டம் ரூபாய் 3,550 இலட்சத்திற்குத் தயார் செய்யப்பட்டு, மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இத்திட்டத்தில் ஆதி திராவிடர் நலம்,



மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, உள்ளாட்சி அமைப்பு வளர்ச்சி, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக்கலை, சாலைகள், சுற்றுலா ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திட்டத்திற்கு மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

### 1.2.9 மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்:

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975–76–ல் தொடங்கப்பட்டு, மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் (90% மானியம் மற்றும் 10% கடன்) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கு மலைத் தொடர்ப் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. இது, தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பளவில் 20 விழுக்காடாகும். இத்திட்டம் தற்பொழுது தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 57 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் முழுவதுமாகச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

(அ) உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சம நிலையைப் பேணுதல்

(ஆ) இப்பகுதியில் அபரிமிதமாகக் காணப்படும் உயரிய மரபணு உயிரினங்களைப் பாதுகாத்தல்

(இ) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்பட்ட மற்றும் ஏற்படுகின்ற சீரழிவுகளைச் சரி செய்தல்

(ஈ) அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களைத் தீவிரமாகப் பங்குகொள்ளச் செய்தல்

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய வளர்ச்சிப் பணிகள், மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, சிறு பாசனம், ஊரகச் சாலைகள், கால்நடை பராமரிப்பு, மீன்வளம், பட்டு வளர்ச்சி, தொலையுணர்வு, பனைப் பொருள் வளர்ச்சி ஆகியவையாகும். இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 80 விழுக்காடு தொகை மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு ஆகிய மூன்று முக்கியத் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ.51.50 கோடி மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதி உதவியாகப் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காகப் பத்தாவது ஐந்தாண்டுக் காலத்தின் (2002–2007) முதல் நான்காண்டுகளுக்கு, அதாவது 2002–2003, 2003–2004, 2004–2005 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளுக்கு மத்தியத் திட்டக் குழு ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.10.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் யாவும், சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பின் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. துறைவாரியான ஒதுக்கீடுகளில் மண்வளப் பாதுகாப்பு, தோட்டப் பயிர்கள் மற்றும் இயற்கை வளங்களைப் பேணிக் காப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படுகிறது.

மேலும், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.17.04 கோடியாகும். எட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் உரிய துறைத் தலைவர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள், ஆண்டுத் திட்டம் 2006–2007–ல் சேர்க்கப்பட்டுள்ளன. அதற்குரிய நிதி பல்வேறு திட்டங்களுக்கும், பற்றாக்குறை உள்ள அடிப்படை வசதிகளுக்கும், உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு மத்தியத் திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு, 2006–2007 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் செய்யப்பட்டுள்ளது.

### 1.2.10 இருபது அம்சத் திட்டம்:

இத்திட்டம், நாட்டின் வறுமையினைக் குறைப்பதற்கென 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உபரி நில விநியோகம், கிராமச் சுகாதாரம், கிராமப்புற வீட்டு வசதி, வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல், சாண எரிவாயுக் கலன்கள் அமைத்தல், குழந்தைகள் நல மேம்பாடு, கிராமப்புறக் குடிநீர் வசதி, கிராம மின் வசதி மற்றும் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் மேம்பாடு ஆகியவை முக்கிய அம்சங்களாகும். இத்திட்டச் செயல்பாடுகளின் முன்னேற்றம் மாநில அளவிலும், தேசிய அளவிலும் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகின்றன. 2005–2006 ஆம் ஆண்டு அனைத்திந்திய அளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.





### 1.2.11 பெருந்திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்தல்:

அரசுத் திட்டங்களின் பயன்கள் உரிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் இத்துறையின் முக்கியப் பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறை திட்டங்களைச் செயல்படுத்தும்போதும், திட்டங்கள் முடிவுற்ற பின்னரும் மதிப்பீடுகளைச் செய்து வருகின்றது. அம்மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகள் பகுத்தாய்வு செய்யப்பட்டு, தேவையான திருத்தங்கள் மற்றும் கொள்கையளவில் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டிலிருந்து திட்டங்களைச் செயல்படுத்தும்போதே கண்காணிக்கும் முறையைக் கொண்டு வர இத்துறை உத்தேசித்துள்ளது.

### 1.2.12 உலக வர்த்தக நிறுவனப் (WTO) பிரிவு:

உலக வர்த்தக அமைப்பு தொடர்பான கொள்கை அளவிலான முடிவுகளைப் பெரும்பாலும் மத்திய அரசே கவனித்து வருகிறது. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகத்தில் அவ்வப்போது நடைபெறும் ஆய்வு மற்றும் சந்திப்புக் கூட்டங்களில் மத்திய அரசின் அக்கறையும், கருத்துகளும் எடுத்துக் கூறப்படுகின்றன. உலக வர்த்தக அமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் காரணமாக, மாநிலப்பொருளாதார மேம்பாட்டிற்கு ஏற்படும் பாதிப்புகளின்மீது மாநில அரசு அளவில் கொள்கை வகுப்பதற்கு உதவி புரியும் நோக்குடன், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் இதற்கென உலக வர்த்தக அமைப்புப் பிரிவொன்று செயல்பட்டு வருகிறது. உலக வர்த்தக அமைப்பின் கருத்துகளைப் பரவலாக்கி, அவற்றிற்கு வலிமை சேர்ப்பதோடு நில்லாது, உலக வர்த்தக அமைப்பின் கொள்கை தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளும் அடிக்கடி நடத்தப்பட்டு வருகின்றன. உலக வர்த்தக அமைப்பு தொடர்பான ஆய்வுகளைத் தமிழ்நாட்டில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்காக மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ் உடன் (Madras School of Economics) உடன்பாட்டுக் குறிப்பு ஒன்றும் கையெழுத்தாகியுள்ளது.

### 1.2 துறைத் தலைமையிடங்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

(i) மாநிலத் திட்டக் குழு

(ii) பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறை

மேற்கண்ட துறைகளின் பணிகள் பின்வரும் பக்கங்களில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:

## மாநிலத் திட்டக் குழு

**2.1** தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் மாநிலத் திட்டக் குழு செயல்படுகிறது. மாநிலத் திட்டக் குழு 19–5–2006 அன்று பேராசிரியர் மு. நாகநாதன் அவர்கள் துணைத் தலைவராகவும், மற்றும் 6 பகுதிநேர உறுப்பினர்கள், ஒரு முழு நேர உறுப்பினருடன் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. நிதித் துறைச் செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைச் செயலர் ஆகியோர் அலுவல்வழி உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்–செயலர், மாநிலத் திட்டக் குழுவின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுள்ளார்.

**2.2 மாநிலத் திட்டக் குழுவின் முக்கியப் பொறுப்புக்களாவன:**

(i) அரசின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்களைத் தயாரித்தல்

(ii) பொருளாதாரத்தின் முக்கியத் துறைகளின் நிதி மற்றும் செயல் நிலைகளைக் கண்காணித்தல்

(iii) அரசுத் திட்டங்களை, அரசுத் துறைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள்/வல்லுநர்கள்மூலம் மதிப்பீடு செய்தல்

(iv) மனித மேம்பாட்டுக் குறியீடு மற்றும் பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியன தொடர்பான வளர்ச்சிக் குறியீடுகளை பல்வேறு நிலைகளில் கண்காணித்தல்

(v) பரவலாக்கப்பட்ட திட்ட நடவடிக்கைகளை ஆதரித்து ஒருங்கிணைத்தல் மற்றும் உதவி புரிதல்

**2.3 தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்தல்:**

மாநிலத்தின் பொருளாதார நிலை குறித்த காலாண்டு அறிக்கையினை மாநிலத் திட்டக் குழு தயாரித்து, அரசு மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கிறது.



**2.4 தமிழ்நாட்டின் மனித மேம்பாட்டு அறிக்கை மற்றும் மாநிலத் திட்டங்களில் மனித மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் வழங்குதல்:**

மாநிலத் திட்டக் குழு தமிழ்நாட்டின் முதலாவது மனித மேம்பாட்டு அறிக்கையைத் தயாரித்து, 2003 ஆம் ஆண்டு வெளியிட்டது. மற்றும் இக்குழு இரண்டாவது மனித மேம்பாட்டு அறிக்கைத் தயாரிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. மேலும் திருவண்ணாமலை, சிவகங்கை, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த மாவட்டங்களில் ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா (Rastriya Sam Vikas Yojana) திட்டம் நடைபெற்று வருகின்றது. இந்த மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கைகள் உள்ளூர்த் தேவைகளை அறிந்து திட்டங்கள் தயாரிப்பதற்கான மதிப்பு மிக்க விவரங்களை வழங்கும்.

மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், மக்கள் தொடர்பு மற்றும் சமுதாயத்தில் மனித மேம்பாடு குறித்த கருத்துகளைப் பரப்புதல், மனித மேம்பாடு குறித்து மாவட்ட அளவில் பயிற்சிகள் ஏற்பாடு செய்தல், மாநிலத் திட்டங்களை மனித மேம்பாட்டுக்காக வலுப்படுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகள் 2006–2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**2.5 மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம்:**

மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் திட்டக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திட்டங்களைத் தயாரிக்கும் பணியில் மாவட்டத் திட்டக் குழுவிற்கு உதவும்பொருட்டு எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் திட்டப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. வளர்ச்சித் திட்டங்களை மாவட்டத் திட்டக் குழுக்கள் தயாரிப்பதற்காக விரிவான வழிகாட்டி நெறிமுறைகளை மாநிலத் திட்டக் குழு தயாரித்துள்ளது.

**2.6 தமிழ்நாடு நிலப் பயன்பாட்டு வாரியம்:**

மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் தலைமையில் ஒரு சிறிய பிரிவு மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்தின் பணிகளைக் கவனித்து வருகிறது.

1–4–2000 முதல், மத்திய அரசானது மாநிலங்களுக்கு "பெரு மேலாண்மை" முறையிலான வேளாண் வளர்ச்சித் திட்டம், அறிவியல்

ரீதியான நிலப் பாதுகாப்பு மற்றும் நில, நீர்வள ஆதார மேலாண்மை மற்றும் அவை தொடர்பான ஆய்வுகள்/திட்டங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. இவ்வகைச் செயல் திட்டங்களின் முழு முதலீட்டுத் தொகையானது 90 சதவீதம் மத்திய அரசும், 10 சதவீதம் மாநில அரசும் நிதிப் பொறுப்பேற்கும் விதத்தில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து ரூ.51.30 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இதற்கீடான மாநில அரசின் பங்கு ரூ.5.70 இலட்சமாகும்.

2006–2007 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடானது ரூ.60.00 இலட்சமாகும். இதில் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உதவி ரூ.54.00 இலட்சம் மற்றும் இதற்கீடான மாநில அரசின் பங்கு ரூ.6.00 இலட்சமாகும்.

**2.7 ஆண்டுத் திட்டம் மற்றும் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்தல்:**

2006–2007 ஆம் ஆண்டுக்கான வரைவு ஆண்டுத் திட்டம், ரூ.12,500 கோடிக்குத் தயாரிக்கப்பட்டது. இந்த உத்தேசத் திட்ட ஒதுக்கீடு, மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சர் ஆகியோருக்கிடையே 6–6–2006 அன்று புது தில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டது.

மேலும் மாநிலத் திட்டக் குழு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007-2012) தயாரிக்கும் பணிகளைத் தொடங்கியுள்ளது. அரசுத் துறைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு துறை நிபுணர்களுடன் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பது தொடர்பான பல்வேறு கலந்தாய்வுகளை இக்குழு தொடங்கியுள்ளது.

**2.8 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:**

மாநிலத் திட்டக் குழுவில், உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் தொடர்பான ஆய்வுகள் மற்றும் பணியரங்குகள் நடத்தவும் ரூ.31.00 இலட்சம் முன்மொழியப்பட்டுள்ளது.

## பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

**3.1** பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மாநிலத்தின் தலைமைப் புள்ளி இயல் முகமையாகும். மாநிலம் முழுமையிலும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், ஆராய்வதிலும்,



வேளாண்மை, தொழில் மற்றும் விலைவாசி ஆகிய பிரிவுகளின்கீழ் அறிக்கைகள் வெளியிடுவதும் மற்றும் புள்ளி விவரங்கள் குறித்த செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் அமைப்பாகவும் செயல்படுவதும் இத்துறையின் முக்கியப் பணியாகும்.

**3.2 பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையால் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன:**

**அ) மாநிலத் திட்டங்கள்:**

**1. தேசிய மாதிரி ஆய்வுத் திட்டம்:**

தேசிய மாதிரி ஆய்வு, தேசிய அளவில் முக்கியமாக அமைப்பு சாராப் பிரிவுகளின் பல்வேறு பொருட்களை உள்ளடக்கி அடுத்தடுத்த சுற்றுக்களில் தொடர்ந்து நடத்தப்படும் ஓர் ஒருங்கிணைந்த ஆய்வாகும். இவ்வாய்வு 6 மாதம் அல்லது ஒரு வருட காலத்தில் முழு நேரக் களப் பணியாளர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது. இது மக்களுடைய சமூகப் பொருளாதார இனங்களின்மீதான அடிப்படை விவரங்களை அளிப்பதோடு, பல்வேறு இனங்கள் குறித்த மதிப்பீடுகளைத் தயாரிக்கவும் வழிவகை செய்கிறது.

**2. மேலாண்மை முறை மற்றும் விவரங்கள் சேகரித்தலை நவீனப்படுத்துதல்:**

இத்திட்டத்தின்கீழ், கணிப்பொறி முறைகள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி ஆகியவை மேம்படுத்தப்படுகின்றன.

**ஆ) மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

**1. வேளாண்மைக் கணக்கெடுப்பு:**

நுண்ணிய அளவிலான வேளாண் திட்டமிடுவதற்கென உரிய நிலப் பதிவேடுகளிலிருந்து கைப்பற்றின் அளவு, தன்மை மற்றும் கையிருப்பின் உரிமம் பற்றிய விவரங்கள் மறு அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

**2. பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களில் பயிர் மதிப்பீட்டாய்வு நடத்துதல்:**

பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான ஒரு ஹெக்டேருக்கான விளைச்சல் விவரத்தைப் பயிர் அறுவடைப்

பரிசோதனைகள்மூலம் கண்டறிந்து, அதன்மூலம் பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் மிக நுட்பமாகக் கணக்கிடப்படுகிறது.

**3. தேசிய தொழில்நுட்ப ஆள்திறன் தகவல் முறைக்கான நோடல் மையம் ஏற்படுத்துதல்:**

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தேர்ச்சி பெற்ற பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள் ஆகியோரின் பல்வேறுபட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் தனித்தன்மை குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் அவர்களின் தேவை மற்றும் அளிப்பினை மதிப்பிடுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

**4. பொருளாதாரக் கணக்கெடுப்பு:**

வேளாண்மை (பயிர் உற்பத்தி மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் தவிர) மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்களின் விவரங்களைச் சேகரித்தல் பொருளாதாரக் கணக்கெடுப்பாகும். நூறு சதவிகித இந்திய அரசின் நிதி உதவியுடன் பொருளாதாரக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது. ஐந்தாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு *2005*–ல் மேற்கொள்ளப்பட்டது. தமிழகத்திற்கு ரூ.*588.76* இலட்சம் மொத்தம் நிதி ஒதுக்கீடாக மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் ரூ.*538.23* இலட்சம் இக்கணக்கெடுப்பிற்காக *31–3–2006* வரை செலவழிக்கப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பிற்கான படிவங்களை ஸ்கேன் செய்யும் பணி முடிவுற்று, பிப்ரவரி *2006* திங்கள் முதல் திருத்தி அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது.

**இ) மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்**

**1. பயிர்ப் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்:**

(அ) ஒவ்வொரு ஆண்டும் *20* விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோகப் புள்ளி விவரங்கள் கணக்கெடுத்தல்

(ஆ) ஒவ்வொரு பருவத்திலும், பயிர் வாரியாக நீர் பாய்ச்சப்பட்ட மற்றும் நீர் பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாகப் பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது.

**2. பயிர்ப் புள்ளி விவர மேம்பாட்டுத் திட்டம்:**

மாநிலத்தில் கிராம அளவில் அடிப்படைக் களப் பணியாளர்களான கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண்மைப் புள்ளி



விவரங்களில் காணப்படும் குறைபாடுகளை முறையாக ஆய்வு செய்து, அவற்றைச் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், முக்கிய உணவு மற்றும் உணவலலாத பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடைப் பரிசோதனை மேற்பார்வையிடப்படுகிறது.

**3.3** திட்டப் பணிகளைத் தவிர, திட்டம் சாராத் திட்டங்களின் மாநில வருவாய் மதிப்பீடு, மாநிலக் கணக்கு, மூலதன ஆக்கம், ஆண்டுத் தொழில் ஆய்வு, மாதாந்திரத் தொழிற்குறியீட்டெண், பருவமும், பயிரும் பற்றிய அறிக்கை, பயிர் முன் மதிப்பீட்டறிக்கை, உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் பயிர் மதிப்பீட்டாய்வு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், தென்னை மற்றும் கமுகு ஆய்வு, மழைப் புள்ளி விவரங்கள் சேகரித்தல், நீர்ப்பாசனத் திட்டம், விவசாயக் கூலிக் குறியீட்டெண், வீட்டு வசதிப் புள்ளி விவரம், கட்டடக் கட்டுமானச் செலவுக் குறியீட்டெண், ஆண்டு நகராட்சிப் புள்ளி இயல் கையேடு மற்றும் மாவட்டப் புள்ளி இயல் கையேடு, மாநிலப் புள்ளி இயல் கையேடு மற்றும் ஆண்டுப் புள்ளி விவரத் தொகுப்பு, ஆள் திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், அங்காடிப் புலனாய்வு மற்றும் விலைவாசி, தொழிற்சாலை ஊழியர்களின் நுகர்வு விலைக் குறியீடு, மொத்த விலைக் குறியீட்டெண், சிறுபான்மைப் பயிர்த் திட்டம், சுற்றுச்சூழல் மற்றும் விற்பனை மிகுதித் திட்டம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**3.4 மாநிலப் புள்ளி இயல் குழு:**

மாநிலப் புள்ளி இயல் குழுவானது பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும் முறைகள், அவற்றைப் பயன்படுத்தும் தன்மைகள் ஆகியவை குறித்து மேற்பார்வை செய்கிறது.

**3.5 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்:**

*43* வருவாய்க் கோட்டங்களில் அமைந்துள்ள கோட்டப் புள்ளி இயல் அலுவலகங்களுக்கும், மாநில தலைமையிடங்களுக்கும் கணினிகள் வழங்குவதற்கும், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைக்கு ஈ.பி.ஏ.பி.எக்ஸ். (EPABX) வசதி மற்றும் டி.டி.பி (D.T.P.) வசதி ஆகியவற்றை ரூ.*32.60* இலட்சம் செலவில் மேற்கொள்ளுதல்.

[2006 செப்டம்பர் 1

## மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறை

**4.1** பேரளவிலான வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு அரசு நிதியளித்து நிறைவேற்றி வருகிறது. அவ்வாறான திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை முன்மதியுடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி, மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறை தொடங்கப்பட்ட 1972 ஆம் ஆண்டு முதற்கொண்டு மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளுதல்மூலம் கொள்கைகளை வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பேற்று அரசுக்கு உதவி வருகிறது.

**4.2.** இத்துறையின் முக்கியப் பணிகளாவன:

1) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

2) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

3) மாநில நிதி நிலவரம் மற்றும் தமிழ்நாடு பொருளாதாரம் பற்றிய சிறப்புப் பகுத்தாய்வுகள் மேற்கொள்ளல்;

4) வருடாந்திர வெளியீடுகளான 'தமிழ்நாடு – ஒரு பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 'பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு மேற்கொள்ளல்'.

**4.3.** தமிழ்நாட்டில் மாநில, மைய அரசுகள் மற்றும் வெளிநாட்டு உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்களான டானிடா திட்டம், சிடா திட்டம், ஐரோப்பியப் பொருளாதாரக் கழகத் திட்டங்கள் மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டங்களும், அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும், ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**4.4.** இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, மார்ச்–2006 வரை பல்வேறு துறைகளைச் சார்ந்த 558 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2006 செப்டம்பர் 1]

**4.5** எந்தெந்தத் திட்டங்களை மதிப்பீடு செய்ய எடுத்துக்கொள்ளலாம் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளின்மீது மேற்கொள்ளப்பட வேண்டிய மேல் நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்து முடிவெடுக்கவும் மாநில மதிப்பீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது திருத்தியமைக்கப்பட்ட இக்குழு, வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டும், மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறை இயக்குநரை உறுப்பினர்–கூட்டுநராகக் கொண்டும் இயங்கி வருகிறது.

### 4.6 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்:

ரூ.8.86 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# இணைப்பு III

(71 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

1. இம்மானியக் கோரிக்கையில் பின்வரும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:-

| | | |
|---|---|---|
| | | (ரூபாய்) |
| 2071. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 5,676,09,90,000 |
| 2235. | சமூகப் பாதுகாப்பும் நலனும் -<br>60. ஏனைய சமூகப் பாதுகாப்பு, மற்றும் நலத் திட்டங்கள் | 11,61,85,000 |
| | மொத்தம் | 5,687,71,75,000 |

2. இந்த மானியக் கோரிக்கையின்கீழ் இடம் பெறும் முக்கியமான செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும். இந்த மாநிலத்தில், 31-3-2006 ஆம் நாள் நிலவரப்படி, சுமார் 5,60,166 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் மற்றும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் | 2,91,230 |
| 2. | ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 65,458 |
| 3. | அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 1,26,888 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 27,162 |
| 5. | ஓய்வூதியம் பெறும் ஏனைய வகையினர் | 49,428 |
| | மொத்தம் | 5,60,166 |







## 3. ஓய்வூதியம்:

i. அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் ஆவார். 31-7-2006 வரை அரசுப் பணியாளர்கள், ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர், கடைசி 10 மாத பணிக் கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம கணக்கிடப்பட்டது. மேலும் உயரளவாக 33 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டது. 33 ஆண்டுகளுக்குக் குறைவான தகுதிப் பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

ii. 31-7-2006 முதல் முழு ஓய்வூதியம் பெற அதிகப்படியான பணிக் காலம் 33 ஆண்டுகளாக இருந்ததை 30 ஆண்டுகளாகக் குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அரசுப் பணியாளர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாத பணிக் கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம், இதில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் ஓய்வூதியம் 31-7-2006 முதல் கணக்கிடப்படுகிறது.

iii. அரசு 1-1-2006 முதல் 50 சதவீதம் அகவிலைப் படியை அகவிலை ஓய்வூதியம்/அகவிலை குடும்ப ஓய்வூதியமாக அனுமதித்து ஆணையிட்டுள்ளது.

iv. குறைந்த அளவு ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,275.

## 4. பணிக்கொடை:

### (i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறு மாத காலப் பணிக்கும் ½ மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது, ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுக்காலப் பணிக்கொடையுடன் சேர்த்து ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற மொட்டு மொத்தத் தொகையாகும்.

[2006 செப்டம்பர் 1

### (ii) இறப்புப் பணிக்கொடை:

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:–

| பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபது ஆண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரை மாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை எந்த இனத்திலும் ரூ.3.50 இலட்சத்திற்கு மேற்படக்கூடாது |

### (iii) ஓய்வுக்காலப் பணிக்கொடை:

ஒருவர் ஐந்தாண்டும், அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் 16½ மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுக்காலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுக்காலப் பணிக்கொடையின் உச்சவரம்பை 1-1-1996-லிருந்து ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.



2006 செப்டம்பர் 1]

### 5. குடும்ப ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போது அல்லது ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், குடும்ப ஓய்வூதியம், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு, அவர் இறந்த பின்னர் 7 ஆண்டுகள் வரை வழங்கப்படுகிறது. அதன் பின்னர் குடும்ப ஓய்வூதியம், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும்.

ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், ஓய்வு பெற்ற பிறகு இறந்து விடும் நேர்வுகளில் 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றி இருப்பவர்களின் குடும்பங்களுக்கும் குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மற்றபடி ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவர் அல்லர்.

விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு, அவர், மறுமணம் செய்துகொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில், இதில் எது முந்தியதோ அது வரையில் அவருக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ, இதில் எது முந்தியதோ அது வரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும், அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம்

குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ, அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம், மாதமொன்றுக்கு ரூபாய் 1,275 ஆகும்.

## 6. கருணைத் தொகை வழங்குதல்:

வருங்கால வைப்பு நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தி இறந்துவிட்ட பணியாளர்/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்ற/பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியில்லாத நபர்களுக்கும் 1-11-1997 முதல் ரூ.31 அகவிலைப் படியுடன் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை ரூபாய் 150–லிருந்து ரூபாய் 605–ஆக உயர்த்தி, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இவர்கள் 1-1-1998 முதற்கொண்டு வழங்கப்படும் அகவிலைப் படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

## 7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல்:

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் 33½ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையின் ஒரு பகுதியை ஒட்டு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள் விண்ணப்பித்திருந்தால், மருத்துவப் பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக்கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின், அவ்வாறு ஓய்வு பெற்றவர், அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால், அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு



ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதி அளித்துள்ளது.

## 8. ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள்:

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவு 240 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பை, ஒப்படைப்புச் செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும்போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான விடுப்பை (அதிகபட்சம் 180 நாட்கள், இது 90 நாட்களாகக் கொள்ளப்படும்) முழுச் சம்பளத்திற்கு ஒப்படை செய்து ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் சொந்த அலுவல்கள் குறித்த அரைச் சம்பள விடுப்பினையும் காசாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் அகவிலை ஊதியமும், அகவிலைப் படியும், வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப் படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப் படி வழங்கப்படுகிறது.

## 9. ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்:

### (அ) அகவிலைப் படி

(i) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோலவே அகவிலைப் படி வழங்கப்படுகிறது.

(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப் படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

### (ஆ) மருத்துவப் படி

ஓய்வூதியம் பெறுவோருக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.50/– மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அகவிலைப் படி மற்றும் மருத்துவப் படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**10. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, ஓய்வூதியம் பெறுவோருக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை/அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக அந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஓய்வூதியர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ரூ.10/- பிடித்தம் செய்யப்படுகின்றது. ஓய்வூதியர் மேற்கொள்ளும் மொத்த மருத்துவச் செலவினத்தில் 75 விழுக்காடோ அல்லது ரூ. 50,000/- இவற்றில் எது குறைவோ, அத்தொகை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

**11. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு, ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்றதொரு திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கி, செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர்தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பிடித்தம் ஒரே சீராக ரூ.70 செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூபாய் 25,000/- வழங்கப்படும்.

**12. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவதுபோன்றே ஓய்வுக்காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன



**13. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:**

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக் காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு | மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் சதவீதம் |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 1996-97 | 1070.15 | 8.95 |
| 1997-98 | 1286.77 | 9.47 |
| 1998-99 | 1691.42 | 11.45 |
| 1999-2000 | 2668.41 | 16.46 |
| 2000-2001 | 2927.24 | 15.48 |
| 2001-2002 | 3050.48 | 16.07 |
| 2002-2003 | 3488.20 | 16.86 |
| 2003-2004 | 3279.96* | 13.84 |
| 2004-2005 | 3921.05 | 13.78 |
| 2005-2006 திருத்த மதிப்பீடு | 4693.52 | 14.26 |
| 2006-2007 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 5687.72 | 14.68 |

*நிலுவைத் தொகை வழங்குவது தள்ளி வைக்கப்பட்டதன் காரணமாகக் குறைந்தளவு செலவினம்.

**14. பங்களிப்புத் தொகையுடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்:**

1-4-2003 ஆம் நாளுக்குப் பின்னர் பணியில் சேர்ந்துள்ள புதிய பணியாளர்கள், பங்களிப்புத் தொகையுடன்கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 1-4-2003-க்குப் பின்னர் பணியில் புதியதாகப் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற்குச் சந்தாவாக அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் அதற்குச் சமமான அளவு அரசு பங்குத் தொகை செலுத்துகின்றது. மாநிலக் கணக்காயர் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளைத் தற்போது

நிர்வகித்துக்கொண்டுள்ளார். ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும்
வளர்ச்சி ஆணையம் (PFRDA) முழுமையாகச் செயல்படத்
தொடங்கியதும், இந்தத் தொகைகள் அதற்கு மாற்றப்படும்.

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய**
**இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய**
**பயன்கள்:**

15. நமது நாடு விடுதலை பெறுவதற்காக, விடுதலைப் போராட்டத்தில்
கலந்துகொண்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த தியாகிகள்
மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்கள் பயனடையும் வகையிலும்
மற்றும் அவர்களது நலனுக்காகவும் விடுதலைப் போராட்ட வீரர்
ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி
அளித்தல், வாரிசுகளுக்குக் கல்வி நிலையங்களில் சிறப்பு இட ஒதுக்கீடு,
வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை
அளித்தல் போன்ற பல திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி
வருகின்றது.

16. 1–10–1966 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு
விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டத்தின்படி தேசிய
விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டதற்காக மூன்று மாத
காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும், காவல்
கைதிகளாக இருந்தவர்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தில்
ஈடுபட்டபோது மரணமடைந்தவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும்,
காவலர் தடியடியிலும், கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை
உற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத்
தகுதியுடையவர்களாவர். மேலும், இந்திய தேசிய இராணுவத்தில்
பணியாற்றியவர்களும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு
கொண்டவர்களும், மதுரை சதித் திட்ட வழக்கில் சிறைத் தண்டனை
பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத்
தகுதியுடையவர்கள் என பின்னால் அறிவிக்கப்பட்டது. மேலும்,
சுதந்திரப் போராட்டத்தின்போது கைது வாரன்ட் பிறப்பிக்கப்பட்டு,
தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு
கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப்
பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக
நீதிமன்ற, அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப்
போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும்
அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட
தகுதிகளில் ஒன்றான மூன்று மாத சிறைவாசம் என்பது, 1–4–1980



முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம்
பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்சவரம்பு 11–3–1983
முதல் நீக்கப்பட்டது.

17. சிறைத் துன்பம் அனுபவித்ததை நிரூபிக்கும்பொருட்டு, அதற்கு
ஆதாரமாக நீதிமன்ற ஆணை அல்லது சிறைத் துறை ஆவணத்தின்
உரிய பகுதியின் நகலை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டியது
மிகவும் அவசியமானதாகும். மேற்படி ஆவணங்கள் கிடைக்காத
நிலையில், 1980 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்பு செயல்பட்ட
சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் சக கைதிச் சான்றிதழ்கள்
மனுதாரர்கள் சிறை தண்டனை அனுபவித்தமைக்கு ஆதாரமாக
1–4–1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த முறையில் சில
குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால்,
சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படும் சக கைதிச் சான்றினை
ஏற்கும் முறை 1988 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பொதுத்
துறையின் 16–11–1988 நாளிட்ட அரசு ஆணையின்படி மாநிலம்
முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சான்றாளர்களுள்
எவரேனும் இருவரிடமிருந்து சக கைதிச் சான்று பெற்று
விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. பின்பு, இந்த முறையிலும்
சிரமங்கள் உள்ளன என அரசின் கவனத்திற்குக் கொண்டு
வரப்பட்டதால், 7–2–1996 ஆம் நாளிட்ட பொதுத் துறையின் அரசு
ஆணையின்படி மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட
வருவாய் அதிகாரியைத் துணைத் தலைவராகவும், மூன்று பிரபலத்
தியாகிகளை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபலத் தியாகிகளை
சான்றளிப்பவர்களாகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக்
குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின்
உறுப்பினர்களாகவும், சான்றளிப்பவர்களாகவும் உள்ள தியாகிகள், மூல
அரசு ஆவணங்களின் அடிப்படையில் விடுதலைப் போராட்ட வீரர்
ஓய்வூதியம் பெற்றவராக இருத்தல் வேண்டும். விடுதலைப் போராட்ட
ஓய்வூதியம் கோருபவர் தாம் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில்
18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட
படிவத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு ஓய்வூதியம் கோரி
விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். அரசால் வகுக்கப்பட்ட
நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் இந்த
விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

18. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம்
அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம்

இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்கும் மாநில அரசு ஓய்வூதியம் ரூ.500/– மாதந்தோறும் வழங்கப்படுகின்றது.

19. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது அவரது மனைவிக்கு/கணவருக்கு, உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மன வளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த ஓய்வூதியத் தொகை அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

20. நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்குகொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்குச் சிறப்பு ஓய்வூதியம், அவ்வப்போது அரசால் வழங்கப்படுகிறது. அந்த வகையில், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் 214 பேர்களுக்கும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வாரிசுதாரர்கள் 7 பேர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மாமன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வாரிசுதாரர்கள் 82 பேர்களுக்கும், அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 500/– வீதம் அரசியல் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

21. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்**

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.15/– வீதம் மருத்துவப் படி வழங்கப்படுகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்களுக்கு அரசு



மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

**(ஆ) கல்விச் சலுகைகள்**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்குக் கல்விக் கட்டணச் சலுகையும், படிப்பு உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்தியருக்குத் தொழில் கல்லூரிகள், பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் இதர சிறப்புக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) வீட்டு வசதி**

தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/மனைகளில்/அடுக்கு மாடி வீடுகளில் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) போக்குவரத்து வசதி**

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய வாரிசுகளுக்கும் அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(உ) ஈமச் சடங்குச் செலவு**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போக நேரிடும்போது, அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகை ரூ.2,000/– உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும்

பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வட்டாட்சியருக்குக் குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால், மறைந்தவரின் உடல்மீது அரசு சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

### (ஊ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர்ப் பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகள்/மொழிக் காவலர்கள் ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## 22. மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்:

மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-8-1972 முதல் செயலில் உள்ளது. இதன்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

(அ) விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்குகொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறைத் துன்பம் அனுபவித்தவர்கள் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார்கள். அவர்கள் தங்களது சிறைத் துன்பத்திற்கு ஆதாரமாக சிறைச் சான்று சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள சிறைச் சான்று இல்லாதபட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் இல்லை என்பதற்குரிய சான்றும், தான் சிறையிலிருந்த அதே காலத்தில் தன்னுடன் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் சிறைத் துன்பம் அனுபவித்தவரும், மைய அரசு ஓய்வூதியம் பெறுபவருமாகிய இருவரிடமிருந்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள சக கைதிச் சான்றிதழ் படிவத்தில் பெறப்பட்ட இரு சக கைதிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் (அல்லது) தற்போதுள்ள அல்லது, முன்னாள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் ஒருவரிடமிருந்து சான்றாளரின் சிறைத் துன்பக் காலத்தையும். மனுதாரரின் சிறைத் துன்பக் காலத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு சக கைதிச் சான்றிதழ், குறிப்பிட்ட படிவத்தில் பெற வேண்டும்.



(ஆ) ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்குச் சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(இ) ஓய்வூதியம் பெறுவதற்கான ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.5,000/- என்பது 1-8-1980 முதல் நீக்கப்பட்டது.

(ஈ) ஆறு மாதம் அல்லது அதற்கும் மேலாகத் தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப்பெறாதவர்கள், இரண்டாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட படிவத்தில் சக கைதிச் சான்றிதழ் பெற்று தக்க ஆதாரமாகச் சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்படி அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

(உ) விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு 10 சவுக்கடிகள்/ கசையடி அல்லது பிரம்படியைத் தண்டனையாகப் பெற்று ஒருவர் துன்பப்பட்டிருந்தால், அது ஆறு மாத காலத்திற்கு சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(ஊ) மேலும், இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலோ சிறைத் துன்பம்/காவல் துன்பம் அனுபவித்த முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களும் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

(எ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு மூன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர் இறக்க நேரிடும்பொழுது அவர் பெற்று வந்த மத்திய அரசு மாதாந்திர ஓய்வூதியத் தொகையுடன் மாநில அரசின் பங்கான ரூபாய் 500/-ம் அவரது சட்டப்படியான வாரிசுதாரர்களுக்குத் தொடர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

(ஐ) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியதாரர்களுக்கு (Swatantrata Sainik Samman Pensioners) 15-8-2005 முதல் ஓய்வூதியத்துடன் 50 சதவீதம் அகவிலைப் படியும் வழங்கப்பட்டு வருகிறது.

23. தற்போது மாநில/மத்திய அரசுகளின் ஓய்வூதியங்களைப் பெறும் தமிழ்நாட்டிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் எண்ணிக்கை கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000/- +15 மருத்துவப் படி) | 1,112 |
| 2. | மாநில அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ.1,500/- + 15/- மருத்துவப் படி) | 2,114 |
| 3. | மைய அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.4,000/- +2,000/- அகவிலைப் படி + 15/- மருத்துவப் படி) | 878 |
| 4. | மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ.4,000/- +2,000/- அகவிலைப் படி +15/- மருத்துவப் படி) | 1,593 |
| 5. | மைய அரசு ஓய்வூதியத்துடன் மாநில அரசின் ஓய்வூதியமான ரூ.500/-ஐப் பெறும் ஓய்வூதியதாரரின் எண்ணிக்கை | 2,471 |
| 6. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (ரூ.500/- மாதம் ஒன்றுக்கு) | 7 |
| 7. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம்) | 214 |
| 8. | முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம்) | 82 |

24. இத்திட்டங்களுக்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.11,30,85,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## இணைப்பு - 1

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்:

| வ. எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 1-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-8-1972 முதல் | 75/- |
| 3. | 1-4-1979 முதல் | 100/- |
| 4. | 25-1-1981 முதல் | 150/- |
| 5. | 10-6-1986 முதல் | 250/- |
| 6. | 1-8-1989 முதல் | 350/- |
| 7. | 1-1-1991 முதல் | 400/- |
| 8. | 1-8-1992 முதல் | 1,000/- |
| 9. | 1-9-1995 முதல் | 1,500/- |
| 10. | 15-8-1997 முதல் | 3,000/- |

[2006 செப்டம்பர் 1

## இணைப்பு - 2

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை விவரம்:

| வ. எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 1-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-8-1972 முதல் | 75/- |
| 3. | 1-4-1979 முதல் | 100/- |
| 4. | 25-1-1981 முதல் | 150/- |
| 5. | 10-6-1986 முதல் | 250/- |
| 6. | 1-8-1989 முதல் | 350/- |
| 7. | 1-1-1991 முதல் | 400/- |
| 8. | 1-8-1992 முதல் | 500/- |
| 9. | 1-9-1995 முதல் | 750/- |
| 10. | 15-8-1997 முதல் | 1,500/- |



2006 செப்டம்பர் 1]

## இணைப்பு - 3

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு (சுதந்திர சைனிக் சம்மான் ஓய்வூதியதாரர்கள்) மைய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்:

| வ. எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 15-8-1972 முதல் | 200/- |
| 2. | 1-8-1980 முதல் | 300/- |
| 3. | 1-6-1985 முதல் | 500/- |
| 4. | 14-11-1988 முதல் | 750/- |
| 5. | 12-8-1992 முதல் | 1,000/- |
| 6. | 2-10-1994 முதல் | 1,500/- |
| 7. | 15-8-1997 முதல் | 3,000/- |
| 8. | 15-8-2005 முதல் | 6,000/- |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227436
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.